T.2650

முக்கூடற் பள்ளு

மு. அருணசலம்

முக்கூடற் பள்ளு

[திருக்கோட்டியூர்ப் பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, திருநீலகண்டன் பள்ளு ஆகியவற்றுடன்]

டி. கே. சிதம்பரநாத முதலியார்
எழுதிய முன்னுரையோடு

மு. அருணாசலம்
பதிப்பித்தது

இரண்டாம் பதிப்பு

தமிழ் நூலகம்
தியாகராயநகர், சென்னை
1949

முதற் பதிப்பு : 20 - 9 - 1940
இரண்டாம் பதிப்பு : 14 - 1 - 1949, பொங்கல் திருநாள்

விலை ரூபா இரண்டேகால்
கலிக்கா ரூபா மூன்று

தமிழ் நூலகம்
3, சாம்பசிவம் தெரு, தியாகராயநகர்
சென்னை 17

மு. அருணசலம்
கீழமூங்கிலடி, சிதம்பரம்

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை.

முகவுரை

முதற் பதிப்பு (20-9-1940)

* * * *

முக்கூடற்பள்ளு நாடகம் 1886, 1894 முதலிய பல ஆண்டுகளில் அச்சிடப்பட்டிருக்கிறது ; ஆனால் ஒவ்வொரு பதிப்பிலும் நூலைப் படிக்க இயலாதவாறு பிழைகள் மலிந்து காணப்படும். முக்கூடற் பள்ளு இதுவரை அச்சாகவில்லை. இதிலுள்ள பாடல்களை அங்கங்கே சிலர் சொல்லியுங் கேட்டும் வந்தபோதிலும், நூல் அச்சாகாமலிருந்தது ஒரு பெருங் குறையே. பல ஏட்டுப் பிரதிகளையும் காகிதப் பிரதிகளையுங் கொண்டு பரிசோதித்து இந்நூல் இப்போது வெளியிடப்படுகிறது. நூலிறுதியில் அரும்பொருளகராதி யொன்றும் செய்யுள் முதற்குறிப்பகராதி யொன்றும் சேர்க்கப் பெற்றுள்ளன.

இந்நூற் பரிசோதனைக்கு ராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளையவர்கள் நான்கு ஓலைப் பிரதிகள் தந்தார்கள் ; அவர்களுக்குரியதொன்றும், அரசாங்கத் தொன்னூல் நிலையப் பிரதி யொன்றும், பாளையங்கோட்டை காலஞ்சென்ற சி. வீரபாகுப் பிள்ளையவர்கள் பிரதி இரண்டும் ஆக நான்கு. இவையன்றி, அவர்கள் வீரபாகுப் பிள்ளையின் காகிதப் பிரதியையும் பெற்றுத் தந்தார்கள் ; இது கோவிற்பட்டி, சீவலப்பேரி, கொம்பங்கிபுரம், விசயநாராயணம், முன்னீர்ப் பள்ளம் என்னும் ஐந்திடங்களிலுள்ள ஏடுகளோடு ஒப்பு நோக்கிப் பாடபேதங்கள் குறிக்கப்பெற்றிருந்தது.

இருளப்ப சண்முகசுந்தரம் என்பவர் எழுதிய மூன்று காகிதப் பிரதிகளை ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் வரவழைத்துத் தந்தார்கள். நூல் அச்சாகி வந்தபோது, ஸ்ரீ வே. வேங்கட

ராஜு ரெட்டியாரவர்கள் தம் ஞாபகத்திலிருந்த பாடத்தைக் கொண்டு சில திருத்தங்களைத் தெரிவித்துதவினார்கள். இவ்வாசிரியர்கள் செய்த உதவிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலுக்கு வேண்டிய ஏட்டுப் பிரதிகளைத் தந்தும், தமக்குரிய சிரமத்தைச் சிறிதும் பாராட்டாமல் நூல் முழுவதையும் பரிசோதிப்பதில் எனக்கு எல்லாவிதத்திலும் உதவி புரிந்தும் என்னை ஊக்கிவந்த ராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளையவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

முக்கூடல் சம்பந்தமான செய்திகளை அறிவதற்குத் திருநெல்வேலி ஜில்லா கெஜட்டியரும், இம்முன்னுரை எழுதுவதற்குக் குருகூர்ப்பள்ளின் பதிப்பாசிரியராகிய வையாபுரிப் பிள்ளையவர்கள் எழுதியுள்ள முன்னுரையும் பேருதவியா யிருந்தன.

என்னை இம்முயற்சியில் ஈடுபடச் செய்த பரம்பொருளின் திருவருளைச் சிந்தித்து வணங்குகின்றேன்.

இரண்டாம் பதிப்பு

இந்நூலின் முதற் பதிப்பு இரண்டாண்டுகளில் முழுமையும் செலவாகியும், காகிதக் கட்டுப்பாடு முதலான பல தடைகளால் இதுவரையில் இதை மீண்டும் வெளியிட இயலவில்லை. இப்போதும், போதுமான அவகாசமில்லாமல் பல வேலைகளில் நான் ஈடுபட்டுள்ள நிலையில்தான் இப்பதிப்பு வெளியாகிறது.

முதற் பதிப்பு வெளியானபின், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் செந்தமிழ் உதவிப் பத்திரிகாசிரியரான தி. கி. இராமானுஜையங்கார் அவர்கள், சங்கத்திலுள்ள ஏடுகளை வைத்து ஒப்புநோக்கி, பல திருத்தங்களைத் தெரிவித்தும், பொருளை விளக்கியும் உதவினார்கள். அவர்களுக்கு என் நன்றி உரியது.

முதற் பதிப்பைக் குறித்து டி.கே. சிதம்பரநாத முதலியாரவர்கள், கலைமகள் பத்திரிகையில் அழகான மதிப்புரை எழுதியிருந்தார்கள். இப்பள்ளின் இலக்கியச் சுவையை அனுபவிப்பதற்கு அவ்வுரை மிகவும் பயன்படும் என்று கருதி, அதை இங்கு நூலுக்குச் சிறப்புரையாக (கவியும் கூத்தும் - பக்கம் 49) சேர்த்திருக்கிறேன்.

முதற் பதிப்பிற் கண்ட பள்ளுப் பிரபந்தத்தின் வரலாறு, நூலைக் குறித்த ஆராய்ச்சி முதலியன இதன்பின் தனியே இரு பகுதிகளாகப் பதிப்பித்திருக்கிறேன். முதற்பதிப்பினும் பார்க்க இப்பகுதிகளில் அதிகமான செய்திகள் புதிதாக ஆய்ந்தும் அறிந்தும் சேர்க்கப் பெற்றுள்ளன. அப்பதிப்பின் முன்னுரையிற் கண்ட 'பிற பள்ளு நூல்கள்' என்ற பகுதி, இங்கு அதனினும் பல மடங்கு விரிவாக்கப்பெற்று, முதல் அனுபந்தமாக நூலிறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளது.

முழுமையும் இப்போது கிடைக்காத நூல்களான சீகாழிப்பள்ளு, குற்றாலப் பள்ளு முதலியவற்றின் பாடல்கள் சில, கிடைத்தவரை இரண்டாம் அனுபந்தத்தில் சேர்த்திருக்கிறேன். இப்படிச் சேர்த்தவற்றுள், மன்னார் மோகனப் பள்ளு, திருக்கோட்டியூர்ப் பள்ளேசல், திருநீலகண்டன் பள்ளு என்ற மூன்றும் சிறப்பாய்க் கூறத்தக்கவை.

முதற் பதிப்பில், அச்சாகாதது என்று குறிப்பிட்டிருந்த திருமலை முருகன் பள்ளு பின்னால் 1944இல் என்னால் பதிப்பிக்கப்பெற்றது. சேண்பகராமன் பள்ளு, வையாபுரிப் பள்ளு என்பன பிறர் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்நூலிறுதியில், முக்கூடற் பள்ளு நாடகத்தில் கண்ட இராக தாளங்களின் அட்டவணை, பழமொழியகராதி என்பவை புதிதாய்த் தொகுத்துச் சேர்க்கப் பெற்றன.

சர்வதாரி
பொங்கல் தினம்

மு. அருணாசலம்

பொருளடக்கம்

பள்ளுப் பிரபந்த வரலாறு

க.

தமிழ் மொழியிலுள்ள பழைய இலக்கியங்களுள் பெரும்பாலானவை ஆசிரியருடைய நிறைந்த கல்வியையும் சிறந்த புலமையையும் காட்டுவனவாயிருக்கின்றன; கல்வி யறிவு மிக்கோருக்கே இவை பயன்படக்கூடியன. அதிகக் கல்வி யறிவு பெறாத பாமரமக்கள் அறிந்து அனுபவிக்கத் தக்க பண்டை இலக்கியம் மிகவும் குறைவு. பெருங்காப்பியம் செய்த நல்லாசிரியர் பலர் இதை உணர்ந்திருக்கிறார்கள்; உணர்ந்து, தங்கள் காப்பியங்களில், பாமர மக்கள் படித்துங் கேட்டும் அறிந்து பாடவும் ஆடவும் உரியனவான எளிமைமிக்க பாடல்கள் இயற்றுவதிலும் ஆர்வம் காட்டி வந்திருக்கிறார்கள். தனிப் பாடல்களாலான சங்க இலக்கியங்களிலேயுங்கூட இத்தகைய போக்கு ஒன்றை நாம் காணமுடிகிறது.

எளிமைத் தன்மை - சங்க இலக்கியம்

பாமர மக்கள் அறியவும் அனுபவிக்கவும் உதவியாயிருப்பது இசை. சங்கப் பாடல்களுள் இன்று நமக்குக் கிடைப்பவற்றுள், பரிபாடல்களும் கலிப்பாக்களும் இசையிலமைந்தவை. பரிபாடலின் இசையை நாம் நெடுங்காலம் முன்னமேயே கைவிட்டு விட்டபோதிலும், கலித்தாழிசைகளை இசையுடன் பாடும் திறன் தொடர்ந்து இருந்துவருகிறது. பாடல்களின் எளிமையும் சொல்லடுக்கும் மடக்கும் இவ்வகை அனுபவத்துக்குப் பெருந்துணையாயிருக்கிறதென்று கருதலாம். எடுத்துக்காட்டாக, பின்வரும் பாலைக் கலிப் பாடலைக் கூறலாம் (கூ):

> பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
> மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
> நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.
>
> சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
> நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
> தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

காப்பியங்கள்

இவை போலவே, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும் மடக்கியும் வரும் பாடல்களை, சிலப்பதிகாரம் முதலான காப்பியங்களிலும் மிகுதியாய்க் காண இடமுண்டு :

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

இவை, ஆய்ச்சியர் குரவையுட் கண்ட பாடல்கள். இறந்து போன காப்பியமாகிய வளையாபதியிலும் இத்தகைய பாடல்கள் இருந்தன என்று பின்வரும் மேற்கோளால் விளங்கும் (யாப்பருங்கல விருத்தியுரை) :

நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே !

கோலங் குயின்ற குழலும் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியில் வேம்வாழி நெஞ்சே !

காலக் கனலெரியில் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே !

யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோளாகிய பின்வரும் பாடலும் இங்குக் கருதத்தகும் :

ஆதியங் கடவுளை அருமறை யருகனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் திருவடி தொழுதனம்.

காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பினை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்குதும்.

ஆரருள் பயந்தனை ஆழ்துயர் தவிர்த்தனை
ஓரருள் ஆழியை உலகுடை யொருவனை
சீரருள் மொழியைநின் திருவடி தொழுதனம்.

இப்பாடல் எந்நூலைச் சார்ந்தது என்பது அறியக்கூட வில்லை.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் பெருங்கவிஞராக வாழ்ந்து அனேக நூல்கள் இயற்றியவர் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். கடின நடையில் பாடல் இயற்றுவதில் அவர் பிரசித்தி பெற்றவர்; ஆயினும் அவருங்கூட, மேற்குறித்த பாடல்களில் அமைந்துள்ள எளிமைத்தன்மை பொருந்திய பாடல்கள் பல, திருநாகைக் காரோணப் புராணம் என்ற தம் நூலில் இயற்றியிருக்கிறார் என்பது அறியத்தக்கது (அகத்தீசப்படலம், ௩௪):

ஆய கருந்தடங்கண் அம்மை திருப்பாதம்
பாய பிறவிப் பரவை கடப்பதற்கு
நேய மலியும் நெடுங்கலமே போலும்.

ஆன்ற கருந்தடங்கண் அம்மை திருப்பாதம்
ஏன்ற பிறவி யிருங்காடு மாய்ப்பதற்குக்
கான்ற சுடர்வைக் கணிச்சியே போலும்.

அன்பார் கருந்தடங்கண் அம்மை திருப்பாதம்
வன்பார் பிறவித் துணங்கறல் மாய்த்திடுதற்கு
இன்பார் உதய இரவியே போலும்.

எளிய சொற்கள், எளிய சந்தம், ஒரே பொருளை மடக்கிச் சொல்லுதல், அடிமடக்கு, இசை ஆகியவையே இப்பாடல்

களை ஏனைய பாடல்களினின்றும் வேறு பிரித்துக் காட்டும் அம்சங்கள்.

சிலப்பதிகாரத்தில் இத்தகைய பாடல்கள் மிகப் பலவாகக் காணலாம். கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை ஆகிய பகுதிகளில் தனிப் பாடலாயும், மூன்றடுக்கியும் அனேகம் பாடல்கள் இங்ஙனம் வந்துள்ளன. வந்துள்ள வரிப் பாடல்களில் கண்ட இவ்விதச் சிறப்பியல்புகளைப் பின்வந்த ஆசிரியர் தம் காப்பியங்களிலும் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

நான்கடியின் மிக்கு ஈற்றடி மடக்கி ஐந்தாமடியாக வந்த கொச்சக ஒருபோகு என்பது முதலாவது :

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே.

என்பது சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை ; மூன்று பாடல்கள் இங்குள்ளன.

வேயே திரள்மென்றோள் வில்லே கொடும்புருவம்
வாயே வளர்பவளம் மாந்தளிரே மாமேனி
நோயே முலைசுமப்ப தென்றூர்க் கருகிருந்தார்
ஏயே இவளொருத்தி பேடியோ என்றார்
எரிமணிப்பூண் மேகலையாள் பேடியோ என்றார்.

என்பது சீவக சிந்தாமணி (௬௫௬).

கவிராட்சதர் என்று பெயர் பெற்றிருந்த கச்சியப்ப முனிவரும் (18 ஆம் நூற்றாண்டின் இறுதி) திருத்தணிகைப் புராணத்தில் இவ்விதம் சில பாடல்கள் பாடியிருக்கிறார் (நாரணனருள்பெறு படலம் ௧௬) :

நாடாது வேட்ட நனிவழங்கும் வள்ளன்மை
தாடாமு நர்பால் தகைக்கும் கருணையான்

ஓடாத தானை உருமுச் சினச்சூரைக்
கோடாப்போர் வெங்களத்துக் கொன்ற இறை போலும்
குருயானைத் தாழ்த்த குருநாதன் போலும்.

காலத்தால் மிகவும் பிற்பட்ட திருநாகைக் காரோணப் புராண ஆசிரியர், 'தலையே நீ வணங்காய்' என்ற அப்பர் திருவங்கமாலையின் கருத்தை அமைத்து, மேற்குறித்த சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாடலின் யாப்பிலேயே, பதினொரு உறுப்புக்களுக்குப் பதினொரு பாடல்கள் செய்துள்ளார்; பின்வருவது ஒரு பாடல் :

அண்டத்தான் அவற்றினுக்கும் அப்பாலான் கனிந்த
முண்டத்தான் திருநெடுமால் முதுகெலும்பிற் கொண்ட
தண்டத்தான் வானுடர் தங்களுயிர் காத்த
கண்டத்தான் உருநோக்காக் கண்ணென்ன கண்ணே
காரோணன் உருநோக்காக் கண்ணென்ன கண்ணே.

இனி, இரண்டெதுகையுடைய பாடல்களும் சிலப்பதிகாரம் தொடங்கியுள்ள காப்பியங்களில் காணப்படுகின்றன

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணு பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தோ.

என்பது சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை.

அழல்நாறும் வெங்கதிரோன் நாண அலராது
நிழல்நாறும் மூர்த்தியாய் நின்றாயும் நீயே
நின்றாயும் நீயே நிறைபொருள் எல்லைக்கண்
சென்றாயும் வென்றாயும் நீயேவாழி திருமாலே.

என்பது சூளாமணி (தூதுவிடு சருக்கம் ௧௧௦).

வீங்கோத வண்ணன் விரைததும்பு பூம்பிண்டித்
தேங்கோத முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானைத்

தேவர் பெருமானைத் தேனார் மலர்சிதறி
நாவின் நவிற்றுதார் வீட்டுலகம் நண்ணாரே.

என்பது சீவக சிந்தாமணி கசஎச.

பேய்முலை வியன்ஞாலம் பூங்குருந்த மதவேழம்
வாய்மருப் பெழிலேறு வாட்கண்ணார் குரவைச்சீர்
உண்டானும் அளந்தானும் ஒசித்தானும் காத்தானும்
கொண்டானும் கொடுத்தானும்கொடியுவணத் தானரோ.

என்ற யாப்பருங்கலவிருத்தியுரை மேற்கோளும் காணத்தக்கது.

உ

சிலப்பதிகாரம், சூளாமணி, சிந்தாமணி, வளையாபதி முதலான காப்பியங்களில் மேற்காட்டியுள்ள வரிப்பாடல்கள் இசையோடு பாடுவதற்கென்றே அமைக்கப்பெற்றனவென்பது தெளிவாகிறது. இதன் பொருட்டே அவை எளிய நடையில் அமைந்துள்ளன; அடிமடக்கு, எதுகை மாற்றம், ஒரு பொருள்மேல் பல தாழிசைகள் அடுக்கி வருதல் என்ற தன்மைகள் இந்நோக்கத்துடனேயே பொருந்தியுள்ளன.

அருட் பாசுரங்கள்

இக்காப்பியங்களை விடுத்துப் பின்வந்த தமிழிலக்கியத்தை ஆராயும்போது, நாயன்மாரும் ஆழ்வாராதியரும் பாடிய அருட்பாசுரங்களில் இவ்வித 'வரிப்பாடல்' அமைப்புடைய பண்களை நாம் பார்க்கிறோம்.

தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனை
தலையே நீ வணங்காய்

என்பது அப்பர் பாடிய திருஅங்கமாலையின் முதற் பாடல். இதே யாப்பில், திருமங்கையாழ்வாரும்,

திருத்தாய் செம்போத்தே—திரு
மாமகள் தன்கணவன்

மருத்தார் தொல்புகழ் மாதவனை வரத்
திருத்தாய் செம்போத்தே

என்ற பதிகம் முழுமையும் பாடியுள்ளார். பெரியாழ்வார் திருமொழி முழுமையுமே இங்கு நாம் கூறிவரும் தன்மைகளுக்கு இலக்கியமாகும். பின்வரும் பாடல் ஓர் எடுத்துக்காட்டு:

பின்னை மணாளனைப் பேரிற் கிடந்தானை
முன்னை அமரர் முதல்தனி வித்தினை
என்னையு மெங்கள் குடிமுழு தாட்கொண்ட
மன்னனை வந்து குழல்வாராய் அக்காக்காய்
மாதவன் தன்னைக் குழல்வாராய் அக்காக்காய்.

எளிய மக்கள் வாழ்க்கையிலுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளையும் கூத்து ஆட்டம் முதலியவற்றையும் அவற்றுக்குரிய பாடல்களாகத் தங்கள் அருட்பாசுரங்களில் சேர்த்தமைத்துப் பாடிய திறன், பெரியாழ்வாருக்கும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகருக்கும் உரியது.

இந்த இயல்பமைந்த பிற்காலப் பாடல்களிற் குறிப்பிடத் தக்கவை, சித்தர் பாடல்களும் இராமலிங்க சுவாமி பாடல்களும்.

எளிய நடையிலமைந்த பாடல்கள் இசையுடன் சேரும்போது, சொற்கள் நெகிழ்ச்சி பெற்று, பழகிய சொற்களாதலினாலே, பாடல்களின் நயம் மிகுதியாகிறது. இசை, பொருள் உணர்வதிலுள்ள எளிமை என்ற இருவித இயல்புகளாலும், பாமரமக்கள் இப்பாடல்களைச் சுலபத்தில் கேட்டும் உணர்ந்தும் இன்புற முடிகிறது.

மேலும், இதற்கடுத்தபடியாக, இலக்கியச் சுவையை இவர்கள் அனுபவிக்குமாறு செய்வதற்கு, எளியமக்கள் வாழ்க்கையையே பொருளாய்க் கொண்ட கவிதையே சிறந்த சாதனம் என்றும் பண்டை நல்லாசிரியர் கண்டிருக்கிறார்கள். இளங்கோவடிகள் பாடிய சிலப்பதிகாரத்தில் கண்ட வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை என்ற பகுதிகளிலுள்ள வரிப்பாடல்களும் வாழ்த்துக்காதையிலுள்ள வரிப்

பாடல்களும் இவ்விலக்கணம் பொருந்தப்பெற்றவை. இப் பாடல்களின் பொருளுக்கேற்ப, இவற்றை முறையே வேட்டுவரும் ஆயரும் குறவரும் பாடி ஆடினார்கள் என்பதாக ஆசிரியர் அமைத்திருக்கிறார்.

ரு

மேலே ஆராய்ந்த காப்பியங்களிற் கண்ட இவ்வகை எளிய பாடல்கள், தனி வரிப்பாடல்களாக அமைந்துள்ளன; ஆனால் அந்நூல்களில் கதைப்போக்கு முழுமையுமே இவ்விதம் எளிய பாடல்களாக அமைந்துவிடவில்லை. பிந்திய அருட்பாசுரங்கள் இவ்விதம் அமைந்துள்ளன; ஆனால் இவை தனியான தோத்திரப்பாடல்களேயன்றி, கதை தழுவி வரவில்லை.

இடைக்காலம்

எனினும், இடைக்காலத்தில் இவ்விதம் கதை தழுவி வந்த இலக்கியங்களுள் எளிய பாடல்களில் அமைந்த சில இருந்தன என்று தெரியவருகிறது. இராசராச சோழன் காலத்தே தஞ்சைப் பெருங்கோயிலில் இராசராச நாடகம் என்ற நாடகம் இசையுடன் நடிக்கப்பெற்று வந்ததென்று சாசனங்களால் அறிகிறோம். இது அச்சோழன் வரலாற்றையும் கோயில் வரலாற்றையும் அவனுடைய போர்கள் வெற்றி என்பவற்றையும் கூறுவதாயிருக்கும். ஆனால் அந்நூல் இப்போது கிடைக்கவில்லை. அதேபோல, திருப்பாதிரிப்புலியூர் சம்பந்தமாகப் புலியூர் நாடகம் என்ற நூல் எழுந்திருந்தது. அதுவும் இப்போது கிடைக்கவில்லை.

நாடகம்

பிற்காலத்திலே, பாமரமக்கள் பாடி ஆடுவதற்கு ஏற்றனவாய், பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் என்ற மூவகைப் பிரபந்தங்கள் தோன்றலாயின. இவை தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கதைபோலமைத்துக் கூறுவன. பள்ளில், பள்ளர் பள்ளியரும் பண்ணைக்காரனும் பிரதான கதாபாத்திரங்கள்; குறவஞ்சியில், ஒரு தலைவியும் குறவனும் குறத்தியும்

பிற்காலம்

குறவனும் முக்கிய கதாபாத்திரங்கள்; நொண்டி நாடகத்தில் நொண்டியொருவனே தோன்றி நடிப்பன். 17ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு இப்பிரபந்தங்கள் மிகுந்த பிரசித்திபெற்று எங்கும் பரவலாயின. இந்நூற்றாண்டில் எழுந்த முக்கூடற் பள்ளும், 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திரிகூடராசப்பக் கவிராயர் செய்த குற்றாலக் குறவஞ்சியும் மதுர கவிராயர் செய்த திருக்கச்சூர் நொண்டி நாடகமும் மிக்க பிராபல்யமடைந்தன. இவற்றுள், பள்ளுப் பிரபந்தத்தின் பூர்வசரித்திரத்தை மட்டும் இங்கே சிறிது ஆராயலாம்.

வனப்பு - புலன்

நூல்களுக்குரிய வனப்பு எட்டு எனத் தொல்காப்பியம் செய்யுளியல் கூறுகிறது. இவற்றுள் புலன் என்பதும் ஒன்று. இதை விளக்கப் புகுந்த ஆசிரியர்,

> சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
> தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புலனென மொழிப புலனுணர்ந் தோரே (உ௩௩)

என்று கூறுகிறார். சேரி மொழியாவது 'பாடி மாற்றங்கள்'; தொழிலாளர், எளியோர் முதலிய மக்கள் பயிலும் வழக்குச் சொற்கள். 'வழக்கச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் விளங்குவது புலனென்னும் செய்யுளாம்' என்பது இளம்பூரணர் உரை. 'அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வனவென்பது கண்டுகொள்க' என இதற்கு உதாரணம் எழுதினார் பேராசிரியர். விளக்கத்தார் கூத்து முதலாயின இக்காலத்து இன்னவென்றே அறியவியலாது. எனினும், செய்யுள் வனப்பில் புலன் என்பது ஒன்று எனவும், பாமரமக்கள் வழங்கும் சொற்களால் ஆக்கப்பட்டு அவர்கள் ஆடியும் பாடியும் வரும் நாடகச் செய்யுளே அதற்கு இலக்கியம் எனவும் அவர் கூறுதலால், அவர் காலத்துக்கு முன்னே அவ்வகை நூல்கள் பல இருந்தன என்பது தெளியப்படும். பிற்காலத்தே நாமறிந்த அவ்வகை நூல்கள் மேற்சொன்ன மூவகைப் பிரபந்தங்கள் போல்வனவே.

நாடக இயல் பொருந்திப் பிற்காலத்தில் தோன்றிய பிரபந்த வகைகளில், பள்ளு, குறவஞ்சி என்ற இரண்டும் சிறப்பானவை. இவ்விரண்டினுள், சங்க இலக்கியங்களில் அகத்துறையில் வரும் 'வெறியயர்தல்' என்ற துறையும், பின்வந்த சலம்பகங்களில் இதை யொட்டி அமைந்த 'குறம்' என்ற உறுப்பும், ஒருவகையில் பிற்காலக் குறவஞ்சிப் பிரபந்தத்துக்குத் தோற்றுவாயாக அமைந்தனவென்று நாம் கருதலாம். இது போலவே, பள்ளுப் பிரபந்தத்துக்கும் ஏதேனுமொரு மூலம் இருந்திருத்தல் கூடும்; ஆனால் அப்படிப்பட்டதெதுவும் இன்று நமக்குத் தெரியவில்லை.

பள்ளு-தோற்றுவாய்

௪

பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை, இலக்கண விளக்கப்பாட்டியல் முதலான பல. இவற்றுள், பள்ளுப் பிரபந்தத்தின் பெயர் எங்கும் காணப்பெறவில்லை.

பன்னிரு பாட்டியலில், உழத்திப் பாட்டு என்ற பிரபந்த வகைக்குரிய இலக்கணம் அடியிற் கண்டவாறு வகுக்கப்பட்டிருக்கிறது :

புரவலற் கூறி யவன்வா ழியவென்று
அகல்வயல் தொழிலை யொருமை யுணர்ந்தனள்
எனவரும் ஈரைந்து உழத்திப் பாட்டே. (௩௩௩)

அரசனை வாழ்த்தி உழவுத்தொழிலைக் கூறும் பத்துப் பாட்டுக்கள் கொண்டது உழத்திப்பாட்டு என்று இது கூறுகிறது; 'உழத்தி' என்பதனால் இது பெண் பாடுவதாயிருக்கலாம். இது பள்ளுப் பிரபந்தத்தைக் குறிப்பதன்று. குறவஞ்சி குறத்திப் பாட்டு எனப் பெயர் பெற்றதுபோல, பள்ளு உழத்திப் பாட்டு எனப் பெயர் பெற்றிருக்கலா மாயினும், இவ்விலக்கணத்தால், உழத்திப் பாட்டு பள்ளினின்றும் வேறானது

உழத்திப் பாட்டு

என்பது தெளிவாகிறது. உழத்திப் பாட்டுக்கு இலக்கியம் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

மருத நிலத்து மக்கட்செய்தியைக் கூறவந்த இளங்கோ வடிகள்,

கருங்கை வினைஞரும் களமரும் கூடி ...
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோர் ஏர்மங் கலமும்,
அரிந்துகால் குவித்தோர் அரிகடா வுறுத்த
பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்

(நாடுகாண் காதை, 125, 134 - 137)

பாடினரென்று கூறுகிறார். 'ஏர்மங்கலம்' என்பது பொன்னேர் பூட்டிநின்ற உழவர் ஏரை வாழ்த்தி நன்மை விளையுமாறு பாடும் மங்கலப்பாட்டு. 'முகவைப் பாட்டு' என்பது பொலிபாடுதல்; அதாவது நெற்கதிரின் தாள்களை அரிந்து போட்ட உழவர் சூட்டைப் பரப்பிக் கடாவிடுங் காலத்தே பாடும் பாட்டு. இவை பயிர்த் தொழில் செய்யுங் காலத்தே, குறிப்பிட்ட செயல்கள் நிகழும்போது உழவர் பாடும் பாட்டுக்கள் என்று இப்போது தெரியவருகின்றன. இப்பாட்டுக்கள், உழவர் வாழ்க்கையையே பொருளாய்க் கொண்டுள்ளன வென்று திட்டமாய்க் கூறவியலாது.

சிலப்பதிகாரம்

அரங்கேற்றுகாதையுரையில், வரிப்பாட்டு எட்டு வகைப் படுமென்றும், இது பல்வரிக்கூத்தெனவும் பெயர் பெறுமென் றும் அடியார்க்குநல்லார் கூறுகிறார். மேலும், அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தலே வரியாகும் என்பர். பழைய மேற்கோட் செய்யுளொன்றன் மூலமாகப் பல்வரிக்கூத்துக்கள் எவையென் பதையும் மிக்க விரிவாகத் தெரிவிக்கிறார். பாம்பாட்டி, பறை, குரவை, அம்மனை, பந்து, கழங்காடல், பகடி, பகவதி, சாழல், உந்தி, அவலிடி, குணலை முதலியன இதன்கண் கூறப்பட்ட பல்வரிக்கூத்துட் சில. சித்தர் பாடல்களிலும் 'தத்துவராயர்

பாடுதுறையிலும் திருவாசகம் முதலியவற்றிலும் இக்கூத்துக் களை மனத்துட்கொண்டு அல்லது தழுவிச் செய்யப்பெற்ற இலக்கியங்களைக் காண்கிறோம். இப்பல்வரிக்கூத்துக்கள் அடியார்க்குநல்லார் காட்டும் மேற்கோளைச் செய்த ஆசிரியர் காலத்துக்கு முன்னே வழக்கிலிருந்தன என்பதில் ஐயமில்லை. 'ஐயனுக்குப் பாடும் பாட்டு ஆடும் படுபள்ளி' என்பனவும் அம் மேற்கோட் செய்யுளில் காணப்படுகின்றன. இவற்றுள், 'ஆடும் படுபள்ளி' என்பது பள்ளியரும் பள்ளரும் சேர்ந்து ஆடும் கூத்தெனக் கொள்ளலாம். இதற்குரிய பழைய இலக்கியங்களும் இலக்கணமும் இப்போது அறியமுடியவில்லை.

ரு

நவநீதப் பாட்டியல்

14ஆம் நூற்றாண்டில் நவநீத நடனார் என்பவர் இயற்றிய நவநீதப் பாட்டியல் என்ற நூலில் 44 பிரபந்த வகைகள் விளக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் பள்ளு காணப் படவில்லை. ஆனால், அப்பாட்டியலில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ள மிகைச் செய்யுட்கள் பல. இவற்றுள் நான்கு பாடல்கள் உழத்திப்பாட்டு இன்னதென்று விளக்கி, இது 'பள்ளும் என்பர்' என்று கூறுகின்றன ;

கடவுள் வணக்கம் உழத்திய ருங்குடும் பன்வரலொன்
றடைமுறை நாடு வளங்குயிற் கூமழைக் காங்குறியோர்ப்
படுமா றுவரற் சிறப்புட் டுறைத்தலை வன்வரற்கூப்
படுமவ னன்னுள் உரப்பல் வெளியாம்பண் ணைச்செயலே.

வினுச்சொல லாயர் வருவிக் கவரல் தகைமுதலாள்
தனுதுரை கேட்டுக் குடும்பன் கிடையிருந் தானெனவந்
தனற்றெருழுமாட்டப் புலம்பல்முற் பள்ளிகூழ் கொண்டுவரல்
சொனுனவள் மன்னித்தற் கேட்கவேண் டற்குமறுத்திடலே.

சூளவ னைமீட் பவனைப் பணிவித் துழவருழக்
காளை வெருட்பளை பாயப் புலம்பல் எழுந்துவித்தல்
ஆளத் தலைவற் குணர்த்தல் நடல்விளை செப்பம்செய்நெல்
நீள அளத்தல் முதற்பள்ளி கூவேசல் மூட்டவையே.

இவ்வம யங்களிற் பாட்டுத் தலைவன் பெருமையாங்காங்
கொவ்விய சிந்து விருத்தம் விரவி வரத்தொடர்பு
செவ்விதிற் பாடு மதுஉழத் திப்பாட்டு பள்ளுமென்பர்
நவ்வி எனக்கண் மடவீர் பிறவிதம் நாட்டுவரே.

கடவுள் வணக்கம் முதல் பள்ளியர் கூவேசல் வரையில் இதன்கண் சொல்லப்பட்ட பொருளமைப்பைக் கவனித்தால், இது முழுமையும் முக்கூடற்பள்ளின் பொருட்போக்கையே அமைத்துக்கொண்டிருக்கிறதென்பது விளங்கும். இம்மிகைப் பாடல்களைச் செய்தார் காலத்தில் பள்ளு என்ற பெயர் வழக்கு ஏற்பட்டுவிட்டது ; அதனால்தான் இவர் 'உழத்திப்பாட்டு பள்ளும் என்பர்' என்று கூறுகிறார். மற்றும் இவர் கூறுப வற்றுள் இங்கு நாம் கருதத்தக்கது, பள்ளுப்பாட்டு, சிந்தும் விருத்தமும் விரவிவரப் பாடப்பெறும் என்ற இவர் கூற்று.

அடுத்து நாம் ஆராயத்தக்க நூல், வீரமாமுனிவர் என்பார் தொகுத்த சதுரகராதி. இதனுள், தொகையகராதி என்ற பிரிவில் கூரு பிரபந்தங்களின் விளக்கம் கூறும் போது, உழத்திப்பாட்டு என்பதற்கு இவர் பின்வரும் இலக்கணம் எழுதுகிறார் :

சதுரகராதி

" கடவுள் வணக்கம், முறையே மூத்தபள்ளி இளையபள்ளி குடும்பன் வரவோடு அவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டுவளன், குயிற்கூக் கேட்டல், மழை வேண்டிக் கடவுட் பரவல், மழைக் குறியோர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்புக் காண்டல், இவற்றிற் கிடையிடை அகப்பொருட்டுறை யும் கூறிப் பண்ணைத்தலைவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையவளை அவன் உரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல் வினவல், அவன் அதுகூறல், ஆயரை வருவித்தல், அவர் வரல், அவர் பெருமைகூறல், மூத்தபள்ளி முறையீடு, குடும்பன் கிடையிருந்தான்போல வரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி அடிசிற் கொடுவரல், அவன் அவ ளோடு கூறல், அவன் அவளை மன்னித்தற் கேட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் ஆற்றல், அவள் அவனை மீட்கவேண்டிப் பண்ணைத்தலைவனைப் பரவல், விதை முதலிய வளம் கூறல், உழவர் உழல், காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளி

கள் புலம்பல், அவன் எழுந்து வித்தல், அதைப் பண்ணைத் தலைவர்க்கு அறிவித்தல், நாற்று நடல், விளைந்தபின் செப்பம் செயல், நெல் அளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் ஏசல், என இவ்வுறுப்புக்கள் உறப் பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்கு தோற்றச் சிந்தும் விருத்தமும் விரவி வர இவற்றாற் பாடுவது.''

இவ்விலக்கணத்தை ஆராயும்போது சில செய்திகள் வெளியாகின்றன. இவர் கூறுவது, பள்ளுப் பிரபந்தமே யன்றி, உழத்திப்பாட்டன்று. அன்றியும் இது மேற்குறிப் பிட்ட நவநீதப்பாட்டியல் மிகைப் பாடல்களின் பொழிப்புரை யாக அமைந்துள்ளது; சொல்லமைப்பும் பொருளமைப்பும் அதன் வழியே உள்ளன; பிழைகூட அதன் வழியே உள்ளது. ஏனெனில், இவரும் 'சிந்தும் விருத்தமும் விரவி' என்றார். ஆனால் பள்ளில் வருவது சிந்தும் கலிப்பாவுமேயன்றி, விருத்த மன்று. எனவே, இவர் கலிப்பாவுடைய முக்கூடற்பள்ளைப் பார்க்கவில்லை என்றும், நவநீதப் பாட்டியல் மிகைச் செய்யுட் களை மட்டுமே பார்த்தார் என்றும் நாம் முடிவுசெய்யலாம்.

மேலும், சதுரகராதி தொகுத்த காலம் கி. பி. 1732; முக்கூடற்பள்ளின் காலம் 1680 எனப் பின்னுள்ள ஆராய்ச்சி யால் விளங்கும். எனவே, நவநீதப்பாட்டியலின் மிகைச் செய்யுள் செய்தார் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட காலத் தில், உத்தேசம் 1700 இல் தம் பாடல்களைச் செய்தாராதல் வேண்டும்.

உழத்திப்பாட்டு, ஆடும்பள்ளி என்ற வழக்காறுகள், பாட்டும் கூத்துமாயமைந்துள்ள பள்ளுப் பிரபந்தம் பிற் காலத்தில் தோன்றுவதற்கு வழி செய்தன வோ என்று நாம்எண்ணவேண்டியிருக்கிறது.

பள்ளின் பெயர்

மிகப் பழைய காலத்தே உழவுத் தொழிலில் ஈடுபட்ட பள்ளர் பள்ளியர் வாழ்க்கையை யொட்டிய கூத்து வகைகள் பாட்டும் தாளமும் பொருந்தப் பாமர மக்களால் விரும்பி ஆடப்பட்டு வந்தன. இவ்வாட்டத்துக்கான பாட்டை அனுபவித்த கவிஞர் கள் இதற்கு இலக்கியநிலை தந்தபோது இது பள்ளுப் பிரபந்த மாகிவிட்டது என்று நாம் கருதலாம்.

இப்பிரபந்தத்தின் பெயரும் இக்கருத்தை வலியுறுத்தும். பள்ளுநாடகம், குறவஞ்சி நாடகம், நொண்டி நாடகம் என்பதே வழக்கு. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழும் இதனுள் விரவிவரும் என்ற கருத்துப்பட, 'பள் மூவகைத் தமிழ்' என்று ஆசிரியர் இதைக் கூறுவார்கள். 'பள்ளேசல்' என்று திருவாரூர்ப்பள்ளு கூறும்; 'பள்ளிசை' என்பது கண்ணுடையம்மை பள்ளு.

பள் என்ற சொல், உழவரில் ஒரு பிரிவாரைக் குறிப்பிடும் சாதிப் பெயராயிருப்பதோடு, ஒரு பண்ணுக்கும் பெயராகும். காளி முதலான தெய்வங்களுக்குப் பூசையிட்டுப் பலிபோடும்போது பாடப்படும் பண்வகை பள்ளு எனப் பெயர் பெறும்.

௬

உழத்திப்பாட்டு என்ற பெயரில் நவநீதப்பாட்டியலிலும் சதுரகராதியிலும் கூறப்பெற்றுள்ள இலக்கணத்துக்கு முழுமையும் பொருந்தாத ஒருவகைப் பிரபந்தம், மோகனப் பள்ளு என்ற பெயருடன் இருந்ததென்று தெரிகிறது. சோழநாட்டிலுள்ள இராசமன்னார் கோவிலில் எழுந்தருளிய இராசகோபாலப் பெருமாள்மீது பாடப்பெற்ற மன்னார் மோகனப்பள்ளு என்பது இதற்குத் தக்க உதாரணமாகும். இந்நூல் முழுமையும் ௪ ஆம் அனுபந்தத்தில் காணலாம் (பக்கம் 172). இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

மோகனப் பள்ளு

கிடைத்த பகுதியில் இதன் பாடல்கள் ௩௩ உள்ளன. முதல் இரண்டு பாடல்களும் காப்புச்செய்யுட்கள்; நூற்பெயர் 'மன்னார் மோகனப்பள்ளு' என்று இவை தெரிவிக்கின்றன; பின்வரும் பாடல்களிற் கூறப்பட்ட பொருள், முறையே ஆற்றுவெள்ள வரவு, மாட்டுவகை, விதைவகை, நடுகைச்சிந்து என்பன; முடிவில் இன்னும் சில பாட்டுக்கள் இருந்திருத்தல் கூடும். இப்பாட்டுக்கள் யாவும் ஒரேவகைச் சிந்து. எல்லாப் பாடல்களுமே 'பள்ளீரே' என்று முடிகின்றன. பாட்டுக்களின் சந்தமானது, முக்கூடற்பள்ளு முதலான

மற்றப் பள்ளுகளில் அதிகமாய்ப் பயிலும் சிந்தின் சந்தமாகவே யுள்ளது. இந்நூலில், பொதுப்பள்ளின் கதைப் போக்குக் குரிய சில தனி அங்கங்கள் உள்ளனவேயன்றி, மேல் இலக்கணங்களிற் கண்ட செய்திகள் முழுமையும் இல்லை.

அன்றியும், இந்நூலின் இறுதிப் பாட்டு, தஞ்சையை யாண்ட விசயராகவ நாயக்கர் பெயரைக் கூறுகிறது. 'பாராளும்' என்றதனால், அவர் காலத்தில் இது பாடப் பெற்றதெனக் கருதலாம். அவர் காலம் கி. பி. 1640 - 74. எனவே, மோகனப் பள்ளின் காலமும் இதுவே. இதைக் கொண்டு, இந்த நூலே பள்ளு வரிசையில் காலத்தால் மிகவும் முந்திய தென்று கருதலாம். ஆனால், இதன் பெயர் மோகனப் பள்ளு என்பதும், பிற்காலப் பள்ளுப் பிரபந்தங்களுக்கு இது தோற்றுவாய் செய்திருக்கலாமேயன்றி, அவற்றின் இலக்கணம் அல்லது விரிவு இதற்குப் பொருந்தாதென்பதும் அறியத்தக்கன. மக்கள் நாவில் வழங்கிய சாமானிய உழவுப் பாடல்களின் பொருட் போக்கை அப்படியே தழுவி இந்நூலாசிரியர் பாடல் செய்தாரென்று கூறுதல் பொருந்தும்; ஆனால், முற்கூறிய இலக்கண நூல்கள், கதைப் போக்கு அமைத்துப் பள்ளுக்கு இலக்கணம் வகுத்திருக்கின்றன. முக்கூடற் பள்ளு முதலான பிரபந்தங்களில் இங்ஙனமான கதைப்போக்கு உள்ளது; இதைக் கொண்டே அவ்விலக்கணம் வகுக்கப் பெற்றது என்று நாம் முடிவு செய்ய வேண்டும்.

எ

இவ்விதம் வளர்ந்த பள்ளுப் பிரபந்தம் கற்றோரிடையும் மற்றோரிடையும் மிகுதியாகப் பயின்று வந்திருக்கிறது.

கலம்பகத்தில் பள்ளு

சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த புலவரான எவ்வுளூர் - இராமசாமிச் செட்டியார் என்பவர், கழுக்குன்றம், காளத்தி, இடைமருது முதலான பல தலங்களுக்குக் கலம்பகம் பாடியிருக்கிறார். இடைமருதூர்க் கலம்பகத்தில், அப்பிரபந்த வகைக்குரிய பல்வேறு உறுப்புக்களுடன் கூட, பள் என்ற உறுப்பையும் தாமாகப் புதிதாய்ச் சேர்த்து ஒரு பாடல் பாடியிருப்பது இங்கு அறியத் தக்கது (அச்சானது கசூ00 இல்.):

பள் - பெருந்தாழிசை

ஓதொ ரிந்து நற்பரிதி யாரனல்
ஒளிரு முக்கணுக் கொண்டவன்
உளத்தின் வருத்தம் அகல ஒருவர்க்
குலவாக் கோட்டை அளித்தவன்
போதார் ஒண்முகத் துமைக்கிடம் தந்து
புகழ்கொள் மருத வானவன்
புனித மாமலை அருவி யாமநீர்
பொதுளிப் பாயுந்தண் வயலிலே
வாதார் களமர் மிகவுங் களித்து
மைய லுற்றலந் துறைதலால்
மதர்த்த வசன முரைத்துச் சரச
வகையிற் பொழுது போக்குவீர்
சூதார் பெரிய முலைகள் குலுங்கத்
தொகுத்த கூந்தல் சரிந்திடத்
தொடர்ந்து நிமிர்ந்து நாற்றை எடுத்துச்
சுருக்காய் நடுமின் பள்ளிரே. (கக)

நம் காலத்துக்கு இன்னும் நெருங்கி வந்து பார்த்தால், சுப்பிரமணிய பாரதியார், "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே- ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோ மென்று - ஆடு வோமே" என்று சுதந்திரப் பள்ளு பாடுவதற்கும், முந்திய பள்ளுப் பிரபந்தம் தந்த சுதந்திர வுணர்ச்சியும் இன்ப வுணர்ச்சியுமே யாகும்.

அ

சமய வழக்காறுகள் - சைவம் - பேரூர்ப் புராணம்

பள்ளு என்ற சாதியையும் அவர்கள் செய்யும் உழவுத் தொழிலையும் குறித்த இரண்டு சமய வழக்காறுகள் இங்கே அறிதற் குரியன. கச்சியப்ப முனிவர் பாடிய பேரூர்ப் புராணம் என்ற புராணத்தில், பள்ளுப் படலம் எனபதாக ஒரு படலம் இருக்கிறது. எல்லாம் இறைவன் வடிவம் என்று மறைகள் ஓலமிடுகின்றன ; உயர்ந்தனவும் அவனே, இழிந்தனவும் அவனே; இதை விளக்கிக் காட்டும் பொருட்டு,

இறைவன் வேதியனாகி வந்தான் என்ற கதையொன்று அப் புராணத்தில் முந்திய படலங்களில் உள்ளது. இப்படலத்தில் இறைவன் இழிந்தவனுக்குத் தன்னைக் காட்டும் நோக்கத்துடன், பள்ளன் வடிவுகொண்டு வயலில் இறங்கித் தொழில் செய் வானாயினன். பிற தேவர்கள் அனைவரும் நுகமும் கலப்பை யும் மேழியும் கொழுவும் வாரும் கயிறும் கோலும் கிடாயும் ஏறும் வித்தும் நாற்றும் ஆகிய எல்லாமாகி வந்தார்கள். கண நாதர்கள் பண்ணைத் தொழில் செய்வாரானார் :

உழுகுநர் ஒருபால் உழுதசே றழுந்த
ஒண்புனல் பாய்த்துநர் ஒருபால்
முழுவரப் பருகு சீக்குநர் ஒருபால்
மொய்மரம் படுக்குநர் ஒருபால்
செழுமணிப் பகடு பூட்டுவிட் டோப்பிச்
செறிபுனல் மண்ணுநர் ஒருபால்
விழுமிய நாறு வார்க்குநர் ஒருபால்
வித்துநர் ஒருபுறம் ஆனார்.

உமாதேவியும் மற்றைத் தெய்வ மகளிரும் பள்ளியராகி வந்து நாற்று நட்டார்கள். அப்போது அங்கு வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆலயத்துட் சென்று அங்கு இறைவன் வெளியே சென்றமை தெரிந்து, இடபதேவர் உதவியால், இறைவன் வயலில் வேலை செயவதறிந்து, அங்கே சென்று இறைவனைத் தரிசித்து வணங்கினார் என்பது இப்புராண வரலாறு.

மற்ற வரலாறு, திருவரங்கம் பெரியகோயிலைக் குறித்தது. சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன் திருவரங்க நாதனுக்குத் தொண்டு செய்த பக்தரான வரந்தரும் பெருமாளரையர் என்பவருடைய சரிதம் இங்கு அறிதற்குரியது. உத்தம பக்தரான இவ்வரையர் ஒரு சமயம், ஸ்ரீரங்கநாதனுக்கு உரிமை பூண்டொழுகும் பறைச்சேரி யொன்றில் போய், அங்கு நடைபெற்ற பள்ளுப்பாட்டு, இசை ஆட்டம் என்பவற்றில் தம் மனத்தைப் பறி கொடுத்து அங்கேயே தங்கி விட்டார்; 'பள்ளும் புறையும் இசையுடனே கேட்டருளி' என்று

வைணவம் - கோயிலொழுகு

கோயிலொழுகு இதைக் குறிப்பிடுகிறது. அரையர் ஒழுக்கத்தில் இழிந்து விட்டாரென்று மற்றைக் கோயிலார் இவரை விலக்கி வைத்தனர்.

அடுத்து வந்த கோயில் திருவிழாவாகிய திருவூறல் உற்சவத்தில், பெருமாள் காவிரியாற்றங் கரைக்கு எழுந்தருளுவது வழக்கம். அச்சமயம் அரையர் தம் பெருமாளை வழிபடவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தவராய்ச் சேரியிலேயே இருந்தார். அவருடைய மெய்யன்புக்கு இரங்கிய ஸ்ரீரங்கநாதன், கோயிற் பணியாளர் ஒருவர் கனவில், அரையரை அழைத்து வரும்படி கட்டளையிட்டு, அவ்வாறே அவர் வந்து தன்னைத் தரிசித்தபோது, அவர் பெருமையை அனைவருக்கும் உணர்த்தி, 'வரந்தரும் பெருமாளரையர்' என்ற பட்டமும் தந்தான். இதனோடு அமையாமல், அரையர் கேட்டு ஈடுபட்டிருந்த பள்ளுப்பாட்டைத் தாமும் கேட்டருளத் திருவுளங் கொண்டு, பிற்காலத்தில் ஆண்டு தோறும் நடைபெற்று வந்த திருவரங்கம் திருவூறல் விழாவில் பள்ளுப்பாடல் பாடியாடும் சம்பிரதாயத்தை ஏற்படுத்தினான்.[1] ஏழாந் திருநாளன்று பெருமாள் தம் பரிவாரங்களுடன் காவிரிக் கரையிலிருந்து திருக்கோயிலுக்குத் திரும்பி வரும்போது, அவர் திருமுன் பள்ளுப்பாட்டும் ஆட்டமும் நிகழ்வது சம்பிரதாயமாயிற்று.

நெடுங்காலம் இவை நிகழ்ந்து பின்னர் வழக்கு வீழ்ந்தனவென்று கருத வேண்டியிருக்கிறது. இன்னும், திருவூறல் விழாவில் பள்ளு உற்சவம் உண்டு. அரையரொருவர் தாளத்துக்கேற்பப் பள்ளு நடனமாடிக்கொண்டு வருகிறார். ஆனால் எப்படியோ, பள்ளுப்பாட்டு பாடும் வழக்கம் மாத்திரம் நின்று விட்டது ; பாட்டுக்கேற்ற தாளமும் அபிநயமும் கூத்தும் உள்ளன ; பாட்டொன்றுதான் இல்லை.

கூர நாராயண ஜீயர் சுதர்சன சதகத்தைப்...பண்ணினார். தற்காலத்திலேயிருந்த அரையரிலே யொருத்தர், கேவலம் தூர்த்தராய், சிற்றின்பத்திலே மண்டி, கீழ் பறைச்சேரியிலே ஒரு விஷயத்தைப் பரிக்ரகித்து நாலா விதமாகத் திரிய, ஸ்வஜனங்களும் அந்த விஷயமும் சாமபேத தண்டங்களாலே தெரியச் சொன்னாலும் கேளாமல்,

ஸ்வஜனங்களாலே நிரஸ்தராய், பறைச்சேரியிலேதானே நியதமாக வாசம் பண்ணிக் கொண்டிருக்குங் காலத்திலே, பெருமாள் ஒரு மஹோத்ஸவத்திலே எட்டாந் திருநாள் கீழையூருக்கு எழுந்தருளு கிறதாக, எல்லைக்கரை நாலுகால் மண்டபத்திலே எழுந்தருளி யிருக்க, இவர் பறைச்சேரியிலே யிருந்து பள்ளும் பறையும் இசை யுடனே பாடக் கேட்டருளி, பெருமாள் ஸ்ரீபாதம் தாங்குவாருக்கு குருவாயிருந்துகொண்டு பறைச்சேரியிலே இருக்கிற அரையரை சந்நிதிக்கு அழைத்துவரச் சொல்லி நியமித்தருள, அவரும் வரு கிறதுக்கு ஸங்கோசித்திருக்க, அனைத்துக் கொத்துப் பரிவாரங் களும் ஜீயர்களும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸங்கதராக இருக்க, பெருமாளும் தம் விஷயீகாரம் ப்ரவஹித்தமாம்படி அவருக்கு "வாந்தரும் பெருமாளரையர்" என்று பட்டப்பேர் ஸாதித்து, அவர் ஸகலருக்கும் ஸர்வாபீஷ்டங்களும் அப்போது வரங் கொடுக்கும்படி அநுக்ரஹித்தருளி, அவருக்கு விஷய வைமுக் யத்தை உண்டாக்கிப் பரிசுத்தராக்கித் திருவூறல் மஹோத்சவத் தினன்று நடந்து திரும்பி எழுந்தருளுகிறபோதும் ஏழாந்திரு நாள் நாய்ச்சியார் கோயிலுக்கு எழுந்தருளுகிறபோதும், அவர் பாடின பள்ளும் பறையும் இசையிலே கேட்டருளும்படி திரு வுள்ளம் பற்றி, அந்தப்படியே செய்யச் சொல்லி நியமித்தருளி ஞர். அதுமுதலாக அரையருக்கு "வாந்தரும் பெருமாளரையர்" என்கிற பட்டப் பெயரும் சென்று வருகிறது - கோயிலொழுகு.

இவ்விரண்டு வரலாறுகளாலும், இலக்கியத் துறையில் புலவர் ஈடுபாட்டுக்குக் காரணமாயிருந்த பள்ளு, சமயத்துறை யிலும் இடம்பெற்றது என்பதை யறிகிறோம். கோயிலொழுகு கூறும் வரலாற்றால், பள்ளுப்பாட்டே பகவான் திருமுன் பாடப்பெற்று வந்தது என்பதையும் அறிகிறோம்.

௬

பள்ளு தோன்றக் காரணம்

பள்ளுப் பிரபந்தம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதை இங்ஙனம் ஒருவாறு ஊகிக்கலாமே யொழியத் திட்டமாய்க் கூற முடியாது. 17ஆம் நூற் றாண்டிலிருந்து தான் இதன் சரித்திரம் தெளிவாகப் புலப்படக்கூடிய தாயிருக்கிறது. தமிழ் நாட்டின் மூவேந்தரான சேர சோழ பாண்டியர்களின் வமிசங்கள் அழிவுற்றுப் பல நூற்றாண்டுகள்

ஆகிவிட்டன. பின்னர் அரசியற் குழப்பங்களால் அமைதி யற்றிருந்த நாடு, நாயக்க மன்னரது ஆட்சியிலும் அவர்களது பிரதிநிதிகளின் கீழும்,ஒருவாறு அமைதியுற்று வாழ்த் தொடங்கியது. இடையே நிகழ்ந்த குழப்பங்களால் சிறப்பு மிக்க பழைய கவி மாபு தடைப்பட்டு விட்டது. பிற மக்கள் கலப்பால் கவிவாணர்கள் புதிய முறையில், நூல் செய்வதில் ஈடுபட்டார்கள். பழைய பெருங்காவிய மாபு தடைப்பட்டமையால், ஒப்பற்ற பெருந்தலைவனொருவனைப் போற்றிப் பெருங் காப்பிய மொன்று செய்வதில் இவர்களுக்கு ஊக்கமில்லாது போனமை இயல்பே. புதுக்காப்பியஞ் செய்ய முனைந்தோர் தாமறிந்த மக்களையும் அவர்கள் வாழ்க்கையையும் பொருளாக அமைத்துச் செய்யுள் செய்தார்கள். தமிழ் நாடு முழுவதும் பயிர்செய்வோர் மிகுதியாதலால், இவர்கள் வாழ்ச்கையிலேயே பாடுவோர் மனஞ்சென்றது. பயிர்த்தொழில் செய்யும் உழவரும் உழத்தியரும் தொழிலில் ஈடுபட்டிருக்கையிலேயே பாடியும் ஆடியும் தம் வாழ்க்கையை ரசமாக அனுபவித்து வந்தார்கள். இவர்களிடையே இலக்கியம் இல்லை யென்பதொன்றே யொழிய, பாட்டுக்கள் வேண்டியவரை வழங்கிவந்தன. புது நூல்கள் செய்வதில் ஊக்கங் கொண்டிருந்த கவிஞர் இப்பாடல்களைத் தாமும் அனுபவிக்கத் தொடங்கி, இவைகளைத் தங்கள் திருத்தமான மொழியில் அமைத்ததன் மூலமாக இவைகளை இலக்கியமாக்கி விட்டார்கள். இவ்வாறு எழுந்த இலக்கியங்களே, பள்ளும் அதனையொத்த மற்றப் பிரபந்தங்களும்.

கO

நூற் பொருள்

பள்ளர் வாழ்க்கையைக் கூறுவதால் இப்பிரபந்தம் பள்ளு எனப் பெயர்பெற்றது; பள் - பள்ளர் சாதி. பள்ளர் என்பார் இன்றும் திருநெல்வேலி தஞ்சை முதலிய இடங்களில் பயிர்த்தொழில் செய்து வரும் மக்கள்; இவருள் பெண்மக்கள் இக்காலத்துப் பள்ளியர் என்றும் பள்ளத்தியர் என்றும் கூறப்படுவர். தஞ்சை முதலிய பிரதேசங்களில் பள்ளி என்று வழங்கப்படும் வகுப்பினர்

வேறு. இனி, பொதுவாகப் பள்ளினுட் கூறப்படும் பொருள் யாதென்பதைப் பார்க்கலாம்.

உழவர் உழத்தியர் ஏழை வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்படச் சித்திரிப்பதே பள்ளுப் பிரபந்தத்தின் உட்கோளாகும். சிறப்புமிக்க ஒரு பண்ணையிலே பள்ளனொருவன் பரம்பரையாகப் பயிர்த்தொழில் செய்து வருகிறான். இவனுக்கு மனைவியர் இருவர். இளையவள் மோகத்திலே மூழ்கிய பள்ளன் மூத்தபள்ளியைத் திரும்பிப் பார்ப்பதில்லை. இங்நிலையில் மழைபெய்து ஆற்றுவெள்ளம் வருகிறது. மூத்தபள்ளிபண்ணைக்காரனிடஞ் சென்று, பள்ளன் வேலையை மறந்து இளையவள் வீட்டிலேயே கிடப்பதை யறிவிக்கிறாள். பண்ணைக்காரன் இளையவளைக் கோபிக்கிறான். ஒளித்திருந்த பள்ளன் வெளி வருகிறான். பண்ணைச் செயலைச் சொல்லுமாறு பண்ணையான் கேட்க, பள்ளன் விதைவர்க்கம், மாட்டுவகை, மேழிமுதலான கருவிவகை ஆகியவற்றைக் கூறி மீள்கிறான். பண்ணைக்காரன் சொற்படியே சென்று வயலில் கிடை வைப்பதற்காக ஆட்டிடையனை அழைத்து வருகிறான். இடையனை வயலில் ஏவிவிட்டு மறுபடியும் இளையபள்ளி வீடே கதியாகப் போய் விடுகிறான். மூத்தவள் மீண்டும் பண்ணையானிடம் முறையிடுவது தெரிந்து, தான் பயிர்த் தொழிலைக் கவனித்து வருவது போல் பாசாங்கு செய்கிறான். பள்ளனது கள்ளத்தைக் கண்ட பண்ணையான் அவனைத் தொழுவில் மாட்டுகிறான். பள்ளன் படுந் துன்பத்தைக் கண்டு மூத்தவள் மனம் பொறாமல் தான் பிணைப்பட்டு அவனை மீட்கிறாள். விடுவிக்கப்பட்ட பள்ளன் விதைக்கணக்கு முதலியன சொல்லி, நல்ல முகூர்த்தத்தில் பள்ளரெல்லோரையுங் கூட்டிச்சென்று உழுகிறான். பள்ளனை ஒரு மாடு முட்ட அவன் மயங்கி விழுகிறான். பள்ளியர் வருந்தி நிற்கின்றனர். பின்னர் அவன் தேறி எழுந்து வேலையைக் கவனிக்கிறான். நாற்றுப் பறித்து, நடவு ஆகி, பயிர் நன்றாக விளைகிறது. அறுவடைசெய்து கண்டுமுதல் பண்ணி, செலவு வகைகளுக்குப் பள்ளன் நெல் அளக்கிறான். தன்னைப் புறக்கணித்துத் தனக்குரிய பங்கைப் பள்ளன் சரியாகத் தரவில்லை என்று மூத்தவள் பள்ளியர் முன் முறையிடுகிறாள்.

கேட்டிருந்த இளையவள், அவளைக் கோபிக்க, இருவருக்கும் ஏசல் மூளுகிறது. முடிவாக, பள்ளியர் இருவரும் தாமே சமாதானமாகிப் பாட்டுடைத் தலைவனை வாழ்த்திப் பள்ளனோடு ஒத்துவாழ்கிறார்கள்.

நூலிலமைந்த கதைப்போக்கு இதுவாகும். அகப்பொருள் தழுவிய கோவை முதலிய பிரபந்தங்கள் போலவே, பள்ளிலும் பாட்டுடைத் தலைவன் பெயர் மட்டுமே கூறப்படும்; கதாபாத்திரங்களுக்குரிய பெயர்கள் வழங்கப்படமாட்டா. பள்ளன் பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார்த்திக் குறிப்பிடப் படுவான். பள்ளியருள் மூத்தவள் பாட்டுடைத் தலைவனது ஊர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும், இளையவள் அயல் ஊர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும் வழங்கப் படுவர்; இவ்விருவருள் ஒருத்தி சிவனடியாள், மற்றவள் விஷ்ணுவின் அடியாள். வைணவப் பள்ளாகிய முக்கூடற் பள்ளில் இம்மூவரும் முறையே அழகக்குடும்பன், முக்கூடற் பள்ளி, மருதூர்ப் பள்ளி என்று பெயர் பெறுகிறார்கள்; சைவப் பள்ளாகிய திருவாரூர்ப் பள்ளில் வன்மீகப் பள்ளன், வன்மீகப் பள்ளி, சீரங்கப் பள்ளி என்று பெயர் பெறுவர். பிறவற்றுக்கும் இத்தன்மை பொருந்தும்.

பள்ளுப் பிரபந்தத்துக்கு இன்றியமையாத பொது உறுப்புக்கள் இவ்வளவே. பிற்காலத்தே நூல் செய்த ஆசிரியர் தத்தம் கவித்திறனுக்கு ஏற்ப இவைகளைப் பெருக்கியும் மாற்றியும் பிரபந்தங்கள் செய்தனர். ஆற்று வெள்ளம் பெருகிவருவதை வருணிக்கும்போது அதில் ஓடம் விடுவது வைசியப்பள்ளு முதலியவற்றிலும், வெள்ளத்துக்கு அணைகோலுவது குருகூர்ப்பள்ளிலும் கூறப்படுகிறது. இதை படுத்து, பள்ளியர் கும்மியடிப்பது பல நூல்களில் சொல்லப் படுகிறது. மாடு முட்டிப் பள்ளன் மயங்கி விழுவதாகப் பெரும்பான்மையான பிரபந்தங்கள் கூறுதற்கு மாறாக, அவன் காலில் கொழுப்பாய்ந்து அவன் மயங்கி விழுகிறான் என்று திருவாரூர்ப்பள்ளும் குருகூர்ப்பள்ளும் கூறும். பள்ளியர் ஏசி ஓய்ந்து தாமே சமாதானமாவரென்பதற்கு மாறாக, பண்ணைக்

காரன் அவர்களைச் சமாதானம் செய்து வைப்பனென்று சில நூல்கள் உரைக்கும்.

கக

இந்நூல் முக்கூடலில் கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் திருமால்மீது பாடப்பெற்ற பிரபந்தம். திருமால், கருடாழ்வார், சேனைமுதலிகள், நம்மாழ்வார் என்னும் நால்வருக்கும் கடவுள் வணக்கங் கூறி நூல் ஆரம்பமாகிறது. பள்ளியர் இருவரும் பள்ளனும் தோன்றித் தங்கள் குலப் பெருமை கூறுகிறார்கள். பிறகு பள்ளியர் தங்கள் நாட்டு வளமும் நகர்வளமும் பாடி, மழை பெய்யுமாறு கூவும்படி குயிலை வேண்டுகிறார்கள். பள்ளரெல்லோரும் திரண்டு, மழை வேண்டிக் கிராம தேவதைகளுக்குப் பூசை போடுகிறார்கள். மழை பெய்வதற்கான அறிகுறிகள் உண்டாகி, மழைபெய்து ஆற்றில் வெள்ளம் பெருகி, குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐவகை நிலங்களிலும் பாய்ந்தோடுகிறது. இங்கு, பொருநையாற்றிலும் சித்திரா நதியிலும் போகும் மீனினங்கள் வருணிக்கப்படுகின்றன. பிறகு பண்ணைக்காரன் வரவும், மூத்தபள்ளி தன் குறைகளை அவனிடம் சொல்ல, கதை மேலே தொடர்ந்துபோகிறது. பள்ளன் உழச்செல்லும் போது அவனுக்கு உதவியாகச் செல்லும் பள்ளர் வகையும், பள்ளியர் நடச்செல்லும்போது பள்ளியர் வகையும், அவர்கள் காதற் செய்திகளும் விவரிக்கப்படுகின்றன. விதை, மாடுகள், ஏர்க்கால் முதலியவற்றின் கணக்குரைக்கும்போதும் கண்டு முதலான நெல்லுக்குச் செலவு கூறுமிடத்திலும் முக்கூடல் தல சம்பந்தமான பல செய்திகள் புனைந்து கூறப்படுகின்றன. ஏசலில் பள்ளியர் தம்மை ஏசிக்கொள்வதோடு நில்லாது சைவ வைணவ சரித்திரங்களைச் சுட்டியும் ஏசிக்கொள்கிறார்கள். வாழ்த்துடன் பிரபந்தம் முடிகிறது.

முக்கூடற் பள்ளு

முக்கூடற்பள்ளு ஆராய்ச்சி

தலவரலாறு

முக்கூடல் வரலாறு

முக்கூடல் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் தாமிர பருணி நதியின் வடகரையிலுள்ள சிறு கிராமம்; மூன்று ஆறுகள் கூடுமிடத்திலிருப்பதால் முக்கூடலாயிற்று. முன் காலத்தில் சித்திரா நதியும் கோதண்டராம நதியும் இவ்வூரில் வந்து பொருநையில் கலந்தமையால், இவ்வூருக்கு இப்பெயர் வந்தது.

சித்திராநதி

சித்திரா நதி (= அழகிய நதி) யென்பது வடமொழிப் பெயர்; சிற்றாறுஎன்பது இதன் தமிழ்ப்பெயர். பெயர் சிற்றாறு என்றிருந்தபோதிலும், பெருமை மிக்கது என்று கூறுகிறார் பள்ளுப் பிரபந்தத்தின் ஆசிரியர்:

> **சிற்றாறென்பது பெற்றாலும் ஒரு**
> **சிறியவர் மனப் பெருமைபோல்**
> **சித்ரா நன்னதி பெருகி வாற**
> **சித்ரம் பாரும்...** (௫௧)

சிற்றாறு திருக்குற்றாலத்துக்கு மேற்கே உற்பத்தியாகிறது. குற்றாலத்தில், தேனருவி, செண்பகாதேவி, வடவருவி, ஐந்தருவி முதலான பல அருவிகளையுடையது.

கோதண்டராம நதி

கோதண்டராம நதி என்பது, கழுகுமலைப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் சிறு வாய்க்கால். இதன் நீர் சிறிது உப்பாயிருப்பதால் உப்போடையென்றும் வழங்கப்பெறும். முற்காலத்தில் இது முக்கூடலில் தாமிரபருணியுடன் கலந்தது; இப்போது முக்கூடலுக்குச் சிறிது மேற்கே கங்கைகொண்டான் என்னுமிடத்தில் சித்திரா நதியிற் போய்க் கலக்கிறது. இந்நதியைக் குறித்து ருசிகரமான கதையொன்று சொல்வதுண்டு. மானைத் தேடி வந்த இராமபிரான், தாக மிகுதியினால் பக்கத்திலிருந்த ஆனைமலையிலிருந்து ஆனைநதி (கஜநதி - கயத்தாறு) வருமாறு பணித்தார். இதில் வந்த நீர் உப்பாயிருக்கவே, தம் கோதண்டத்தைப் பூமியில் ஊன்றிக் கங்கையை வரவழைத்துத் தாகத்தைத் தீர்த்துக்கொண்டார். கங்கை தோன்றிய இடமே இப்போது கயத்தாறென்னும் ஊரிலுள்ள கோதண்டராமேசுவரர் ஆலயத்துட் காணப்படும் தீர்த்தம். கயத்தாறு கோதண்ட

ராம நதியாகி, இக்காலத்தில் உப்போடையாகிவிட்டது. இக்கதை வேறு விதமாகவும் வழங்கும்.

இந்நூல் ருக ஆம் பாட்டின் அடிக்குறிப்பிற் கண்ட செய்யுளில் இந்நதியின் வரலாறு உரைக்கப்பட்டிருக்கிறது (பக்கம் 95).

சீவலப்பேரியில் தாமிரபருணி மிக்க அகலமாயுள்ளது. வருஷத்தில் பெரும்பாகமும் தண்ணீர் ஆற்றின் நடுவில் குறைவாகச் சிறிய ஓடைபோல ஓடும். நீரோட்டத்துக்கும் கரைக்கும் அதிக தூரமாகையால், தண்ணீர் மொண்டு வருவது மிக்க சிரமம். இது காரணமாக, 'சீவலப்பேரியில் பெண் கொடுப்பதைவிடச் செக்கிழுக்கப் போடலாம்' என்ற ஒரு பழமொழி அங்கு வழங்குகிறது.

தாமிரபருணி

முக்கூடலுக்கு இப்போது வழங்கும் பெயர் சீவலப்பேரி என்பது. 12ஆம் நூற்றாண்டில் அரசுபுரிந்த பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீ வல்லபனால் சீவலப்பேரி என்ற பெயருடைய ஏரியொன்று கட்டப்பட்டது. அதையொட்டி இவ்வூருக்கும் அப்பெயரே வழங்குகிறது. ஏரிகள் வகையில் சீவலப்பேரியும் ஓர் ஏரியென்பதாக இந்நூலும் (கூஉ) குற்றாலக் குறவஞ்சியும் (அக) கூறும். இந்த ஏரிக்குத் தண்ணீர் பாய்ச்சி வந்தது சித்திரா நதி. இதன் பொருட்டுச் சித்திரா நதியில் போடப்பட்டிருந்த அணை 1796 ஆம் ஆண்டில் வெள்ளத்தால் உடைந்து அழிந்து போயிற்று. அதுமுதல் இந்த ஏரி நன்செய் நிலமாக மாறிவிட்டது. இதுவன்றி, 12 ஆம் நூற்றாண்டினிறுதியில் அரசுபுரிந்த வீரபாண்டியனால் கட்டப்பட்ட வீரபாண்டியப் பேரியும் இந்நூலில் (கூஉ) குறிப்பிடப்படுகிறது.

சீவலப்பேரி

முக்கூடலில் பழமையான விஷ்ணுவாலயம் ஒன்றுண்டு. இங்கு எழுந்தருளியிருக்கும் திருமாலின் திருநாமம் அழகர் என்பது. இந்நூலில் இவர் அலங்காரர் என்றும் சேண்டலங்காரர் என்றும் கூறப்படுகிறார்; கையில் செண்டு என்னும் ஆயுதத்தைத் தாங்கியிருப்பதால் செண்டலங்காரப் பெருமாள் என்று பெயர் பெற்றார். மன்னார்குடி ராஜகோபாலப் பெருமாளுக்கும்

அழகர் ஆலயம்

செண்டலங்காரர் என்ற திருநாமமுண்டு. திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு அழகர், மாலலங்காரர் என்ற திருநாமங்களும், கூடலில் கூடலழகர் என்ற திருநாமமும் உண்டு. முக்கூடலுக்குத் தென்கூடலென்ற பெயரும் அழகருக்குத் தென்கூடலழகரென்ற பெயரும் வழங்கினவென்று தெரிகிறது. 'தென்முக்கூடல்' எனவும் 'தெக்கண விட்டு' எனவும் இந்நூலிற் காணப்படுவன இக்கூற்றை வலியுறுத்தும்.

அழகராலயத்தில் சேர சோழ பாண்டிய ரென்னும் மூவேந்தரின் சாசனங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. பாண்டியன் சடையன் மாறனுடைய சாசனங்களும் இராசராச சோழனுடைய சாசனங்கள் பதினொன்றில் சிலவும் வட்டெழுத்திலுள்ளவை. வீரராசேந்திர சோழன் சாசனமொன்றும், முதற் குலோத்துங்க சோழன் சாசனமொன்றும் முதல் ராசேந்திர சோழன் (1012-44) சாசனங்களிரண்டும் தமிழெழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

சீவலப்பேரியிலுள்ள சாஸ்தாகோயிலும் பூலாவுடையார் கோயிலும் பிரசித்தமானவை; இவற்றில் திருவிழா சிறப்பாக நடந்து வந்தது. இவ்விரு காவல் தெய்வங்களும் இந்நூலகத்துக் குறிப்பிடப்பட்டுள்ளன. மாடுமுட்டிப் பள்ளன் கீழே விழுந்ததைக் கண்ட பள்ளி, 'இது ஐயா பூலாவுடையார் குறையோ' என்றஞ்சுவதாக நூல் கூறுகிறது. வேறு காவல் தேவதைகள், புலியூருடையாரும் வடவாய்ச்செல்வியும்.

இவ்வூரின் பிடாகையான மறுகால்தலை யென்னுமிடத்தில் மலையில் செதுக்கப்பட்டுள்ள 'பஞ்சபாண்டவர் படுக்கை'யும் அதன் மேலுள்ள பாறையில் பாலி லிபியில் வெட்டப்பட்டுள்ள அசோக சாசனத்தையொத்த எழுத்துக்களும், இங்கே புத்த சமயம் பரவியிருந்ததைக் காட்டும்.

முக்கூடல் நகரம் இருநூறாண்டுகளுக்கு முற்பட்ட காலம் வரையில் நாகரிகத்திலும் பயிர்த்தொழிலிலும் மிகப் பிரசித்தி பெற்றிருந்ததாகத் தெரிகிறது. பிற்காலத்தில் அச்சிறப்புக் குன்றி விட்டது. இப்போது பிரபலமான சந்தையொன்று அங்கே வருடந்தோறும் நடைபெறுகிறது. அது காரண

மாகவே இவ்வூருக்குச் சிறிது முக்கியமேற்பட்டிருக்கிறது. தளவாய் முதலியார் சத்திரமொன்றும் இங்கிருக்கிறது.

நூலாசிரியர்

முக்கூடற் பள்ளு என்ற இந்த நூல், இங்கு திருக் கோயில் கொண்டுள்ள அழகரைப் பாட்டுடைத் தலைவராய்க் கொண்டுள்ளது. இந்நூலைச் செய்து புலவர்களுக்கெல்லாம் புது வழி யொன்றை வகுத்துக் காட்டிய ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை. பரிசோதித்த ஏடுகள் ஒன்றிலும் இவர் பெயர் காணப்படவில்லை. எனினும், இவர் சிறந்த பக்தர் என்பதும், நம்மாழ்வாரிடத்து மிக்க ஈடுபாடுடையவர் என்பதும், சைவ சமயத்திலும் ஒத்த அன்புடையவர் என்பதும், நன்றி யறிதல் மிக்கவர் என்பதும் நூலிலிருந்து வெளியாகின்றன. பல குறிப்புக்களால் இவர் இவ்வூர் வேளாளர் என்றும் வடமலை யப்ப பிள்ளையன் குடும்பத்துக்குத் தொடர்புடையவர் என்றும் எண்ண இடமுண்டு.

நூல் தோன்றிய காலம்

ஆசிரியர் பெயர் அறியமுடியாத போதிலும், இந்நூல் தோன்றிய காலத்தை யறிய இரண்டு குறிப்புக்கள் இதனகத்தே கிடைக்கின்றன. பள்ளியர் மழைபெய்யக் கூவும்படிக் குயிலை வேண்டுவதாக அமைந்த குயிற்பாட்டிலே, ஆசிரியர்—

காவை வரு திருமலைக் கொழுந்து முகில்
செங்கோன்மை ஓங்கவே கூவாய் குயிலே (உகூ)

என்று கூறுகிறார். இத்திருமலைக்கொழுந்து என்பவர் காவை வடமலையப்ப பிள்ளையன் புதல்வரான காவை - திருமலைக் கொழுந்துப் பிள்ளையன். வடமலையப்ப பிள்ளை யன் கி. பி. 1663 ஆம் ஆண்டில் காலஞ் சென்றார் என்று கன்னியாகுமரிக் கல்வெட் டொன்றினால் தெரியவருகிறது. திருமலைக்கொழுந்துப் பிள்ளை யன் அதுமுதல் 1682 வரையில் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தார். மேலே காட்டிய குயிற் பாட்டில் திருமலைக்கொழுந்து மன்னனுடைய செங்கோன்மை நிலைபெற்று வளரவேண்டும் என்று நிகழ்காலத்தில் கூறியிருக்கிறபடியால், நூல் திருமலைக்

காவை வடமலையப்பர்

காவை திருமலைக் கொழுந்து

கொழுந்துப் பிள்ளையன் ஆட்சிபுரிந்த காலத்திலே (1663 - 1682க்குள்) செய்யப்பெற்றதென்பது நிச்சயமாகிறது.

மேலும், மேழி ஏர்க்கால் முதலிய பயிர்த்தொழிற் கருவிகளைப் பண்ணைக்காரனுக்குப் பள்ளன் கணக்கு ஒப்புவிப்பதாயுள்ள பாடலில்,

> அனகன் ஆறை வரும் நயினாத்தை
> அழகர் மண்டபத் தூண்சாரம் ஏற்றக்
> கனக நீள்வடங் கோடி கொடுத்தேன் (எச)

என்று பள்ளன் கூறுகிறான். 'நயினாத்தை' என்பது பொதுவாகத் திருநெல்வேலியில் முதலியார் மரபினரைக் குறிக்க உபயோகிக்கும் சொல். ஆறை வரும் நயினாத்தை என்பவர் ஆறை அழகப்ப முதலியார்; திருநெல்வேலியில் பெருஞ் சிறப்பு வாய்ந்த தளகர்த்தராயிருந்தவர். (இவருடைய பாட்டனார் ஆதி அழகப்ப முதலியார்; காலம் 1635-56.) இவர் முக்கூடல் அழகர் கோயிலுக்குத் திருப்பணி செய்த வரலாற்றை இவ்வடிகள் சுட்டுகின்றன. இவர் காலம் கி. பி. 1676 - 1730. இவர் அழகர் மண்டபத்தில் தூண்சாரம் ஏற்றும் பொருட்டு வடக்கயிறுகள் கொடுத்ததாகப் புலவர் கூறுவதால், இவர் காலமும் புலவர்காலமும் ஒன்றே. ஆகவே, நூல்செய்த காலத்தே திருமலைக்கொழுந்துப் பிள்ளையனும் ஆறை அழகப்ப முதலியாரும் வாழ்ந்திருந்தமையால், இருவருக்கும் பொதுவாகிய 1676-1682 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தே நூல் செய்யப் பெற்றிருக்கலாம்; உத்தேசம் 1680 என்று கொள்ளலாம்.

ஆறை அழகப்பர்

நூலுள் கூறப்பட்டோர்

இவருடைய பெயர் இந்நூலில் இரண்டிடங்களில் வருகிறது. சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான இருபாவிருபதுக்கு உரைசெய்த மதுரைச் சிவப்பிரகாசர் தமது அவதாரிகையில், "இந்நூலுக்கு வியாக்கியை செய்ய வேண்டினது கொண்டு மெய்கண்ட சந்ததியிற் காவை அம்பலநாதத்தம்பிரான் திருவடி மரபிலாரில் மதுரை ஞானப்பிரகாசத் தம்பிரான் திருவடியைப் பெற்ற சிவப்பிரகாசஞானப்பிரகாசத் தம்பிரானார் கடாட்சித்த

காவை அம்பலவாணர்

உபதேச சம்பிரதாயத்தைச் சகாத்தம் ஆயிரத்து நானூற்றொருபதின்மேற் செல்லாநின்ற காலத்திலே வியாக்கியை செய்ததென அறிக" என்று உரை வரலாற்றை யுரைத்தார். இதிற் குறிப்பிட்ட சகம் 1410 க்குச் சரியான ஆண்டு கி. பி. 1488. அம்பலநாதத் தம்பிரான் என்பாரே அம்பலவாணர் ; அம்பலவாணத் தம்பிரான் என்றே பிற இடங்களில் வழங்கப் படுகிறார். இவர் மெய்கண்ட சந்தான பரம்பரையில் தீட்சை பெற்றுத் துறவு பூண்டாரென்பது இதனால் தெரிகிறது. இவரது திருவடி மரபு எனக் கூறப்பட்டிருத்தலால், இங்கே குறிப்பிட்ட 1488 ஆம் ஆண்டுக்குப் பல ஆண்டுகள் முன்னரே இவர் வாழ்ந்தவர் எனக் கருத இடமேற்படுகிறது ; உத்தேசம் 1425 எனக் கொள்ளலாம்.

இவரது ஊர் காவனூர் என்னும் காவை ; திருப்பரங்குன்றத்தைச் சார்ந்ததெனக் கூறுவர். இவர் கார்காத்த வேளாண் மரபினர் ; அதற்கேற்பச் சிறந்த வள்ளலாக விளங்கினார் என்பது இந்நூலாசிரியர் இவரை 'பாவலர்க் குபகாரி' என்று சிறப்பிப்பதனால் பெறப்படுகிறது. பாவலர்க் குபகாரியா யிருந்ததோடன்றி, தாமும் சிறந்த ஒரு பாவலர் ; சமய அறிவு மிக்கவர் ; பல சைவ நூல்கள் செய்தவர். யோக மார்க்கங்களுள் ஒன்றான பிராசாத மார்க்கத்தைப் புலப்படுத்தும் பிராசாத அகவல் என்ற நூல் இவர் செய்தது. அன்றியும், சிவப்பிரகாசத்தின் கருத்தைத் தொகுத்து ஒவ்வொரு செய்யுளுக்கும் ஒரு கொளு அமைத்திருக்கிறார். இவர் சந்ததியினர் பல பிரிவினர் என்பதைக் கருத்துட்கொண்டே இந்நூலாசிரியர் 'காவை அம்பலவாணன் பலகிளையுந் தழைக்கவே கூவாய் குயிலே' என வாழ்த்துகிறார்.

இவர் அம்பலவாணரது வழித்தோன்றல். சிறந்த தளகர்த்தர். திருமலை நாயக்க மன்னர் காலத்தும் சொக்கநாத நாயக்கர் காலத்தும் திருநெல்வேலிச்சீமையை ஆண்டு வந்தவர். 'செஞ்சிக்கும் கூடலுக்கும் தஞ்சைக்கும்' இவர் ஆணை சென்றதென இந்நூல் கூறும். குதிரை சவாரி செய்பவரென்பதும், இவர் குதிரை கறுப்பு நிறமுடையதென்பதும்

காவை வடமலையப்ப பிள்ளையன்

இந்நூலால் விளங்குகின்றன. சிவபக்தர். சைவ வைணவ ஆலயங்களுக்கு விசேஷமான தருமங்களைச் செய்திருக்கிறார்.

17 ஆம் நூற்றாண்டிலே டச்சுக்காரருக்கும் போர்த்துக்கீசியருக்கும் கீழ் கடற்கரை யோரங்களில் பல போர்கள் நடந்தன. டச்சுக்காரர் ஒருமுறை 1648 இல் திருச்செந்தூரிலிறங்கி ஆலயத்திற் புகுந்து கொள்ளையடித்து அங்கிருந்த மூர்த்தியைக் கடலிலெறிந்துவிட்டுப் போயினர். வடமலையப்பர் கனவில் முருகப் பெருமான் தோன்றி விக்கிரகம் இருக்குமிடத்தை யறிவிக்கவே, இவர் அவ்விடத்தில் தேடச் செய்து விக்கிரகத்தை மீட்டுக் கோயிலில் பிரதிட்டை செய்தார் என்பது பழமையாய்க் கூறப்படும் வரலாறு. இச்செயலைக் கீர்த்தனத்தில் பாடிய வென்றிமாலைக் கவிராசர் இந்நிகழ்ச்சி கொல்லம் 829 ஆம் ஆண்டில் (கி. பி. 1654) நடந்தது எனக் குறிப்பிட்டிருக்கிறார். வடமலையப்பர் செயலை நினைவு கூர்தற்காக வடமலையப்பர் மண்டபமென ஒரு மண்டபம் அமைக்கப் பெற்றிருக்கிறது ; முருகப்பெருமான் விழாக் கொள்ளுங் காலத்து அங்கெழுந்தருளுவதுண்டு.

முக்கூடலில் அழகருக்காகப் பிள்ளையன் ஐந்து குளங்கள் தோண்டுவித்தாரென்றும் அவற்றில் அழகர் முத்திரையாகிய சக்கரம் பொறிக்கப்பெற்ற கற்களை நாட்டினாரென்றும் இந்நூல் (கச) கூறுகிறது. சங்கர நயினார் உலா, தென்திருப்பேரை மகரநெடுங் குழைக்காதர் திருப்பணிமாலை, திருக்கோளூர் வைத்தமாநிதி திருப்பணிமாலை முதலிய நூல்கள் இவர் சைவ வைணவ ஆலயங்களுக்குச் செய்த திருப்பணிகளைத் தெரிவிக்கும். இந்நூல்கள் இவருடைய குண விசேஷங்களையும் வள்ளன்மையையும் பலவாகப் பாராட்டிப் புகழும். ஐயன் என்ற சொல் இவரது பெருமைக் கடையாளமாக இவர் பெயரின் பின்னர் சேர்த்து வழங்கப்பட்டது ; இவர் பரம்பரையினருக்குரிய சிறப்புப் பெயராக இன்றும் வழங்கப்படுகிறது. இவர் காலத்தே திருநெல்வேலிப் பிரதேசத்தில் இவர்மீது பிரபந்தம் இயற்றிப் பாடாத புலவர் அரியர். திருக்குறட் கருத்தை முன்னிரு அடிகளில் ஒரு கதை மூலம் விளக்கிப் பின் அடிகளில் குறளை அமைத்துப் பாகை-அழகப்பன் என்பார் பாடிய

வடமலை வேண்பா இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. முக்கூடலில் இவரது மாளிகை யிருந்ததென் பது, 'வடமலேந்திரன் மடத்துக்கு வேண்டுஞ் செந்நெல் வாரிக் குவிப்பார்' என்று இந் நூலகத்து வருவதால் விளங்குகிறது. பிள்ளையன் தாயார் அந்தியகாலத்தே இவ்வூரில் இருந்ததாக வும், தாமிரபருணியின் தண்ணீர் குடித்தே தாம் கடைசி வரை உயிர் தரிக்கவேண்டும் என்று அவர் விரும்பிய மையால், மாளிகையோரமாகத் தாமிரபருணியிலிருந்து ஒரு வாய்க்கால் ஓடி வரும்படியாகப் பிள்ளையன் வெட்டு வித்தாரென்றும், அவ்வாய்க்கால் நீர்ப்பாசனத்துக்கும் உபயோகிக்கப்பட்டு வந்து பிற்காலத்தில் அழிந்து போய் விட்டதென்றும் சொல்கிறார்கள். 1663 இல் பிள்ளையன் காலஞ் சென்றார். பிறகு அவர் குடும்பத்தினர் இருபிரிவாகப் பிரிந்தனர்; ஒரு பிரிவினர் ஆற்றுக்கு வடகரையிலும் மற்றொரு பிரிவினர் தென்கரையிலும் இருந்துவிட்டனரென்று தெரிகிறது.

வடமலையப்பாது புதல்வர். இவர் காலம் 1663 - 1682 என மேலே கூறப்பட்டது. சொக்கநாத நாயக்கரது பிரதி நிதியாக இவர் திருநெல்வேலிச் சீமையில் ஆட்சிபுரிந்தார். தந்தையைப்போலவே இவரும் புலவரை ஆதரித்தவர்.

காவை திருமலைக்கொழுந்துப் பிள்ளையன்

திருமலை வேண்பா இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. திருக்குற்றால நாதர் ஆலயத்துக்கு இவர் நிலங்கள் தானஞ் செய்தமை குற்றாலக் குறவஞ்சியில் கூறப்பட்டுள்ளது. இவர் புதல்வராகிய இரசை வடமலையப்பர் 1682 முதல் ஆட்சிபுரிந்தார்; இவரது வள்ளன்மையைப் புலவ ராற்றுப்படை வியந்துகூறும்; வள்ளலாயிருந்ததோடு தாமும் பெருங் கவிஞராயிருந்தார். ஐயாயிரம் செய்யுள் கொண்ட மச்ச புராணத்தையும் நீரேப் புராணத்தையும் இவர் செய்தார். மச்ச புராணத்தின் அரங்கேற்றம் 1706 இல். நீரேப் புராணத் திலிருந்து, பிள்ளையன் பரம்பரைக்குரிய கோத்திரப் பெயர் 'நாரணக்குட' என்று தெரிகிறது.

இவர் காலம் 1676-1730 என்பதும் முக்கூடல் அழகர் கோயிலுக்கு இவர் திருப்பணி செய்தமை இந்நூலுட் கூறப்

பட்டிருக்கிற தென்பதும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆறை அழகப்ப முதலியார் திருவிதாங்கூர் இராச்சியத்தின் அரசுரிமையைக் குறித்துத் தாயத்தார்களுக்குள் கலகம் நேர்ந்தபோது அதைத்தீர்த்துவைப்பதற்காக நாயக்க அரசருடைய பிரதிநிதியால் சேனையோடு அனுப்பப் பட்டவர். கலகத்தை அடக்கி, திருவிதாங்கூர் மன்னனுக்கு அரசுரிமையை வாங்கி அளித்துத் திரும்பியவர். சிறந்த உபகாரி. இவருடைய புகழ் சிவசைலப் பள்ளில் விளங்கக் கூறப்பட்டிருக்கிறது.

சாத்தூர் என்னும் ஊரினர். முக்கூடலிலிருந்த இராமானுச மடத்தின் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருந்தாரென

பெரியநம்பி ஐயங்கார் ஊகிக்க இடமிருக்கிறது. (உடையவரின் ஆசாரியருள் பெரிய நம்பி என்ற பெயர் பூண்ட பெரியார் ஒருவர் என்பது இங்கு அறியத்தக்கது.)‘தருமநிதி’ எனக் கூறப்படுகிறார். இவரது திருமாளிகைக்கு அழகர் பண்ணையிலிருந்து நெல் அளக்கப் பட்டதெனத் தெரிகிறது.

நூலைக் குறித்த செய்திகள்

முக்கூடற்பள்ளு சம்பந்தமாக, குறிப்பிடத்தக்க இரண்டு செய்திகள் கர்ணபரம்பரையாக வழங்கி வருகின்றன.

அள ஆம் பாட்டாகிய ‘வரத்தினை மீறும் செலவுக்குத் தரித்திரம் ஏறும்’ என்ற செய்யுளைப் புலவர் பாடிவரும் போது, ‘பரத்தி கைச் சுள்ளும்’ என்று சொன்னவுடன் அவருடைய வாக்குத் தடைப்பட்டு நின்றுவிட்டதாம்; இரண்டு நாள் வரையில் பாட்டை முடிக்க இயலாமல் புலவர் அப்படியே இருந்துவிட்டாராம். பிறகு, ஆற்றின் அக்கரையிலுள்ள ஊரிலிருந்து ஒரு பெண் தலையில் குடத்தைச் சுமந்துகொண்டு தன்னெதிரே போவதைத் தற்செயலாகக் கண்டார். கண்டவுடன், தடைப்பட்டிருந்த அவருடைய வாக்கு ‘அக்கரைத் திருத்தினிற் கள்ளும்’ (திருத்து - புதிதாகத் திருத்தியமைக்கட்பட்ட ஊர்) என்று மேலே செல்ல ஆரம்பித்தது. சரசுவதியே ஒரு பெண் வடிவெடுத்து வந்து பாட்டை

முடிக்கப் புலவருக்கு இவ்வாறு வழி காட்டினாளென்று புலவரும் பிறரும் நம்பினார்களாம். வந்த பெண்ணே இவ்வடியைச் சொல்லிக்கொடுத்து மறைந்தாளென்றும் சொல்வதுண்டு.

மற்றொரு செய்தியும் இப்பாட்டு சம்பந்தமானதே. நூல் செய்த காலத்தில் முக்கூடல் மிக்க செழிப்புள்ள நிலையிலிருந்திருந்த போதிலும், பிற்காலத்தில் வளங்குன்றி நசித்துவிட்டது. இந்த அழிவுக்குக் காரணம், சரசுவதி சொல்லிக்கொடுத்த இப்பாட்டில் புலவர் 'தரித்திரம் வறும்' என்ற தொடரை அமைத்திருந்தது தான் என்று சொல்லுகிறார்கள். திரிகூடராசப்ப கவிராயர் குற்றாலக் குறவஞ்சியில் இலஞ்சி என்ற ஊரைக் குறிப்பிடும்போது, 'மீறும் (எல்லா வளங்களும் செழிக்கும்) இலஞ்சி' என்றமையால் அவ்வூர் சிறப்புற்றோங்கியது என்பது இலஞ்சி பற்றிய கர்ணபரம்பரைச் செய்தி. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக முக்கூடலில் இருந்த கார்காத்த வேளாண் மக்களுடைய செல்வநிலை சீர்கேடடைந்து அவர்கள் தாழ்ந்த நிலைமையை யடைந்துவிட்டார்கள்; இலஞ்சியிலிருந்த வேளாளர் சிறப்புற்று வாழ்ந்து வந்திருக்கிறார்கள்; இவ்விஷயமே மேற்சொன்ன செய்தி எழுந்த காரணத்தை விளக்கப் போதியதாகும்.

இந்நூலும் பின்வந்த பள்ளுகளும்

பா வகை

முக்கூடற் பள்ளிலமைந்த செய்யுள் வகைகள் கலிப்பா சிந்து என்னும் இரண்டே. பள்ளு வரிசையில் இது முதலில் தோன்றிய நூலாதலின் இதன் ஆசிரியர், ஆற்று வரவையும், பள்ளன், பள்ளியர், பண்ணைக்காரன் முதலியோரையும் வருணிப்பதோடு நின்று, பிற இடங்களில் கதைப் போக்கைச் சுவைபட எளிமையாகச் சொல்வதையே தம் கருத்துட் கொண்டார். பள்ளர் வாழ்க்கையையும் அவர்கள் செயல்களையும் அவர்கள் பாஷையிலேயே உரைப்பதை நோக்கமாகக் கொண்டாராதலின், இவர் தமது கூற்றாகப் பாட்டுக்களை அடுக்கவில்லை. எனவே, இவருக்குச் சுருங்கிய பாவகைகளாகிய கலிப்பாவும் சிந்துமே நூல் செய்யப் போதியனவாயின. பின் வந்தோர் நூலில் முக்கிய

மாகிய எளிமையைக் கைவிட்டு, அகப்பொருட் செய்திகளை மிகுதியாக அமைக்கவேண்டுமென்றும் தம் புலமைத் திறத்தை வெளியிடவேண்டுமென்றும் கருதியமையால், பிற பாவகைகளைத் தேட வேண்டியதாயிற்று. அகவல், விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறை, கீர்த்தனம் முதலியனவும் பள்ளில் புகுந்தன ; அதன் உயிர் நிலையாகிய எளிமையும் கவி நயமும் சற்றே குறைந்தன.

திருமலைப் பள்ளன் ' அச்சமே கீழ்கள தாசாரம் ' என்ற திருக்குறளை (1075) அனுபாசமாக எடுத்துப் பிரயோகிக்கிறான் :

அச்சமே கீழ்ச்சாதிக் காசாரம்
என்பர்கள் ஆருமே (திருமலைப் பள்ளு, கOரு)

தொழுவில் மாட்டப்பட்டுக் கிடக்கும் பருளைப் பள்ளன் தான் செய்த பிழையைப் பொறுக்கும்படி ஆண்டையை வேண்டும்போது, ஆண்டைக்குத் திருக்குறள் போதிக்கிறான் :

குறள் ஆட்சி

ஒறுத்தா தாற்பய னென்பொறுத் தாருக்
குலக முள்ளள வும்புக ழென்றே
மறுத்த விர்ந்திடு வள்ளுவனார் சொன்ன
மான வெள்ளைக் குறள் அறியீரோ ?
(பருளைப் பள்ளு, கOக)

என்று வினவுகிறான். பின்வந்த ஆசிரியர்கள் பள்ளுப் பிரபந்த இயல்பை அறவே மறந்துவிட்டார்களென்பதற்கு இவை தக்க சான்றுகள்.

முக்கூடற்பள்ளை முன் மாதிரியாக வைத்தே பிற பள்ளுகள் அனைத்தும் அமைந்தன. அதன் கதைப்போக்கை அனுசரித்தே மற்றவைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளர் பள்ளியர் பண்ணைக்காரன் வருணனை, நாட்டு வளம், ஆற்றுவரவு, ஐந்திணை நிலங்கள், பயிர்த்தொழில், நெற்கணக்கு முதலியவற்றைக் கூறும்போது, முக்கூடற் பள்ளில் எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வகைச் சந்தமுடைய சிந்து உபயோகிக்கப்பட்டிருக்கிறதோ அந்தச் சந்தர்ப்பத்தில் அதே வகைச் சிந்துதான் பிற பள்ளுகள்

ஒப்புமை

எல்லாவற்றிலும் உபயோகிக்கப்பட்டுள்ளது; பெரும்பான்மையான சொற்றொடர்களும் அதிலிருந்தே எடுத்தவை. இக்கூற்றுக்குச் சிறிதளவு விலக்கானவை, திருவாரூர்ப் பள்ளும் குருகூர்ப்பள்ளுமே.

பிற்காலத்து ஆசிரியர் முதனூலிற் கண்ட சில குறிப்புக்களை எவ்வாறு பெருக்கிக் கொண்டார்களென்பதை ஆராய்ந்தால் இவ்வுண்மையை உணரலாம். உதாரணமாக, பள்ளி பண்ணைக்காரனைப் பலவாறாக வருணித்து அவனைக் கும்பிடுவதாகச் சில செய்யுட்கள் பள்ளுகளில் காணப்படுகின்றன. இலக்கியப் பண்பு நிறைந்த திருவாரூர்ப்பள்ளு, குருகூர்ப்பள்ளு தொடங்கி எல்லாப் பள்ளுகளிலும் இது நிலைத்த உறுப்பாக ஆய்விட்டது. இதற்கு, முக்கூடற்பள்ளில் காணப்படும் குறிப்பெல்லாம், 'ஐயா பராக்குப் பராக்கும்மைக் கும்பிட்டேனாண்டே' (௧0௩) என்ற ஒரு வரிதான். மாடு முட்டி மயங்கிவிழுந்த பள்ளனைக் கண்டு மூத்தபள்ளி 'சக்களத்தி புலைமருந்தின் வெறியோ' (௧௧௭) என்று கூறுகிறாள். அவ்வளவுதான்; மருந்து செய்யும் விதத்துக்கு இரண்டு செய்யுட்களும் மருந்தின் குணத்துக்கு இரண்டு செய்யுட்களும், குருகூர்ப்பள்ளில் இடம் பெற்றுவிட்டன. கார்காலம் வரக் கண்டு முக்கூடலிலிருந்த தலைவியின் கண்கள் கலங்கின என்று இரண்டு வரிகள் (௪௧) முக்கூடற் பள்ளில் காணப்படுகின்றன; திருமலைப் பள்ளு செய்தவர், (நந்திக்கலம்பகத்தே கார்காலத்தைக் குறித்த பாட்டுக்கள் அமைந்த முறையில்) மூன்று செய்யுட்களை அமைத்துவிட்டார்.

பெருக்கம்

முக்கூடற்பள்ளில் காணப்படும் வாக்கு நயம், குருகூர்ப் பள்ளு திருமலைப்பள்ளு நீங்கலாக, ஏனைய பிற்காலப் பள்ளுகளில் காணலரிது. 'முக்கூடற் பள்ளைப்போல ஒரு பள்ளும், குற்றாலக் குறவஞ்சியைப்போல ஒரு குறவஞ்சியும், வருணகுலாதித்தன் மடலைப்போல ஒருமடலும் இல்லை' என வழங்கும் பழமொழியும் இவ்வுண்மையைக்கொண்டே எழுந்திருக்கிறது.

முக்கூடற் பள்ளு 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிற்றென்பது மேலே கூறப்பட்டது. அடுத்த நூற்

றாண்டிலே தலங்கள் தோறும் பள்ளுப் பிரபந்தங்கள் ஏற்படலாயின. சிறந்த உபகாரிகளையும் தம் வழிபடு கடவுளையும் பிரபந்தங்கள் செய்து போற்றி வந்த புலவர்கள், பழைய மரபையொட்டி, கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களைச் செய்வதோடமையாது, அதிகக் கல்வியறிவு பெறாத சாமானிய மக்களும் படித்து அனுபவித்துப் பாடவும் ஆடவும் ஏற்றவையான பள்ளு குறவஞ்சி போன்ற பிரபந்தங்களையும் செய்யலாயினர். 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்நூல்கள் பெருகலாயின. மக்கள் மனத்தைக் கவரத்தக்க இசைப்பாடல்களும் நடிப்பதற்கேற்ற உறுப்புக்களும் இவற்றில் அமைந்திருந்தமையின், பொதுமக்கள் இந்நூல்களைப் பயிலுவதில் ஈடுபட்டது இயல்பே. விநாயகர், முருகன், திருமால், சிவபெருமான், அம்பிகை அடியார்கள், உபகாரிகள் முதலியோரைப் புகழ்ந்து இப்பிரபந்தங்கள் செய்யப்பட்டன; உதாரணம்: பருளை விநாயகர்பள்ளு, கதிரைமலைப்பள்ளு, குருகூர்ப்பள்ளு, சிவசயிலப்பள்ளு, கண்ணுடையம்மைபள்ளு, வடகரைப் பள்ளு. சில மரபுகளின் பெருமையை விளக்கும் பொருட்டும் இரண்டொரு பிரபந்தங்கள் தோன்றின; உதாரணம்: மாந்தைப் பள்ளு (விசுவகர்ம மரபு), வைசியப்பள்ளு (வைசிய மரபு).

பாட்டுடைத் தலைவர்

ஆலயங்களில் திருவிழா நடந்தகாலத்து, மக்கள் அவ்வத் தலத்துக்குரிய பள்ளையும் குறவஞ்சியையும் பாடியும் கூத்தாக ஆடியும் அனுபவித்து வந்தார்கள். திருவாரூரிலே திருவிழாவுக்காகக் கொடியேற்றும் போதும் இறக்கும்போதும் அத்தலத்துக்குரிய பள்ளும் குறவஞ்சியும் பாடி நடிக்கப்பட்டுவந்தன. தஞ்சை இராசராசேச்சுரத்திலும் அப்படியே. திருநெல்வேலி எங்கும் முக்கூடற் பள்ளு இவ்விதம் பாடியாடப் பெற்றது; கோலாட்டத்துக்கேற்ற பாட்டாயிருந்தது இது.

இவ்வாறு இந்தப் பிரபந்தங்களை மக்கள் அனுபவித்து நாடகமாக நடித்து வருகையில், காலப்போக்கையும் நாட்டில் நிகழ்ந்த மாறுதல்களையும் அனுசரித்துப் பழைய முறைகளை மாற்றிக்கொள்வது அவசியமாயிற்று. முதலில் தோன்றிய

பள்ளுப் பிரபந்தம், குறிப்பிட்ட ஓரிடத்து மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாய் அமைந்திருந்தது. இது தமிழ்நாடு முழுவதிலும் பரவியகாலத்து, வெவ்வேறிடத்துள்ள மக்களியல்புக் கேற்றவாறு இதன் உறுப்புக்களை விரிவாக்கவும் சுருக்கவும் வேண்டியது இன்றியமையாததாயிற்று. திருவாரூர்ப்பள்ளு, பிற்காலத்தில்கட்டியக் காரன் வரவு என்ற உறுப்பும், பல்லவி அனுபல்லவி. சரணம் என்ற பகுதிகளையுடைய கீர்த்தனங்களும் சேர்த்துப் பெருக்கப்பட்டது என அந்நூல் முகவுரையால் தெரிகிறது. வைசியர் திரைகடலோடியுந் திரவியம் தேடுபவராகையால், அவர்களைச் சிறப்பிக்க வந்த பள்ளில், கப்பற்பாட்டும் சரக்குக்களின் வகையும் கூறப்படுதல் இயல்பே.

மாறுதல்கள்

முக்கூடற் பள்ளு நாடகம்

முக்கூடற் பள்ளு முக்கூடலைச் சார்ந்த பிரதேசங்களில் மட்டுமன்றி, திருநெல்வேலி ஜில்லா முழுவதும் பிரசாரமெய்தியிருந்தது; ராஞ்சில் நாட்டிலும் இப்படியே, மிகச் சமீபகாலம் வரையில் ஓலையேட்டி லெழுதிப் படிப்பதே பெரு வழக்கு; புதிதாகத் தமிழ் படிக்கத் தொடங்கும் சிறுவர்களுக்கு ஆசிரியர்கள் முக்கூடற்பள்ளை ஏட்டில் எழுதிக்கொடுத்துப் படிக்கச் செய்வார்கள். இவ்வாறு எல்லா மக்களாலும் இது விரும்பிப் பயிலப்பட்டு வந்ததோடல்லாமல், விரித்துத் தனி நாடகமாகவும் அமைக்கப்பட்டிருந்தது. நாடகமாக அமைத்தவர் வேளான் சின்னத்தம்பி என்ற பெயரையுடைய என்னயினுப் புலவர். என்னயினுன், எல்லார்க்கு நயினுன் என்பதன் திரிபெனத் தோற்றுகிறது. திருக்கோளூர் வைத்தமாநிதி திருப்பணிமாலை யிலே அவ்வாலயத்தில் திருப்பணி செய்தாருள் காவை வடமலையப்பரோடு எல்லார்க்கு நயினுன் என்பார் ஒருவரும் பாராட்டப்படுகிருர்:

ஆசிரியர்

சதுரவித ரணசுமுகன் காரைக்காட்
டார்மரபில் தழைத்த மேகம்
விதுரன்மலர் மகள்கொழுநன் எல்லார்க்கு
நயினுன்போர் வேந்தர் வேந்து (கஉ)

என்ற அடிகளால் இவர் கார்காத்த வேளாளர் என்று தெரிகிறது. இவரும் சிறந்த போர்வீர ரென்பது,

> கருநடர்மா ளுவர்துளுவர் வங்காளர்
> பப்பரர்கை முகிழ்த்துப் போற்ற
> வருநட நீள் சூரதுரகன் எல்லார்க்கு
> நயினுன்தெம் மன்னர் ஏறு (ரு)

என்று அந்நூலே கூறுவதால் பெறப்படும். காவை வடமலையப் பருடன் இருந்தவர் அல்லது அவர் வழிவந்தவர் என இவரைக் கருத இடமிருக்கிறது. இவர் பெரும்புகழோடு விளங்கியமையின், பின்வந்தோர் இவர் பெயரைத் தரித்தல் இயல்பு. முக்கூடற்பள்ளை நாடகஞ் செய்த என்னயினுப் புலவர், இவருக்குப் பிறகு சிறிது காலங் கழித்துத் தோன்றி இவர் பெயரைத் தரித்திருந்தவர் என்று கருதலாம். பள்ளு பிரபலமடைந்த பின்னர்த்தான் அதை நாடகமாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். முதனூலுக்கும் நாடகத்துக்கும் இடையில் குறைந்தது அரை நூற்றாண்டு கழிந்திருக்கலாம். ஆதலால், 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்நாடகம் அமைக்கப்பட்டதெனக் கொள்ளலாம்.

என்னயினுப்புலவர் தமக்கு இயற்றமிழ் இசைத்தமிழ் பரதநாட்டியம் என்பவற்றை முறையே முத்துப்புலவர், நாச்சி முத்துப் பணிக்கர், சாமிப்புலவர் என்பார் கற்பித்தனர் என்று கூறுகிறார். நாடகத்தில் பெரும்பான்மையான பாட்டுக்களுக்கு ராகமும் தாளமும் அமைத்திருக்கிறார். 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடப்பெற்ற குற்றாலக் குறவஞ்சியில் இசையுறுப்புக்கள் பல அமைக்கப்பெற்றிருத்தலைக் கண்டு இவ்வாசிரியரும் நாடகத்தில் அவ்வுறுப்புக்களைச் சேர்த்திருக்கக்கூடும். நாடகம் ௩௨௦ க்கு மேற்பட்ட செய்யுட்களுடையது. புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாடல்களில் விருத்தமும் தருவுமே மிகுதிகம். விநாயகர் வணக்கத்தோடு நூல் தொடங்குகிறது. வெள்ளன் பள்ளியர் வந்தவுடன், கோமாளி யொருவன் வருகிறான்; தெருக்கூத்துக்களிலும் சம்ஸ்கிருத நாடகங்களிலும் வரும் விதூஷகன் என்ற பாத்திரத்துக்கேற்ப இவன் வருவிக்கப் பெற்றான் போலும். தெய்வங்களுக்குப் பொங்கலிடும்

போது மூத்த பள்ளிக்குத் தெய்வ ஆவேச முண்டாகிறது. கண்ட பள்ளன் அஞ்சித் தான் அவளிடத்தில் அன்போடு நடக்க இசைகிறான். ஆற்றுவெள்ளத்திலே பள்ளன் ஓடம் விட்டு இளையபள்ளி வீட்டுக்குப் போகிறான். பள்ளியர் ஏசிக் கொள்ளுகிறார்கள். மருந்து விவரித்துச் சொல்லப்படுகிறது. தச்சன் வந்து பள்ளனைத் தொழுவில் மாட்டுகிறான். மூத்த பள்ளிக்கும் பள்ளனுக்கும் தர்க்கம் நடக்கிறது. புதிதாய்ச் சேர்க்கப்பெற்ற பகுதிகள் இவ்வளவே. மக்கள் விருப்பத்துக் கேற்ப இவை அமைத்துக்கொள்ளப்பெற்றன போலும். பிற் காலத்துப் பள்ளுகளிலும் இவற்றிற்சிற்சில காணப்படுகின்றன.

பழனி வையாபுரிப் பள்ளில் கண்ட ௧௧௪, ௧௧௭ என்ற எண்ணுடைய இரு பாடல்கள், இந்நாடகத்திலும் காணப்படுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இலக்கியச் சுவை

இந்நூலின் இலக்கியச் சுவை பற்றி இங்கு எதுவும் கூறுதல் மிகை. அடுத்துள்ள கவியும் கூத்தும் என்ற கட்டுரை இதை அருமையாய் எடுத்துக்காட்டும். தமிழ் நாடெங்கும், பள்ளு என்றால் முக்கூடற் பள்ளும் ஒன்றுதான் தெரியும். 'பழகு தமிழ்ச் சொல்லருமை'யை இந்நூல் எங்குமே விளங்கக் காணலாம். தமிழ்ப் படிப்புக் குறைந்து போயுள்ள இக்காலத்தில், தமிழ் மரபும், மொழி வளமும், படித்தவர்களுக்கு அமைவதில்லை. படிக்காத பாமரமக்கள் நாவில்தான் உண்மையான உயிர்த் தத்துவம் நிறைந்த சொல்வளம், ஆட்சி, வேகம், உணர்ச்சியின் எழுச்சி என்பன காணமுடிகிறது. இன்றைய கல்வி கல்லாதார் நாவில் தமிழணங்கு நடம்புரியும் தன்மையை, சிறப்பாக இந்நூலில் மூத்த பள்ளியின் கூற்றாக அமைந்துள்ள பாடல்கள் எங்கும் பரக்கக் காணலாம். இவ்வகைத் தமிழை மக்கள் பயின்றுணர்ந்தால், மொழிவளம் பெருகும், உண்மையான வளம் பிறக்கும். சங்க காலம் என்று சொல்லுகிற பழைக்காலம் தொடங்கி இன்றுவரை வளர்ந்துள்ள தமிழ் இலக்கியச் சரித்திரத்தில், 17, 18 ஆம் நூற்றாண்டுகளின் காலத்தில் இந்நூலுக்குச் சிறப்பான இடம் உண்டு என்பது உறுதி.

முக்கூடற் பள்ளு

அல்லது

கவியும் கூத்தும்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

ஐம்பது வருஷத்துக்குமுன் தமிழ்ப் பள்ளிக்கூடம் திண்ணைப் பள்ளிக்கூடந்தான். பெஞ்சி, டெஸ்கு ஒன்றும் கிடையாது. ஆற்று மணல்த்தான் 'பர்ணிச்சர்'. பாடப் புஸ்தகமும் கிடையாது. அண்ணாவியும் (உபாத்தியாயர்) சட்டாம்பிள்ளையும் எழுதிப் போட்ட ஓலைச்சுவடிகள் தான் அந்தக் காலத்து 'வெளியீடுகள்'. சுவரில் சித்திரம் ஒன்றும் கிடையாது. சூரியோதயப் படம் வேண்டுமானால் 'ஏருனாக' வந்தவர்கள் கீழ்ச் சுவர்த் தொண்டியின் வழியாகப் பார்த்துக் கொள்ளவேண்டியது. பசுவையும் கன்றையும் நேர் நேராகவே பார்த்துக் கொள்ளலாம். படம் எதற்கு? ஹிப்போபொட்டமஸ் படமும் கிடையாது தான்; அது ஊருக்குள் எப்போதாவது வந்து ஊரைக் கலக்கிவிடவா போகிறது? இல்லை.

பள்ளிக்கூடம் இப்படியெல்லாம் வெறித்துப் பிள்ளைகளுக்கு உத்ஸாகம் கொடுக்கக்கூடியதாக யாதொன்றும் இல்லாமல் இருந்தாலும், அங்கே சாயங்காலத்தில் நன்றாய் உத்ஸாகம் கொடுக்கக்கூடிய காரியம் ஒன்று நடைபெறும். பள்ளிக்கூடத்துப் பெரிய பையன்களும், பள்ளிக்கூடத்துப் படிப்பை யெல்லாம் முடித்துவிட்டு வெளியேறிப் போன பையன்களும், சேர்ந்து கோலாட்டம் போடுவார்கள். பாட்டுக்கள், மார்க்கண்டேய நாடகம்,

அரிச்சந்திர நாடகம், குற்ருலக் குறவஞ்சி முதலிய நூல்களிலிருந்துதான். முக்கூடல்ப் பள்ளிலிருந்தும் பாடல்கள் வரும். கோலாட்டம் என்ருல் பேனுக்குச்சி, முருங்கைக் குச்சி கொண்டு, எங்கே முறிந்துபோகுமோ என்று பயந்து பொத்திப் பொத்தி அடிக்கிற வியாபாரம் அல்ல. பக்கத்து மலையிலிருந்து வந்த நாங்கு, கோங்கு, தேக்கு முதலிய வைரம் பாய்ந்த மரங்களினுல்ச் செய்த கனத்த கம்பு தான், கோல். கணீர் கணீர் என்று அடி விழும். சத்தம் இரண்டு தெருவுக்குக் கேட்கும். முற்றத்தில் நின்று தான் கோலாட்டம். கால் மிதிக்கிற தாளத்தில் தரை புழுதிக்காடாய்ப் போய்விடும்.

ஆற்று வெள்ளம் நாளை வர—
ஆற்று வெள்ளம் நாளை வர—
ஆற்று வெள்ளம் நாளை வர—

என்று மூன்று தடவை அடியை நிரவல் செய்துவிட்டு, பிறகு எதுகையோடு,

தோற்று தேகுறி

என்று வேகம் விழும்போது, பார்ப்பவர் எல்லாருடைய உள்ளமும் பாட்டிலும் ஆட்டத்திலும் கலந்துகொள்ளும். அதில் ஒரு பரவச உணர்ச்சிதான். ஐம்பது வருஷமாயும் எனக்கு மறக்க முடியவில்லை.

இப்படிக் கோலாட்டத்தில்க் கேட்ட, முக்கூடல்ப் பள்ளின் அடிகள் அங்கொன்று இங்கொன்று ஞாபகத்தில் இருந்தது; அவ்வளவுதான். இங்கிலீஷ் முறைப் பள்ளிக்கூடத்துக்குள்ப் போனபிறகு, கோலாட்டமாவது முக்கூடல்ப் பள்ளாவது! எல்லாம் ஒதுங்கிவிட்டது. சாயங்காலத்தில் ட்ரில் மாஸ்டர் ட்ரில் வாங்கும்போது, ‘ஸ்டாண்ட் அட் ஈஸ்,—நம்பர் ஒன்,—டூ,—த்ரீ’ என்று சொல்லவும், பையன்கள் யாதொரு ஒற்றுமைப்பாடும்

இல்லாமல் சத்துப் புத்தென்று எருத்தட்டி நிற்கும் அலங்கோலந்தான் மிஞ்சியது.

முக்கூடல்ப் பள்ளும் கோலாட்டமும் எங்கே! 'ஸ்டாண்ட் அட் ஈஸ்' எங்கே!

முக்கூடல்ப்பள்ளைப் பாடுவாரும் இல்லை, புஸ்தகமும் இல்லை. 'சரி, முக்கூடல்ப் பள்ளு அஸ்தமித்துப் போய் விட்டது' என்று எண்ணி விட்டேன்.

* * * *

சுமார் இருபது வருஷத்துக்குமுன் சென்னை குஜிலிக் கடைத்தெருவில் ஒரு வியாபாரி தமிழ்ப்புஸ்தகங்களைக் கீழே பரப்பி விற்றுக் கொண்டிருந்தான்; பீங்கான் கடையின் முகப்புக்குப் பக்கத்தில்த்தான். டிட்மார் லாந்தல் வாங்கப்போன நான், புஸ்தக வியாபாரியிடம், யோசனை ஒன்றும் ரொம்பவும் பண்ணிவிடாமல், "முக்கூடல்ப் பள்ளு இருக்கிறதா?" என்று கேட்டேன். "ஆமாம், இருக்கிறதையா" என்று சொல்லி, ஒரு புஸ்தகத்தை எடுத்து, தூசியை நன்றாய்த் தட்டிவிட்டு (அந்தக் காலம் தார் போடுகிற வழக்கம் கிடையாது தெருக்களுக்கு) "இதோ" என்று கையில்க் கொடுத்தான். விலை எட்டணா என்று போட்டிருந்தது. "இதா விலை?" என்று கேட்டேன். "புஸ்தகத்தில் போடுகிற விலை அது. ஒன்றரை அணா கொடுங்கள்" என்றான் அவன். நானும் சந்தோஷமாய் ஒன்றரை அணாவைக் கொடுத்து விட்டுப் புஸ்தகத்தை வாங்கிக் கொண்டேன்.

புஸ்தகம் எப்படி இருந்தது? கடுதாசி·செய்கிறவர்கள் தமிழ்ப் புஸ்தகத்தை அட்டையைப் பார்த்த உடனேயே இனம் கண்டு பிடித்துவிட வேண்டும் என்று, அதற்குத் தனியான மார்பிள் பேப்பர். தூசியைத் துடைத்தால் அப்படியே திரைந்து கையோடு கையாய் வந்து விடும். முதுகுக்கும் முக்குக்கும் காலிகோ. வைதிகமான

காலிகோ; அதாவது காவி ஏற்றிய காலிகோ. சாதாரணக் காவித் துணிதான்; உபசாரமாகக் காலிகோ என்று சொல்லுகிறது. அட்டையைத் திறந்து உள்ளே பார்த்தால் அது ஒரு தனியான கடுதாசி. டக்கா மஸ்லின் எல்லாம் தோற்றுப் போய்விடும்: அவ்வளவு மென்மை; அவ்வளவு மிருது. முதல் பக்கத்தைத் திருப்பினேன். அப்படியே மத்தியில் கிழிந்து விட்டது. எல்லாவற்றையும்விட விசித்திரம், அச்சு வாகனம் ஏறிய அழகுதான். ஏதோ ஒரு ஏட்டைக் கம்பாஸிட்டர் - பையன் கையில் கொடுத்துவிட்டு, " உன் இஷ்டம் போல் அச்சைக் கோத்து வை " என்று சொல்லிவிட்டார் 'பதிப்பாசிரியர்'. அகராதி, இலக்கணம், யாப்பியல் எல்லாவற்றையும் ஹதம் பண்ணினான் பையன். எப்படியோ தவிட்டு நிறமாய் இருந்த கடுதாசியில் கறுப்பு அடைசி நூலாகவே ஆய்விட்டது. ஒரு செய்யுளையாவது உருவாகக் காணமுடியவில்லை—ஏன், ஒரு அடியைக் கூடக் காண்பது கஷ்டமாய் இருந்தது. நூலை வாசிக்கிறதை விட, நூறு குறுக்கெழுத்துப் போட்டியைத் தீர்த்து விடலாம்!

* * * *

இவ்வளவு கஷ்டமும் ஏமாற்றமும் நீங்கிவிடுகின்றன, இப்போது ஸ்ரீ. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் பதிப்பிட்டுத் தந்திருக்கிற முக்கூடற் பள்ளைக் கையில் வைத்துக் கொண்டு பார்க்கும்போது. சின்னஞ் சிறு அழகான புஸ்தகம்; கைக்கே அலங்காரம். அச்சோ, இதுவரை தமிழ்ப் பாடல் புஸ்தகம் இப்படி வந்ததில்லை என்று சொல்லும்படி அவ்வளவு அழகாய் அமைந்தது. பொதுவாக, தமிழ்ப் புஸ்தகங்களைப் பதிப்பிக்கும் அஜாக்கிரதையைக் கவனித்தால், கட்டிடம், அச்சு முதலான புறவிஷயங்களைப்பற்றி இதுவும் சொல்லவேணும், இன்னமும் சொல்லவேணும் என்று தோன்றுகிறது.

புஸ்தகத்துக்குக் கொடுத்திருக்கிற முன்னுரை, பள்ளுப் பிரபந்தத்தைப்பற்றி எத்தனையோ விஷயங்களை, மிச்சம் இல்லை என்று சொல்லும்படி விளக்குகிறது. 39 பக்கத்தில் 13 விஷயங்களை விளக்கி யிருக்கிறது*: நூல் திருநெல்வேலியில் தாம்பிரவர்ணி, சிற்றாறு இரண்டும் கூடுகிற முக்கூடலில் எழுந்தருளிய செண்டலங்காரப் பெருமாளைக் கொண்டாட எழுந்தது; நூலாசிரியர் பெயர் தெரியாது. ஆனால் அவர் காலம் கி.பி. 1680. அவர் வைணவர். அக்காலத்து அரசியல் நிர்வாகம் செய்த வடமலையப்ப பிள்ளையன், ஆறை அழகப்ப முதலியார் முதலானவர்களுடைய சரித்திரக் குறிப்புகள்—இவ்வித மாகப் பல விஷயங்கள், ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்ட வர்களுக்கு உதவி புரிவனவாய் இருக்கின்றன. மேலும், இதர பள்ளுப் பிரபந்தங்கள் இருபத்தைந்துக்கு விவரம் கொடுத்திருக்கிறது. முன்னுரையிலுள்ள விஷயங்கள் எல்லாம் ரஸமான விஷயங்கள். ரொம்பவும் சிரத்தை எடுத்துச் சேகரித்துத் தந்திருக்கிறார்கள் அருணாசலம் பிள்ளை அவர்கள். அவர்களுக்குத் தமிழர்களாகிய நாம் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

* * * *

இனி நூலைப்பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

சரியானபடி பாடல்களை அனுபவிக்க வேண்டுமானால் பாட்டும கூத்தும் கலந்த நாடகத்திலப் பார்த்து அனுபவிக்க வேண்டும். புலவர்கள், பள்ளி பள்ளர் வேஷந் தரித்து ஆடிக் காட்டிய நாடகமே முக்கூடற்பள்ளு. தமிழைக் கற்றவர்களே அதை அனுபவிக்க அதிகாரிகள். ஏதோ கல்வி யறிவில்லாதவர்கள் எளிதாக அனுபவித்து

---

* இது முதற் பதிப்பைக் குறிப்பிடும்.

விடுவார்கள் என்று எண்ணி எழுதியதல்ல. பாஷைதான் குடியானவர் பாஷை. ஆனால் அது அருமையான கவி இயலையும் நாடக இயலையும் நடன இயலையும் சுட்டிக் காட்ட வந்தது.

பர்ன்ஸ் என்ற கவிஞர், ஸ்காட்லாந்து தேசத்து எழுத்தறியாத குடியானவர் பாஷையிலேயே கவிகளை இயற்றினர். யார் அனுபவிப்பதற்காக அந்தக் கோணல் பாஷையில் பாடினர்? கார்லைல் போன்ற சகலகலா பண்டிதர்கள் அனுபவிக்க அல்லவா பாடினர்? அப்படியே முக்கூடல் பள்ளும் ரஸிகர்கள், கற்றவர்கள் அனுபவிக்கவே பாடியது.

* * *

பாடல்களையே கொஞ்சம் அனுபவிக்கப் பார்ப்போம். நாடக பாத்திரங்கள் இரண்டு: மூத்த பள்ளி, மற்றும் இளைய பள்ளி. மூத்த பள்ளி முதலில் வந்து பாட்டும் கூத்துமாகத் தன் ஊரான முக்கூடலை வர்ணிக்கிறாள்:

சோதி மாமணி வீதி நெருக்கும்
  சுரும்பு பாடி இரும்பை உருக்கும்
போதில் மேய்ந்(து)இள மேதி செருக்கும்
  புனமெல் லாம்தண் மலர்விண் டிருக்கும்
ஆதி நாயகர் செண்டலங் காரர்
  அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே.

முக்கூடல்க்காரி முக்கூடலைச் சிறப்பித்துப் பாடியாய் விட்டது. பிறகு வேறொரு ஊர், மருதூர்—அந்த ஊரிலிருந்து வந்த இளைய பள்ளி தன் ஊரைப் பற்றிப் பாடுகிறாள். என்ன சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்த்த வண்ணமாய் இருக்கிறோம். பாடலும் ஆடலும் வருகின்றன :

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலை வாய்க்கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதீசர் வாழ்மரு தூர்எங்கள் ஊரே.

மத்தம் - ஊமத்து. மதோன்மத்தர் - பித்தரான சிவபிரான்.

இப்படி ஊர் இரண்டு, சமயம் இரண்டு, தாரமும் இரண்டு. இந்த ஜோடியைப் பார்க்கும்போது ரஸமாய்த் தானே இருக்கும் !

பிரபலமாகத் தெரிந்த பாட்டு ; மழை வருவதற்கான குறிகளைக் கண்டு பள்ளர்கள் களிக்கிற பாடல் :

ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்று தேகுறி - மலை
யாழ மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னு தே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக்கு தே - கேணி
நீர்ப்படு சொறித்த வளை
கூப்பிடுகு தே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்
தேற்றடைக்கு தே - மழை
தேடிஒரு கோடி வானம்
பாடி ஆடு தே.

நன்செய்ப் பயிர் செய்து பழகியவர்களுக்கு இந்தப் பாட்டு ரொம்ப ரொம்பக் கொண்டாட்டமாய் இருக்கும்.

ஹோமர் பாடிய கிரேக்கக் காவியத்தில் கப்பல்களின் பெயரை அடுக்கியிருக்கிறது வெகு அருமை என்று கிரேக்கர்கள் சொல்லுவார்களாம். நம்முடைய நாட்டுப் புறங்களில் உள்ளவர்கள் மாடுகளுக்குப் பெயரிட்டு

வழங்குவது சாதாரணம், அந்த மாட்டுப் பெயர்களைக் கோத்து வாங்கியிருப்பதைப் பார்ப்போம் :

குடைக்கொம்பன் செம்மறையன்
குத்துக்கு ளம்பன்மே மை
குடைச்செவியன் குற்ருலன்
கூடுகொம் பன்
வட்டர்ப் புல்லை கரும்போரான்
மயிலை கழற்சிக் கண்ணன்
மட்டைக்கொம் பன்கறுப்பன்
மஞ்சள் வாலன்.

இது போலப் பள்ளிகளின் பெயர்கள் :

சின்னி குருந்தி அருந்தி மருதி
செல்லி இருவி எல்லி கலிச்சி
திருவி அணைஞ்சி வெழுதி பெரிச்சி
செம்பி வம்பி தம்பிச் சாள்
நன்னி உடைச்சி சடைச்சி குமுக்கி
நல்லி பூலி ஆலி வேலி
நாச்சி பேச்சி சுந்தி எழுவி
நாகி போகி யே.

மாட்டுப் பெயர்களும் பள்ளிகளின் பெயர்களும் காதில் விழும்போது அப்படியே நாம் நன்செய்க்கும் நாட்டுப் புறத்துக்கும் போய் விடுகிறோம். இதெல்லாம் தமிழர்கள் தான் அனுபவிக்கக் கூடியது. இதிலிருந்து, கிரேக்கர்கள் கப்பல்களின் பெயர்களை அனுபவிக்கிறதற்குக் காரணம் இன்னதென்று தெரிகிறது.

ஹாஸ்யமாகவும் வேறு விதமாகவும் பல பாடல்கள் இருக்கின்றன. சில நாகரிகமாக இருக்கும் ; சில கொஞ்சம் பட்டிக்காட்டுப் பாங்காகவும் போய்விடும்.

இதெல்லாம் போக, ஆசிரியருக்குப் பக்தி பாவமும் மிகுதியாக உண்டு என்பதை ஒரு செய்யுளின் மூலம் பார்க்கலாம்.

பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வருக்குத் தனிப் பெருமை. ஒரு நாட்டில் மகான் பிறக்கிறது மிக்க அருமை. சமுத்திரத்தில் முத்து விளையும் அருமைதான். அவருடைய கடாக்ஷம் உண்டானல், இயல் இசை நாடகம் ஆகிய மூன்று தமிழ்ப் பண்புகளும் கலந்ததாய், முக்கூடல் அழகர் பள்ளைப் பாடி விடலாம் என்ற பக்திதான், பாட்டின் பாவம் :

முத்தேவிற் பெரியவர் கரியவர்,
 முப்பான்மைத் தொழிலினர் எழிலினர்
 முக்கூடற் குழகர் மெய் யழகர்பள்
 —மூவகைத் தமிழ்க்கே
நத்தாகக் குருகையில் வருகையில்
 நட்பாகப் புளிநடு வெளிபடு
 நற்போதத்(து) அருள்பொழி திருவிழி
 —ஞானவித் தெனக்கே.

முப்பான்மைத் தொழில் - ஆக்கல், காத்தல், அழித்தல். நத்து - முத்து. திருவிழி: கடாக்ஷமே ஞானம் உண்டாவதற்கு வித்து என்கிருர்.

அனேக பாடல்கள் முக்கூடல்ப் பள்ளில் வாய்ப்பாய் அமைந்திருக்கின்றன. நாம் நன்ருய் அனுபவிக்க வேண்டிய பாடல்கள்.

பள்ளிக்கூடங்களில், பூர்வமாக ஏற்பட்டபடி, பையன்களும் பெண்களும் ஆட்டத்தோடும் கோலாட்டத்தோடும் முக்கூடல்ப் பள்ளின் பாடல்களைப் பாடம் செய்ய வேண்டும். ஆண்டு விழாக்களில் அப்படி ஆடிப் பாடுவார்களானல் வந்தவர்களுக்கு அது தனி விருந்தாகவே இருக்கும்.

முக்கூடற் பள்ளு

காப்பு

கலிப்பா

பூமேவு நீலவெற்பில் பொன்னிறமு முண்டெனப்பூ
மாமேவு முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே
பாமேவு சொற்புரப்பர் பாவலரென் றெட்டெழுத்து
நாமேவு பத்தர்பத்து நாவலருங் காப்பாமே.

முக்கூடல். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சீவலப்பேரி என்னும் கிராமம்; சித்திரா நதியும் கோதண்டராம நதி என்ற சிற்றோடையும் தாமிரபர்ணியுடன் கலக்கும் இடத்தில் இவ்வூர் அமைந்திருப்பதால் முக்கூடல் எனப் பெயர்பெற்றது. காவிரியாறு கடலொடு கலக்குமிடத்தி லமைந்த காவிரிப்பூம்பட்டினத்தைப் பட்டினப்பாலை கூடல் என்று கூறும்: "தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும், மலியோதத்து ஒலிகூடல்" (௧௭ - ௧௮). 'காவிரியன்றியும் பூவிரி புனலொரு, மூன்றுடன் கூடிய கூடல் அனையை' என்ற பதிற்றுப் பத்து (௫௦) வரிகளையும், 'மூன்றுடன் கூடிய கூடல் என்றது, அக் காவிரிதானும் ஆன் பொருநையும் குடவனாறும் என இம் மூன்றும் சேரக் கூடிய கூட்டம்' என்ற அவ்வரிகளின் உரையையும் பார்க்க. செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலுக்காவில், பாலாறு சேயாறு வேகவதி என்ற மூன்றாறுகளும் கூடும் இடத்திலமைந்த ஊர் திருமுக்கூடல் என வழங்குகிறது. இங்ஙனமே, திருவாரூருக்கு அருகில் பள்ளியின் முக்கூடல் என்று பெயரோடு பாடல் பெற்ற ஸ்தலமொன்று உள்ளது. முக்கூடல் என்பது வடமொழியில் திரிவேணி சங்கமம் என்னப் பெறும்.

பள்ளு: பள்ளர் பள்ளியராகிய உழவர் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டிருத்தலால் நூல் **பள்ளு** எனப் பெயர் பெறும். இசையோடு பாடுதெற்கென்றே நூல் செய்யப் பெற்றமை யால், **பள்ளிசை** எனவும் கூறப்பெறும் (காப்பு, க, உ). 'கண் ணுடைய நாச்சியார் பள்ளிசை' என்பது **கண்ணுடையம்மை பள்ளு.** பாடி ஆடுதற்கும் இது உரியதாதலால், **பள் முலைகைத்தமிழ்** என் றும் கூறுவர் (ச). நூலானது, பள்ளியர் இருவர் ஏசுதலாகிய ஏசல் என்ற பகுதியைக் கொண்டு முடிவதால், **பள்ளேசல்** என்னவும் பெறும் (ரூ). 'தியாகர்க்குப் பள்ளேசல் பாட' - **தியாகேசர் பள்ளு.** 'குருகை நகராழ்வார்க்குச் செந்தமிழாற் பள்ளேசல் செப்பவே' - குருகூர்ப் பள்ளு.

(குறிப்புரை) காப்பு. பூ - நூல் தொடங்குதற்குரிய மங்கல மொழி. நீலவெற்பு, திருமால். பொன்னிறம், திருமகளுக் குரியது. பூ மா மேவு - தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகள் மேவும். அழகர் என்பது, முக்கூடலில் கோயில்கொண் டெழுந் தருளியிருக் கும் திருமாலின் திருநாமம். அலங்காரர், செண்டலங்காரர் எனவும் நூலுள் வரும். பள் இசைக்கு - பள்ளுப் பிரபந்தத்துக்கு. பத்தர் - ஆழ்வார்கள்.

கடவுள் வணக்கம்

திருமால்

சிந்து

மணிமரகதச் சோதியர் ஆதியர்
மனுமரபினிற் காவலர் கோவலர்
மறைமுதல்வர் முக் கூடலர் ஏடலர்
—வாசத் துளவோர்
அணிஅரவணைத் தூயவர் மாயவர்
அடியவர்மனப் பூரணர் காரணர்
அழகர்பள்ளிசைப் பாவளம் நாவளர்
—மாகத் தருவோர்

துணிவொடுதிருத் தாள்வலி தோள்வலி
துணையெனமுதற் கூறிய தேறிய
சுரர்பதிபகைக் கீறுள வீறுள
—சூரத் துடனே
பணிவிடைசெயத் தானவர் வானவர்
பழமகபதிப் பேரியல் சீரியல்
பகரிளமுறைக் கோனென வானெறி
—பாலிப் பவரே. க

க. கடவுள் வணக்கப் பாடல்கள் நான்கும் சந்தத்திலமைந் துள்ளன. தனதனதனத் தானன தானன, தனதனதனத் தானன தானன, தனதனதனத் தானன தானன - தானத் தனனு என்பது இப்பாடலின் சந்தம். மரகதச் சோதியர் : 'பச்சை மாமலைபோல் மேனி'யரான அழகர். காவலர் - இராமபிரான். கோவலர் - ஆய ரிடையே வளர்ந்த கண்ணன். முக்கூடலர் - முக்கூடலில் எழுந் தருளிய திருமால். ஏடலர் வாசத் துளவோர் - இதழ்கள் விரிந்த வாசமுடைய துளவமாலையை யணிந்தவர். அரவு அணை-பாம்பாகிய பாயல். திருத்தாள் வலி தோள்வலி துணை என-எல்லாம்வல்ல உனது திருத்தாள் வலியும் திருத்தோள் வலியுமே எனக்குத் துணையாவன என்று. கூறிய சுரர்பதி - வேண்டிய தேவேந்திரன். பகை - அவ னுக்குப் பகைவரான அசுரர். பகைக்கு ஈறு உண்டு பண்ணும் வீறு உள்ள சூரத்துடன் என்க. தானவர் - அசுரர். தானவர் வானவர் பணிவிடை செய என மாற்றுக. மகபதி - யாகத்துக்குத் தலைவனான இந்திரன்; மகம் - யாகம். இளமுறைக்கோன் - உபேந் திரனாகிய திருமால்; திருமாலைப் புதல்வராகப் பெறவேண்டுமெனத் தவங்கிடந்த காசியபருக்கும் அதிதிக்கும் புதல்வராய் வாமன ரூபத் தோடு திருமால் தோன்றியமையின், இந்திரனுக்குத் தம்பியாகச் சொல்லப்படுவார்.

சூரத்துடன், தானவர் வானவர் பணிவிடை செய, இளமுறைக் கோன் என வான் நெறி பாலிப்பவர், அழகர் பள்ளிசைப் பாவளம் நாவளமாகத் தருவோர் என்று முடிக்க.

கருடாழ்வார்

தாரத்திரு பேரிற் கலவித்
தாகத்தின ளாகத் தருமச்
சாலைப்புவி காலைத் தடவத்
—தலையணை கொடுத்தே

ஆரத்தன பாரத் திருவுற்
றசைப்பட ஓசைத் திரைநெட்
டாழிக்கிசை யூழிச் சயனத்
—தழகர்பள் ளிசைக்கே

சேரத்தளை பூரித் தசையைச்
சீரைப்பகர் வாரைக் கருதித்
தேடித்திசை யோடித் திரியத்
—திறமிலை யதற்கே

கோரச்சிறை வீரப் புயமுக்
கூடற்பதி யாடற் கருடக்
கோனைப்பெரி யோனைப் பரவக்
—குறைவிலை நமக்கே. உ

உ. தானத்தன தானத் தனனத், தானத்தன தானத் தனனத், தானத்தன தானத் தனனத் - தனதன தனத்தா என்பது சந்தம். தாரத்திரு பேர் - திருமாலின் இரு தேவியராகிய திருமகளும் நில மகளும். புவி - நிலமகள். திரு - திருமகள். ஓசைத் திரையாழி - ஒலிக்கின்ற அலையுடைய கடல். தளை, அசை, சீர் செய்யுளுறுப்புக்கள்; இவற்றைப் பகர்வாரை. கோரச் சிறை - அச்சந் தரத்தக்க சிறகு. பெரியோனை - பெரிய திருவடியாகிய கருடனை.

சேனை முதலிகள்

பூவலயக் காவலன் எனவும்
பூவைநிறச் சேவையன் எனவும்
போதனுமெட் டாதவன் எனவும்
—பொய்யா மறைதேர்

பாவலனுக் காவலன் எனவும்
பாரறியத் தாரணை செயும்என்
பாடலில்முக் கூடலின் அழகர்
—பள்ளே சலிலே

தாவரு சொற் கேவல முறினும்
சார்வுபொருட் சோர்வுகள் வரினும்
தாளவிதத் தோடணி கெடினும்
—தள்ளார் புலவோர்

தேவர்முடிப் பூவடி பிரசம்
சீலமணிக் கோலணி விலகும்
சேனைமுதற் கோனைமுன் னிடிலென்
—செய்வார் பிறரே. ௩

௩. தானதனத் தானன தனன, தானதனத் தானன தனன, தானதனத் தானன தனன-தய்யா தனனு என்பது சந்தம். பூவலயக் காவலன் - பூலோகத்தின் காத்தற் கடவுள். பூவைநிறச் சேவையன் - காயாம்பூவின் நிறத்தையுடையவன்: 'அசோதை பெற் றெடுத்த பூவைப் புதுமலர் வண்ணன்'—சிலப்பதிகாரம்: கஈ: 46-47; சேவையன் - சேவைக்குரியவன். போதன் - பிரமன். பொய்யா மறை - வேதம். கச்சியிலிருந்த பல்லவ வேந்தன் திரு மழிசையாழ்வார் தன்னைப் பாடாமையால் கோபங் கொண்டு, நகரைவிட்டுச் செல்லுமாறு ஆழ்வாருக்கு ஆணையிட்டபோது, அந் நகர்த் திருவெஃகாவிற் பள்ளி கொண்டிருந்த திருமால் ஆழ்வார் பாடிய 'கணிகண்ணன் செல்கென்றான்' என்ற பாடலைக் கேட்டு, அவர் விரும்பியவாறே தம்பாயலைச் சுருட்டிக்கொண்டு அவர் பின் சென்றார் என்ற செய்தியை, 'பொய்யாமறைதேர் பாவலனுக்கு ஆவலன்' என்ற தொடர் உட்கொண்டிருக்கிறதென்று கருதலாம். 'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டல்' என்பது குமரகுருபர சுவாமிகள் வாக்கு. தாரணை - தியானம். என் பாடலாகிய பள்ளேசலில் என்க. தாவரு சொல் - குற்றமற்ற சொல்; தா - குற்றம்.

சொல் கேவலம் உறினும் - சொற் சோர்வு வரினும். தாள விதத் தோடு அணி - தாளங்களும் அலங்காரமும். துருவம், மட்டியம், ரூபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம் எனத் தாளங்கள் ஏழுவகை. சேனை முதற்கோன் - விஷ்ணுகணங்களின் தலைவரான விஷ்வக்சேனர் என்னும் சேனைமுதலிகள்.

நம்மாழ்வார்

வித்தாரக் கமலையை விமலையை
மெய்க்கோவிற் புரமிசை உரமிசை
மிக்காகப் பரிபவர் தெரிபவர்
—வேதகிற் பரத்தார்

முத்தேவிற் பெரியவர் கரியவர்
முப்பான்மைத் தொழிலினர் எழிலினர்
முக்கூடற் குழகர்மெய் யழகர்பள்
—மூவகைத் தமிழ்க்கே

பத்தாகப் பெயர்தரு முயர்தரு
பத்தாளிற் பருதியர் சுருதியர்
பட்டோலைக் கெழுதரு முழுதுணர்
—பாவகுத் துரைத்தோர்

நத்தோலக் குருகையில் வருகையில்
நட்பாகப் புளிகடு வெளிபடு
நற்போதத் தருள்பொழி திருவிழி
—ஞானவித் தெனக்கே. ௪

௪. தத்தானத் தனதன தனதன, தத்தானத் தனதன தனதன, தத்தானத் தனதன தனதன - தானன தனத்தா என்பது சந்தம். கமலை - கமலத்தில் வீற்றிருக்கும் இலக்குமி. விமலை - மலமில்லாத வள்; இலக்குமி. மெய்க்கோவில் மிசை - சரீரமாகிய கோவிலில்: திருமார்பில். உரமிசை - மார்பிலே. பரிபவர் - விரும்பிச் சுமப் பவர். முத்தேவு - பிரம விஷ்ணு ருத்திரர். முப்பான்மைத் தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று.

குழகர் - இளையவர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் பயின்று வருவதால் பள் மூவகைத் தமிழ் என்று கூறப்படுகிறது. பத்தாகப் பெயர் தரும் பத்தாளிற் பருதியர் - பதின்மரெனச் சொல்லப்படும் பக்தர்களாகிய ஆழ்வார்களுள் சூரியனை யொத்தவர். சுருதியர். வேதியராகிய மதுரகவியாழ்வார். நம்மாழ்வார் அருளிய திருப்பாசுரங்களை மதுரகவிகள் பட்டோலை கொண்டனர் என்பது குருபரம்பரை கூறும் சரித்திரம். நத்து ஒலக் குருகை - சங்கு ஒலமிடும் குருகை; நத்து - சங்கு. இக்காலத்திலும் இங்குள்ள பொருநைத் துறையொன்றுக்குத் 'திருச்சங்கணித்துறை' என்ற பெயர் வழங்குகின்றமை அறியத்தக்கது. சங்கன் என்பவன் தன் பரிவாரங்களுடன் குருகையில் வந்து இறைவனை வழிபட்டு முத்தி பெற்றான் என்ற வரலாறொன்றைக் குருகைமான்மியம் கூறுகின்றது. குருகை - திருக் குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரி. புளி, நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த உறங்காப்புளி. தமிழ்க்கு, எனக்கு, அருள்பொழி திருவிழி ஞானவித்து என்க.

நூல்

பள்ளியர் வரவு

கலிப்பா

காவலராந் தேவரைமுன் கைதொழுது பின்னருமென்
ஆவலினா லேயழகர் ஆசூர் வளநாடும்
சீவலநன் னாடுமிசை தேர்ந்துரைக்கப் பண்ணைதனில்
ஏவலுறும் பள்ளியர்வந் தெய்தியது சொல்வேனே. ௫

௫. ஆசூர் வளநாடு அல்லது ஆசூர் வடகரை நாடென்பது முக்கூடல் நகரை உள்ளடக்கிய நாட்டின் பகுதி; சீவல நன்னாடு அல்லது சீவல மங்கைத் தென்கரை நாடென்பது மருதூரை உள்ளடக்கிய நாட்டின் பகுதி. இசை - இந்நாடுகளின் புகழ்.

முக்கூடற் பள்ளி

சிந்து

நெற்றியி லிடும் மஞ்சணைப் பொட்டும்
மற்றொரு திருநாமப் பொட்டும்
நெகிழ்ந்தகருங் கொண்டை ரெண்டாய்
வகிர்ந்த வகுப்பும்
பற்றிய கரும்பொற் காப்பும் கையில்
வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய
பாக்கும் ஒருசுருளுக் கொருக்கால்
நீக்கும் இதழும்
வெற்றிவிழிக் கெதிர்கொண் டிருகோ
டுற்றகறுப் பின்னு மெதிர்ந்தால்
விரிந்திடுமென் றெண்ணிச் சற்றே
சரிந்த தனமும்
சிற்றிடையும் செம்பொ னிடைக்கிடை
பெற்றிடும் பட்டாங்கு மிலங்கத்
திருமுக் கூடற் பள்ளி
தோன்றி னாளே. ௬௨

௬௨. மஞ்சணைப் பொட்டு - எண்ணெய்க் குங்குமத்தாலிட்ட பொட்டு ; 'அழகொழுகிய மஞ்சணைப் பூச்சோ' - **திருமலை முருகன் பள்ளு.** திருநாமப் பொட்டு இட்டது, மூத்த பள்ளி முக்கூடலழகர் அடியாள் என்பதைக் குறித்தது. கரும்பொற் காப்பு, இருப்புக் காப்பு. இதழ், வாயிதழ். பட்டாங்கு - ஒரு சேலை வகை.

கலிப்பா

உள்ளத்தி லூசலிடும் உல்லாசப் பார்வைவிழிக்
கள்ளத்தி னிரும்புங் கல்லுங் கரையாதோ

வெள்ளத்தி லேதுயில்கார் மெய்யழகர் முக்கூடல்
பள்ளத்தி யார் அழகு பார்க்க முடியாதே. எ

எ. வெள்ளத்திலே துயில் கார் மெய்ய்ழகர் - பாற்கடலிலே பள்ளி கொள்ளும் கார் வண்ணராகிய அழகர். அழகு பார்க்க முடியாதே : 'பள்ளி இளையாளழகைப் பார்த்தாற் பசிபோமே' திருமலை. எ.

மருதூர்ப் பள்ளி

சிந்து

செஞ்சரணப் படமிடுங் கொச்சியின்
மஞ்சளும்பூம் பச்சையும் மணக்கச்
சிறியநுதற் பிறைவெண் ணீற்றுக்
குறியொளி வீசப்
பஞ்சலைமீன் கெண்டைகள் எனவே
அஞ்சனந்தோய் கண்கள் இரண்டும்
பக்கக் கெண்டையினுங் குழையினுந்
தைக்கக் குதிக்க
நெஞ்சுகவர் கனதன மாமதக்
குஞ்சரவிணைக் கோடுகள் அசைய
நீல்வடக் கல்லுடன் கோவைத்
தாலியும் இலங்க
வஞ்சிமருங் கணிபூம் பட்டும்
பஞ்சவர்ணத் தழகுந் துலங்க
மருதூர்க்கு வாய்த்த பள்ளி
தோன்றினாளே. அ

அ. செஞ்சரணப் படமிடும் மஞ்சள் - சிவந்த பாதத்திலே அலங்காரமாக இடப்பட்ட மஞ்சள். கொச்சியின் மஞ்சள் - மஞ்ளுட் சிறந்த வகை. வெண்ணீற்றுக் குறி யென்றது, இப்பள்ளி சிவனடியாள் என்பதை உணர்த்துகிறது. பஞ்சலை - ஓரடி வளரக் கூடிய ஆற்று மீன்வகை. அஞ்சனம் தோய் - மை தோய்ந்த.

குழை, காதணி. குஞ்சரம் - யானை. இணைக்கோடுகள் - இரண்டு கொம்புகள். மருதூர் : இளைய பள்ளியின் ஊர் ; இது ஒரு சிவ ஸ்தலம். முக்கூடலுக்கருகே பொருநையாற்றின் தென்கரையிலுள்ளது. முற்காலத்தில் இங்கு அவ்வாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டிருந்தது.

கலிப்பா

ஆதிமரு தீசருக்கும் ஆட்பட் டழகருக்கும்
பாதியடி மைப்படுமோ பள்ளிமரு தூரிளையாள்
சோதிமுக மள்ளருக்கே தோன்றிவய லுற்றுநட்ட
போதிலொரு பூவில்ஐந்து பூவும் பயிராமே. கூ

கூ. மருதீசர் - இளைய பள்ளியின் ஊராகிய மருதூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருநாமம். இளையாள் : இம்மருதூர்ப்பள்ளி, பள்ளனுக்கு இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப்பட்டவள். பூ - போகம். ஒரு பூவில் ஐந்து பூவும் பயிராகுமென்றது, அவளுடைய சிறப்பைக் கூறியவாறு.

பள்ளன் வரவு

சிந்து

கறுக்குங் கிடாய் மருப்பின்
முறுக்கு மீசையும் - சித்ரக்
கத்தரிகை யிட்ட வன்னக்
கன்னப் பரிசும்
குறுக்கில் வளை தடி சேர்த்
திறுக்குங் கச்சையும் - செம்பொற்
கோலப் புள்ளி யுருமாலும்
நீலக் கொண்டையும்
சறுக்குந் தொறுங் குதிப்பும்
சுறுக்குந் தலை யசைப்பும்
தடிசுற்றி ஏப்ப மிட்டே
அடிவைப்பதும்

மறுக்கும் மது வெறிகொண்
டுறுக்குஞ் சிரிப்புந் தோன்ற
வடிவழகக் குடும்பன்
தோன்றி னானே. ௧0

௧0. கிடாய் மருப்பின் - ஆட்டுக்கிடாயின் கொம்பு போன்ற. வளை தடி - ஆயுதவகை. கச்சை - இடுப்பில் கட்டும் பட்டை. வடிவழகக் குடும்பன் - வடிவழகிய நம்பி என்பது வைஷ்ணவருக்குள் ஆடவருக்குச் சாதாரணமாய் வழங்கும் பெயர் ; அழகர் திருநாமத்தையே பள்ளன் தரித்திருக்கிறான். குடும்பன் - பள்ளர் தலைவன்.

பள்ளன் தன் பெருமை கூறுதல்

ஒருபோ தழகர் தாளைக்
கருதார் மனத்தை வன்பால்
உழப் பார்க்குந் தரிசென்று
கொழுப் பாய்ச்சுவேன்
சுருதிஎண் ணெழுத் துண்மை
பெரியநம் பியைத் கேளாத்
துட்டர் செவி புற்றெனவே
கொட்டால் வெட்டுவேன்
பெருமாள் பதி நூற்றெட்டும்
மருவி வலஞ் செய்யாரைப்
பேய்க்காலில் வடம் பூட்டி
ஏர்க்கால் செய்வேன்
திருவாய்மொழி கல்லாரை
இருகால் மாடுகளாக்கித்
தீத்தீயென் றுழக்கோலால்
சாத்துவே னாண்டே. ௧௧

கக. வன்பால் - வன்பார்; இறுகிய பாறை நிலம் ; "வன்பாற் கண்-வற்றல் மரம் தளிர்த்தற்று' - குறள். தரிசு-பயிரிடாத நிலம். எண்ணெழுத்து - திருமாலுக்குரிய எட்டெழுத்து. பெரிய நம்பி - இராமாநுஜருடைய ஆசாரியருள் ஒருவர். பின்னரும் 'சாத்தூரிற் பெரியநம்பி ஐயங்கார்' (௩௦) என்று குறிப்பிடப்படுகிறார். பெரிய நம்பியைக் குருவாகக் கொண்டு, அவரிடம் எண்ணெழுத் துண்மை யாகிய திருமந்திரார்த்த உபதேசங் கேளாத துட்டர்களுடைய செவியை வெட்டுவேன் என்க. கொட்டு - மண்வெட்டி. பதினூற் றெட்டு - ஆழ்வார்கள் மங்களாசாசனஞ் செய்த நூற்றெட்டுத் திருப்பதி. திருமாலிடத்து அன்பில்லாதாருடைய மனமும் செவியும் கால்களும் இவ்வாறு குற்ற முடையன என்று கூறி, அவற்றை இங்ஙனம் தண்டிப்பேன் என்று பள்ளன் கூறுவதா யுள்ளது இச்செய்யுள். இதன் மூலமாய் அவன் தன் பத்தியைத் தெரிவித்துக் கொள்ளுகிறான். திருவாய்மொழி, நம்மாழ்வார் அருளிய தமிழ் வேதம். உழக்கோல் - தாற்றுக்கோல்.

பள்ளியர் குடித்தரங் கூறுதல்

கலிப்பா

மள்ளக் குலத்தில் வரினும்இரு பள்ளியர்க்கோர்
பள்ளக் கணவன்எனில் பாவனைவே றுகாதோ
கள்ளப்புள் வாய்கிழித்த காரழகர் முக்கூடல்
கொள்ளத் தமது குடித்தரங்கள் கூறினரே. கஉ

கஉ. மள்ளக் குலம் - மள்ளர் குலம். மள்ளர் : மருத நிலத்தில் வாழும் மக்கள். கள்ளப் புள் வாய் கிழித்த கார்அழகர் : பகாசுரன் என்னும் அசுரன் கம்சன் ஏவலினால் கொக்குருவாய் வந்து கண்ணனைத் தன் மூக்கால் குத்தித் தின்புறுத்த, கண்ணன் அக் கொக்கைக் காலால் மிதித்து அதன் வாயைப் பிளந்து கொன்றருளி னான் என்பது வரலாறு. 'புள்ளின் வாய் கீண்டான்' என்பது ஆழ்வார்கள் திருவாக்கு. குடித்தரம் - குடியின் பெருமை.

மூத்த பள்ளி

சிந்து

உத்தர பாக மான
சித்திர நதியும் தென்பால்
ஓடும் பொருநையுடன்
கூடும் போதே
அத்தனை காலமுந் தொட்டு
இத்தனை காலமுங் கண்டு
அடியடி வாழையான
குடியில் வந்தேன்
பத்திலே பதினொன் றாக
வைத்தா னில்லைக் குடும்பன்
பண்டே சரடு கட்டிக்
கொண்டான் என்னை
முத்தமிழ் நாட் டழகர்
கொத்தடி யானுக் கான
முக்கூடல் மூத்த பள்ளி
நானே யாண்டே. கரு

கரு. சித்திரநதி - பொருநையுடன் முக்கூடலில் வந்து கலக்கும் ஓர் உபநதி; சிற்றாறெனவும் சொல்லப்படும் (நிக). தென்பால் - அதன் தென்புறத்தில். பொருநை - தாமிரபர்ணி. அடியடி வாழையான குடி: 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு' - இராமலிங்க சுவாமிகள். பத்திலே பதினொன்றாக வைத்தானில்லை - ஊரில் எல்லோருடன் என்னைச் சமமாகக் கருதவில்லை; சிறந்தவளென்று கருதியே என்னைச் சரடு கட்டிக் கொண்டான் என்பதும், என்னைப் பல மனைவியருள் ஒருத்தியாகக் கொள்ளவில்லை; முதல் மனைவியாகக் கொண்டான் என்பதும் கருத்து; 'பத்தோடு பதினொன்றாக' என்பது பழமொழி. சரடு - தாலிச்சரடு. கொத்தடியான் - பரம்பரை யடியான்.

இளைய பள்ளி

செஞ்சிக்குங் கூடலுக்குந்
தஞ்சைக்கும் ஆணைசெல்லும்
செங்கோல் வடமலேந்த்ரன்
எங்கள் ஊரே
நெஞ்சிற் குறித்த குளம்
அஞ்சுக்குஞ் சக்கரக் கால்
நிலையிட்ட நாளிற் பண்ணைத்
தலையிட்டேன் நான்
கஞ்சிக்குந் தண்ணிமேலே தான்
கெஞ்சிப்புகுந் தவளல்ல
கண்டாசைப் பட்டே கொண்ட
பெண்டா னவள்
மஞ்சிற் கறுப் பழகர்
தஞ்சப்பள் ளனுக் கேற்ற
மருதூர் இளைய பள்ளி
நானே யாண்டே. கசூ

கசூ. செஞ்சி - தென்ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சிக் கோட்டை. கூடல் - மதுரை. தஞ்சை - சோழநாட்டுத் தலைநகர். இவை வடமலையப்பப் பிள்ளையனது ஆதிக்கம் பரவியிருந்த நாட்டின் விரிவைக் காட்டுகின்றன. வடமலேந்திரன் - காவை வடமலையப்பப் பிள்ளையன்; ஐயன் என்பது சிறப்பைக்காட்ட வந்த சொல். (பிள்ளை ஐயன், பிள்ளையன்.) பாண்டிநாடாண்ட நாயக்க மன்னர் காலத்துத் தென்பாண்டிநாட்டில் 17ஆம் நூற்றூண்டின் முற்பகுதியில் அரசப்பிரதிநிதியா யிருந்து ஆட்சி புரிந்தவர். இவர் கால்வழியினர் இன்றும் திருநெல்வேலியில் செல்வாக்குடைய நிலைமையில் வாழ்ந்துவருகிறார்கள். எங்கள் ஊர் என்று பள்ளி கூறுவதால், அவள் ஊராகிய மருதூரில் பிள்ளையனுக்கு அரண்மனையிருந்ததென்றும் அங்கே அவர் வாழ்ந்தார் என்றும் கருத இடமுண்டு. குளம்

அஞ்சுக்கும் சக்கரக் கால் நிலையிட்ட நாள் - பிள்ளையன் முக்கூடலில் ஐந்து குளங்களைத் தோண்டுவித்தா ரென்றும் அவற்றில் சக்கர முத்திரையிடப்பெற்ற எல்லைக்கற்களை நாட்டுவித்தாரென்றும் சொல்லப்படுகிறது; சக்கரக்கால்-திருவாழிக்கல். அந்தப் பழைய நாளிலேயே அழகர் பண்ணைக்குத் தான் வந்தாக இளைய பள்ளி கூறுகிறாள். 'கெஞ்சிப் புகுந்தவ் வள்ளல்' என்று பாடங்கொண்டு, தாகத்துக்காக நீர் வேண்டி வந்தவன், என்மீது காதலுற்று மணம் புரிந்தான் என்று பொருள் கூறலுமுண்டு; 'சுடர்த் தொடீஇ கேளாய்' என்ற குறிஞ்சிக் கலிப் பாட்டைப் பார்க்க. மஞ்சிற் கறுப்பு - மேகத்தினும் கரிய நிறம். தஞ்சப்பள்ளன்-எளிய நிலையுடையவனான பள்ளன்; தஞ்சம்-எளிமை; 'தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே'—தொல்காப்பியம் சொல். உகூஅ. தஞ்சைப் பள்ளன் என்றும் பாடம்.

பள்ளன் குடித்தரங் கூறுதல்

சுக்கிரத் தேவர் தாயைச்
சக்கரத் தாழ்வார் கொன்ற
        துட்டப் பிரம கத்தி
        விட்டுப் போகத்
தெக்கண விட்டு வான
முக்கூட லுற் றழகர்
        திருவடி வைக்கு மன்றே
        வரும் அடியேன்
பக்கமே தூரப் போயும்
தக்கசோ றென்வே ளாண்மை
        பள்ளா பள்ளா என்பார் மெய்
        கொள்ளா தவர்
மைக்கடல் முத்துக் கீடாய் உவமை.
மிக்கநெல் முத்துண் டாக்கும் உருவகம்.
        வடிவழகக் குடும்பன்
        நானே யாண்டே. கரு

கரு. சுக்கிராசாரியருடைய தாய் தேவலோகத்தில் இந்திரனில்லாமல் ஒழிந்து போகும்படித் தவம் புரிந்து கொண்டிருக்கையில், திருமால் தம் சக்கரத்தை ஏவி அவளைக் கொன்றார் ; இதனால் சக்கரத்தாழ்வாருக்கு விளைந்த பிரமகத்தித் தோஷத்தை நீக்கி அருள் புரியத் திருமால் திருமுக்கூடலில் எழுந்தருளினார் என்பது வரலாறு. தெக்கண விட்டு - தென் திருமால் ; இதனால், முக்கூடலுக்கே தென்திருமாலிருஞ்சோலை என்ற பெயரும் இருந்ததெனக் கருதலாம் ; முக்கூடல் அழகருக்குத் தென்கூடலழகர் என்ற திருநாமமுமுண்டு. விட்டு - விஷ்ணு ; 'வல்லன் எம்பிரான் விட்டுவே'—திருவாய்மொழி, உ. எ. ச, முக்கூடலில் திருமால் எழுந்தருளிய நாள் தொட்டுத் தன் குடும்பமும் அங்கிருந்ததாகப் பள்ளன் பெருமை பாராட்டுகிறான். பக்கமே தூரப் போயும்...மெய் கொள்ளாதவர் - 'உயர்குலத்தார் அருகில் நான் வரநேரிட்டால் பள்ளன் என்ற காரணத்தால் என்னை விலகிப்போகச் சொல்லுவர் ; அவர் உண்மையை யுணராதார் ; அவர் உண்ணும் சோறு என் வேளாண்மையால் விளைந்த வளமாகும்' என்பது அவன் கருத்து. மைக்கடல் - கரிய கடல். நெல்முத்து - முத்துப்போன்ற நெல்.

நாட்டு வளம்

கலிப்பா

கோட்டுவளங் கூறியமுக் கூடல்அலங் காரர்திரு
நாட்டுவளம் பேசமணி நாவசைத்தார் பள்ளியர்கள்
பாட்டுவளஞ் சேரகுலப் பத்தனார் மாலிகைப்பூங்
காட்டுவள மென்னக் களமரதூர் சொல்வாரே. கசு

கசு. அலங்காரர் - முக்கூடல் அழகரது திருநாமங்களிலொன்று ; செண்டலங்காரர் என்று இந்நூலுள் பின்னும் கூறப்பெறும் (கக). குலப் பத்தனார் - நம்மாழ்வார். களமர் - உழவர்.

மூத்த பள்ளி

சிந்து

மேடை யேறித்தன் காலைப் பவுஞ்சு
விரித்த பீலி மயிலெட்டிப் பார்க்க
பேடை மாங்குயில் வாய்கொண்டு சேவல்
பிளந்த வாய்தனைப் பேசாமல் மூடக்
கோடை போய்விட்ட சோபனங் கொண்டு
குளிர்ந்த கொண்டற் குறுந்துளி யோடே
வாடை யோடி வரக்களி கூர்வது
வளமை ஆசூர் வடகரை நாடே. கஎ

கஎ. பவுஞ்சு விரித்த பீலி - ஒழுங்காக (வரிசைபெற) விரித்த தனது தோகையை. மயில் எட்டிப்பார்க்க, குயில் வாய்தனை மூட, கொண்டற் குறுந்துளியோடு வாடை யோடி வர, ஆசூர் வடகரை நாடு களிகூர்வது என இயையும்.

இளைய பள்ளி

வென்றல் லோவிடு வேனென வேளிரு
வேழங் கூடி மதிக்குடை தாவக்
குன்றி லாதர வில்லையென் றுடவர்
கொம்ப னார்முலைக் குன்றிற் பதுங்க
மன்றல் சேர்இள வேனில் புகப்புக
மாங்குயி லுக்கு மாராயஞ் சொல்லித்
தென்ற லோடி வரக்களி கூர்வது
சீவல மங்கைத் தென்கரை நாடே. கஅ

கஅ. மதிக் குடை - சந்திரனைக் குடையாகக் கவித்ததுபோன்ற நெற்றி. மாராயம் - உவகை, நற்செய்தி. 'சீவலார் மங்கை' என்றும் பாடமுண்டு.

நகர் வளம்

மூத்த பள்ளி

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்
விண்ட பூமது வண்டலிட் டோடும்
வெயில்வெய் யோன்பொன் னெயில்வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே. ௧௯

௧௯. கண்டபேரண்டம் - கண்டபேரண்டப் புள். தண்டலை - சோலை. அனம் - அன்னம். விண்ட பூ மது - அலர்ந்த பூவிலுள்ள தேன். செண்டலங்காரர் - அழகர்; செண்டு என்பது இருபுறமும் வளைவுள்ள பிரம்பு போன்ற ஓர் ஆயுதம்; மன்னார்குடி முதலிய சில திவ்விய ஸ்தலங்களிலுள்ள பெருமாளுக்கு இவ்வாயுதம் உண்டு; இதுகாரணமாகவே செண்டலங்காரர் என்ற பெயரும் வந்தது. 'செண்டலங்காரர் முகில்வண்ணனார்' என்பது மன்னார் மோகனப் பள்ளு.

இளைய பள்ளி

சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்
தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்
திங்கள் சோலை மரங்களை ராவும்
தெருக்கள் தோறும் மதுக்களைத் தூவும்
பொங்க ரூடிளம் பைங்கிளி மேவும்
பூவை மாடப் புறாவினங் கூவும்
வங்க வாரிதி வெங்கடு உண்ட
மருதீசர் வாழ்மருதூர்எங்கள் ஊரே. ௨௦

௨௦. சங்கம் - இசைக்கருவி; 'முழவுஞ் சங்கமும் முன்றின் முழங்குவ' - சிந்தாமணி, ௩௩அ. ராவும் - அராவும். பொங்கர் -

மரக்கிளைகள். பூவை - நாகணவாய்ப் புள். வாரிதி வெங்கடு - பாற்கடலில் தோன்ற ஆலகால விடம்.

நாட்டு வளம்

மூத்த பள்ளி

கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்
கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்
சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு
திரிபட் டுள்ளது நெய்படுந் தீபம்
குறைபட் டுள்ளது நம்பியர் அம்பி
குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு
மறைபட் டுள்ள(து) அரும்பொருட் செய்யுள்
வளமை ஆசூர் வடகரை நாடே. உக

உக. கறை - களங்கம். கடம்பட்டுள்ளது கம்பத்து வேழம் - மதங்கொண்டவை கம்பத்தில் பிணிக்கப்பட்ட யானைகளே. சிறை - சிறகு. குழைபட்டுள்ளது - துவண்டு மெலிவது.

இளைய பள்ளி

காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
தணிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக் கண்ட(து) உரைத்திடுஞ் சந்தனம்
சீவல மங்கைத் தென்கரை நாடே. உஉ

உஉ. மறுக - சுழல. தணிப்பக் கண்டது - ஒடுங்கியுள்ளது; 'ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம், ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்' - குற்றாலக் குறவஞ்சி.

நகர் வளம்

மூத்த பள்ளி

சோதி மாமணி வீதி நெருக்கும்
சுரும்பு பாடி இரும்பும் உருக்கும்
சாதி நால்வளம் நீதி பெருக்கும்
தடத்து வாளை குடத்தை நெருக்கும்
போதில் மேய்ந்திள மேதி செருக்கும்
புனமெல் லாந்தண் மலர்விண் டிருக்கும்
ஆதி நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே. உ௩

உ௩. சுரும்பு - வண்டு. போது - மலர். மேதி - எருமை. பாடபேதம்:—ஆதிநாதர் அநாதி ஒருத்தர்.

இளைய பள்ளி

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலிவாய்க் கன்னல் ஆலை யுடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தஞ் சாறுயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியிற் கிடைக்கும்
மத்தஞ் சூடும் மதோன்மத்த ரான
மருதீசர் வாழ்மரு தூர்எங்கள் ஊரே. உ௪

உ௪. வேலை - சமுத்திரம். சாறு - விழா. மத்தம் - ஊமத்தை. மதோன்மத்தர் - ஆனந்தமயமானவர். (பா - ம்) கிடக்கும்.

நாட்டுவளம்

மூத்த பள்ளி

மீதுயர்ந் திடுந் தெங்கிள நீரை
மிடைந்த பூகம் சுமந்துதன் காயைச்
சூத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்
சூதம் தன்கனி தூக்கும் பலாவில்
ஓது மந்த பலாக்கனி வாழை
உளுக்க வேசுமந் தொண்குலை சாய்க்கும்
மாதுளங் கொம்பு வாழைத் தாங்கும்
வளமை யாசூர் வடகரை நாடே. ௨௫

௨௫. மிடைந்த பூகம்-நெருங்கிய கமுகு. சூதம்-மா. உளுக்க-சுளுக்க. சூதம் பலா வாழை என முக்கனிகளையும் கூறினர்.

இளைய பள்ளி

பங்க யந்தலை நீட்டிக் குரம்பினிற்
பச்சை இஞ்சியின் பாசடை தீண்டும்
தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்
தடவி மெள்ளத் தொடும் அந்த மஞ்சள்
அங்க சைந்திடுங் காய்க்கதிர்ச் செந்நெல்
அளாவி நிற்கும்அச் செந்நெலு மப்பால்
செங்கரும் புக்குக் கைதரும் போல்வளர்
சீவல மங்கைத் தென்கரை நாடே. ௨௬

௨௬. பங்கயம் - தாமரை. குரம்பு - வரப்பு. பாசடை பசிய இலை. கைதரும் : கையால் தாங்குவதுபோலத் தாங்கும்.

குயில்

கலிப்பா

தேவாதி தேவர்திரு முக்கூட லின்பெருமை
நாவால் வழுத்திவள நாட்டியல்பு கூறியபின்

பூவா சனைசேர் புரிகுழலார் பூங்குயிலே
கூவாயென் றந்தக் குயில்மொழியைக் கொண்டாரே. உஎ

உஎ. குயில் அழைத்தல் என்பது, மகளிர் கூடி, மழை பெய்யும்படி கூவுமாறு குயிலை அழைத்தல்; 'குன்றம் மழைக்கக் குயிலழையா நிற்பர்' என்ற அம்பிகாபதி கோவை (கஞ) காண்க. புரிகுழலார் - பள்ளியர்.

சிந்து

கார் பூத்த வண்ணனார் கண்ணனார் அழகர்படிக்
கட்டளைகள் உயரவே கூவாய் குயிலே
பேர்பூத்த முக்கூடல் மிக்கரா மானுசன்
பீடம்மிக விளங்கவே கூவாய் குயிலே
பார்பூத்த கீர்த்திபெறும் வைணவரும் தானிகரும்
பரிசனமும் வாழவே கூவாய் குயிலே
சீர்பூத்த காவைவரு திருமலைக் கொழுந்துமுகில்
செங்கோன்மை ஓங்கவே கூவாய் குயிலே. உஅ

உஅ. அழகர் படிக் கட்டளைகள் - அழகர் கோயிலுக்குரிய பூசைக் கிரமங்கள். ராமானுசன் பீடம் - முக்கூடலிலிருந்த வைணவ ஆசாரிய பரம்பரை. தானிகர் - ஸ்தானிகர். பரிசனம் - அடியார் குழாம். காவை வரு திருமலைக் கொழுந்து - காவை வடமலையப்பப் பிள்ளையின் குமாரராகிய திருமலைக்கொழுநதுப் பிள்ளையன்; இவர் காலத்தே இந்நூல் செய்யப்பெற்றதெனக் கொள்ளலாம்.

பா - ம் :—காவைவரு வடமலையப்ப முகில், கீர்த்தி பெறுந் திருமலைக் கொழுந்து முகில், கச்சிவரு சொக்கலிங்கேந்த்ர முகில், கச்சிவருந் திருமலை நராதிபதி.

சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்
செல்வமும் பெருகவே கூவாய் குயிலே
மாவளத் துடன்அழகர் தாவளக் குடிவாழ
மருதூரை வாழ்த்தியே கூவாய் குயிலே

பாவலர்க் குபகாரி காவையம் பலவாணன்
பலகிளையுந் தழையவே கூவாய் குயிலே
காவலர்க் குயர்பெருமை மேவுதேர்ப் பாலழகர்
கட்டளைகள் தழையவே கூவாய் குயிலே. உக

உக. சீவலப்பேரி - முக்கூடலுக்கு இப்போது வழங்கும் பெயர் ; ஸ்ரீ வல்லபமாறன் என்னும் பாண்டியனால் இவ்வூர் தோற்றுவிக்கப்பட்டமையின் இப்பெயர் பெற்றதென்பர். தமிழ் மூவகை - இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ். தாவளக்குடி - மருத நிலத்துக் குடிகள் ; தாவளம் - மருத நிலத்தூர். காவை அம்பலவாணன் - காவை வடமலையப்பப் பிள்ளையனின் முன்னோர் ; **பிரசாத அகவல்** முதலிய நூல்களின் ஆசிரியர் ; துறவியாயிருந்தவர் ; இவர் காலம் பதினேந்தாம் நூற்றாண்டு. தேர்ப்பால் அழகர் - பார்த்தசாரதி. பா - ம். அழகர் கருணை பெறவேண்டியே.

பொருநையந் திருநதியின் இருகரையும் இருபூவும்
பூஞ்சாலி விளையவே கூவாய் குயிலே
அருள்பெறுந் தருமநிதி சாத்தூரிற் பெரியநம்பி
ஐயங்கார் வாழவே கூவாய் குயிலே
பெருவளம் தருநாடு திங்கள்மும் மாரியும்
பெய்யமழை வேண்டியே கூவாய் குயிலே
கருநெடும் புயலழகர் மருவுசன் னிதிகற்ப
காலமும் விளங்கவே கூவாய் குயிலே. ௩௦

௩௦. இரு பூவும் - இரண்டு போகமும். பூஞ்சாலி - நெல்லில் சிறந்த வகை. பெரியநம்பி : கக-ம் பாட்டின் அடிக்குறிப்புப் பார்க்க.

தெய்வநிலை போற்றுதல்

கலிப்பா

காரிப் பிரான்புதல்வர் கல்வித் தமிழ்வேதம்
பாரித்த முக்கூடற் பண்ணவனார் நன்னாட்டில்

மாரிப் பொருட்டால் வாங்குறித்து மள்ளரெல்லாஞ்
சேரிக் குரவையெழத் தெய்வசிலே போற்றினரே. ௯௧

௯௧. காரிப்பிரான் புதல்வர் - காரிமாறன் புதல்வராகிய நம்மாழ்வார். தமிழ் வேதம் - திருவாய்மொழி. குரவை - குலவை மகளிர் விசேடகாலங்களில் நாவால் ஒலிக்கும் மகிழ்ச்சியொலி.

சிந்து

திங்கள்மும் மாரிஉல கெங்கும் பெய்யவே
தெய்வத்தைப் போற்றிவந்து கைதொழுங்காண்
பொங்கலு மிட்டுத்தேங் காயுங் கரும்பும்
பூலா வுடையாருக்குச் சாலவே கொடும்
குங்குமத் தோடு சந்தனங் கலந்து
குழுக்கா வுடையாரையர் தமக்குச் சாத்தும்
கங்கணங் கட்டி ஏழு செங்கிடாயும்
கரையடிச் சாத்தாமுன்னே விரைய வெட்டும். ௯௨

௯௨. பூலாவுடையார், 'உடையாரையர்: ஐயனார் போன்ற சிறு கிராமதேவதைகள்; உடையார் - தெய்வம், குழுக்கா - திரளாக. கரையடிச் சாத்தா - ஆற்றங்கரை, குளக்கரை முதலிய இடங்களில் ஊருக்குப் புறம்பே பிரதிட்டைபண்ணி வழிபடப் பெறும் ஐயனார்; சாத்தா - சாஸ்தா, ஐயனார்.

பூத்ததலைச் செஞ்சேவல் சாத்திரத் தாலே
புலியூ ருடையார் கொள்ளப் பலிதானிடும்
வாய்த்த சாராயமும் பனையூற் றுக் கள்ளும்
வடக்குவாய்ச் செல்வியுண்ணக் குடத்தில்-வையும்
தோத்திரம் பண்ணும் பண்ணுங்கூத் தாடியே
தொழுது தொழுது வேண்டும் மழைபெய்யவே
ஏத்தும் அழகர்பேரை வாழ்த்தி வாழ்த்தியே
எல்லோரும் வாரும் பள்ளர் எல்லோருமே. ௯௩

௩௩. பூத்த தலை - பூ அலர்ந்தாற் போன்ற கொண்டை; 'பூத்தலை வாரணம்'—சிந்தாமணி ௧௨௦. புலியூருடையார் - மற்றொரு காவல் தேவதை. வடக்குவாய்ச் செல்வி - ஊரின் வடக்கு எல்லையிலிருக்கும் பெண் தேவதை, வடவாய்ச் செல்வி; செல்வி - செல்வி என்பதன் திரிபு; 'நீலமேனி வடக்கு வாய்ச் செல்வி கோலம் போல் உருக்கொண்டு'—கண்ணுடையம்மை பள்ளு, ௯௯.

மழைக் குறி

கலிப்பா

முத்திதர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாள்
பத்திமற வாதபண்ணைப் பச்சேரிப் பள்ளரெல்லாம்
புத்தியொடு தெய்வநிலை போற்றியபின் வானமுகில்
எத்திசையும் பெய்யமழை யின்குறியுண் டாகியதே. ௩௪

௩௪. பச்சேரி - பட்சேரி, பள்ளர் சேரி. இதன் பின்,

மேக மெல்லாம் ஒன்றுய்க்கூடித் தான்கறுக்குதே—மெத்த
மின்னல் மின்ன வாசவன்கை வில்லெடுக்குதே
நாகரிகப் பொதியமலைக் காற்றடிக்குதே—கொண்டல்
நாலு திக்கும் கோடையிடி தானிடிக்குதே
ஏகபோக மாமரத்தில் குயில்கள் கூவுதே—மழைக்
கேற்றமாம் சொறித்தவளை கூப்பிடுகுதே
ஆகையினல் எங்கள்திரு முக்கூடல் நகரில்
அந்திநேர மெல்லாம்மழை வந்துபெய்யுதே

என்ற பாட்டு முக்கூடற்பள்ளைச் சேர்ந்ததாக வழங்கப்படுகிறது; முக்கூடற்பள்ளு நாடகம் என்ற நூலிலும் 'முத்திதர' என்ற பாட்டின் பின்னர்க் காணப்படுகிறது; ஆனல், ஏட்டுப் பிரதிகள் ஒன்றிலும் காணப்படவில்லை. அன்றியும், இதன்கணுள்ள சில சொற்களும் சொற்றொடர்களும் அடுத்த (௩௫) செய்யுளிலிருந்தெடுத்து அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, நாடகம் அமைத்தோரால் இப்பாட்டு, பிற்காலத்தில் எழுதிச் சேர்த்துக் கொள்ளப்பட்டதென்று கருதலாம்.

சிந்து

ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்
தேற்றடைக் குதே — மழை
தேடி யொரு கோடி வானம்
பாடி யாடுதே
போற்று திரு மாலழகர்க்
கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே. ௩௫

௩௫. மேல்திசையிலும் தென்திசையிலும் மின்னல் மின்னுவது, சுழல்காற்றடிப்பது, தவளை கத்துவது, நண்டு வளை தோண்டுவது, வானம்பாடி யாடுவது முதலியன மழைக்குறிகள். 'ஈழமும் கொங்கும் எதிர்த்து மின்னுது, பள்ளத்தில் இருக்கும் கூட்டடை மேட்டில் வை' என்பது ஓர் இடையர் வழக்கு. பா - ம்: மேற்கு நின்றும் கொம்பு சுற்றி; தவளை ஆர்ப்பரிக்குதே; சேற்றைக்குழி; சேற்றைக்கிள்ளி; சேற்றில்வளை; துள்ளிக் கொள்ளுமே. புள்ளிப் பள்ளர் - சிறந்த பள்ளர்.

இக்கரைக் காவிற் பொருநை
யக்கரைக் காவின் - மழைக்
கேம மின்றிச் சாம மின்றி
நாமல்லோ போவோம்

தக்க தோணி யைத்துறையிற்
சிக்கெனக் கட்டும் - படல்
தாழைக் குடைக் கொங்கணியும்
வேளைக்கே வேண்டும்
பக்கமேயுஞ் சூழ்கம்புஞ்சு
ருக்க வாங்கிடும் - சீலைப்
பந்தமும் விளக் கெண்ணெயும்
முந்தவே தேடும்
முக்கூடல் அழகர் பண்ணை
மிக்க சேரியில் - பள்ளர்
முழுதுங் குரவை யிட்டே
எழுவோ மடா. ௩௬

௩௬. ஏமம் - இரவு. கொங்கணி - மழையைத் தாங்கத் தலையில் கவிக்கும் சம்பங்கூடை; குடலை என்றும் சொல்வதுண்டு. சூழ் - பந்தம்; சூ. கம்பு - இருளில் வழியைத் தடவிப் பார்த்துச் செல்வதற்காக. சீலைப்பந்தம் முதலியன இருளில் வெளிச்சங் காட்டுவதற்காக.

மழை பெய்தல்

கலிப்பா

சூலா னதுமுதிர்ந்தால் தோன்றுமே தா பேறுசெங்கண்
மாலாசூர் நாட்டில் மழையுமந்த வண்ணமன்றோ
வேலா வலயமுந்நீர் மேய்ந்துகருக் கொண்டமுகில்
காலான தூன்றியந்தக் காலமுறை காட்டியதே. ௩௭

௩௭. வேலாவலயம் - கடல். காலானது ஊன்றி -, காலூன்றி; மழைக்கால் இறங்கி; 'ககனவட்டத்தினின்று காலூன்றி மழை பொழியும்'—**தாயுமானவர்.** அந்தக் காலமுறை காட்டியது - மாரிக் காலத்தின் இயல்புக்கேற்ப மழை பெய்தது. இங்ஙனம் மேகம் தோன்றி மழை பெய்தலை, அவ்வந்நூலிற் சிறப்பிக்கும் தெய்வத்

தோடு ஒப்பிட்டுச் சொல்வது மரபு. 'முன்னிக்கடலைச் சுருக்கி எழுந்துடையாள், என்னத் திகழ்ந்து' என்ற திருவெம்பாவைப் பாடலையும், 'ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்' என்ற ஆண்டாள் திருப்பாவையையும் காண்க.

பூவார வந்துகந் தன்பொடுமே மத்திருந்து
காவார் கமண்டலமுங் கைக்கொண்டு - மாவரி
தன்னிற் படிந்து சராசரத்தைக் காத்துமலை
மின்னைப் புணர்ந்துபச்சை மேனிகொண்டு - மன்னும்
சிலைவளைத்து நாகத்தைச் சேர்ந்து சடையாத்
தலைவளைத்துக் கங்கை தரித்து - மலரிலெழும்
பூமானும் பாற்கடலிற் புண்ணியனும் வெள்ளிமலைக்
கோமானு மாகவந்த கொண்டலே'

என்ற கொண்டல் விடுதூது (க - ச) காண்க.

கூாவுக் கிறைவ னுகும் இந்திரன்
ஏவற் பணிகொண் டெழுந்த கார்
கடலிற் படிந்து திருவிற் கோட்டி
அடல்முக் கூடல் அரியு மாய்ப்
பூவுக் குயர்ந்த கலைமின் னேடு
மேவிக் கமலத் தயனு மாய்ப்
புனலைத் தரித்து வரையி லேறிக்
கனலைத் தரித்த சிவனு மாய்த்
தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்
கோவித் தெழுந்த கருடனும்
தானே யாகி யுலகுக் குரிமை
ஊனே யாகி உயிரு மாய்க்
கோவிற் பெரிய வடம லேந்திரன்
மாவிற் கறுத்துப் பொழிந்தபின்
குளிறு கின்றதன் கோன்களிற்றினில்
வெளிறு கின்றது வானமே. ௬அ

௩அ. காவுக்கு இறைவன் - மருதத்துக்குரிய தெய்வம். இந்திரன் மேகங்களுக்கும் இறைவனாதலால், மேகம் அவனது ஏவற்பணி கொண்டெழுந்தது. திருவிற்கோட்டி - வானவில்லை 'ஆகாயத்தில் வளைத்து. கடலிற் படிந்தமையாலும், வில்லை வளைத்தமையாலும், மேகம் அரியாயிற்று. கலைமின் - சரசுவதி ; மின்-மின்னல். கமலத்து அயன்-பிரமன். கலைமின்னோடு மேவியமையால் மேகம் பிரமனை ஒத்தது. புனலைத் தரித்தமையாலும் மலைமீதேறியமையாலும், கங்கையைத் தரித்துக் கயிலை வரையிலிருக்கும் சிவனை ஒத்தது. பாம்புகள் பதுங்கும்படியாக எழுந்தமையால் கருடனுமாயிற்று. பணி - பாம்பு. 'வானின்றமையா துலகு' ஆதலின், மேகம் உலகுக்குரிமை ஊனேயாகி உயிருமாயிற்று. மா - குதிரை. வடமலேந்திரனது குதிரை கறுப்பென்பது இதனால் தெரிகிறது. குளிறுகின்ற - ஆரவாரிக்கிற. தன்கோன் களிறு - மேகத்துக்குத் தலைவனான இந்திரன் களிறாகிய ஐராவதம் ; அது வெள்ளை யானை ; அதன் நிறம் ஒத்தது வானம். வெளிறுகின்றது - மழை பெய்தபின் வானம் களங்கமற்று வெண்ணிறத்தோடு பிரகாசித்தது.

ஆற்று வரவு

கலிப்பா

பாயுங் கருடப் பரியார்முக் கூடலிலே
காயும் பொருப்பென் களபத் தனப்பொருப்பே
சாயும் புனலமுத தாரைகுளி ரக்குளிரத்
தோயும் பொருப்பர்கலை தோய்ந்தீரந் தோயாரே. ௩௯

௩௯. தலைவி கூற்று. பாயும் கருடப் பரியார் - பறக்கும் கருடனை ஊர்தியாகவுடையார்.

குறிஞ்சி

சிந்து

வானக் குரிசில் வள்ளலாய் - வரைக்
கோனைப் பரிசு கொள்ளலாய்
வழங்கு மாறும் புறப்பட்டே - புனல்
முழங்கு மாறுந் திறப்பட்டே

தானக் களிறு படிந்திடக் - கொலை
ஏனக் களிறு மடிந்திடத்
 தழையின் ஆரம் உந்தியும் - பசுங்
 கழையின் ஆரம் சிந்தியும்
கானக் குளவி அலையவே - மது
பானக் குளவி கலையவே
 காட்டுச் சாதி வேரிற் போய்க் - குற
 மோட்டுச் சாதி ஊரிற் போய்ச்
சேனைப் புரவி அழகனூர் - மரு
கோனைப் பரவி யழகுபூந்
 தினையை வனத்தில் உதிர்த்துப் - பாலை
 யனைய வனத்தை எதிர்ந்ததே. ௪0

௪0. தானக் களிறு - மதயானை. ஏனக் களிறு - பன்றி. ஆரம் - சந்தனம். கழை - மூங்கில். கானக் குளவி - மரமல்லிகை. மதுபானக் குளவி - தேனீ. குறமோட்டுச்சாதி - குறிஞ்சி நிலத்துக்குரிய மக்கட்சாதியாகிய குறவர். அழகனூர் மருகோன் - முருகன்; குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வம். களிறு, ஏனம், கழை, குளவி, தினை முதலியன குறிஞ்சி நிலத்துக்குரிய கருப்பொருள்கள்.

கலிப்பா

பால்வெள்ளத் தாறுடைய பண்ணவர்முக் கூடலிற்கண்
வேல்வெள்ளத் தாறெமது மின்னிறைக்குங் கார்காலம்
கால்வெள்ளத் தாறுகரை கண்டுங்கரை காணாமல்
மால்வெள்ளத் தாறு வரவிரவு தீர்வாயே. ௪௧

௪௧. தலைவன் கூற்று.

பாலை

சிந்து

எதிரும் பாலை மரவமுந் - திரள்
வெதிரும் பாலைக் குரவமும்
 இருப்பை ஈந்து கள்ளியும் - கரைப்
 பொருப்பை ஈர்ந்து தள்ளியும்

முதிரும் பாறு முறையிடக் - கழு
குதிரும் பாறு சிறையிட
முள்வே லெயினக் கிடைஎழப் - பதி
வெள்வே லெயினப் படைஎழப்
பிதிருங் காளை விழியுடன் - குடில்
அதிருங் காளை மொழியுடன்
பெரும றத்தியர் அல்லவே - யெனுங்
கரும றத்தியர் செல்லவே
கதிருங் காலும் போலவே - சென்
றுதிரங் காலுஞ் சூலவேற்
கன்னி முலையிற் சுரந்தபால் - என
முன்னி முலையிற் பரந்ததே. ௬௨

௬௨. மரவம், வெதிர், பாலை, குரவம், இருப்பை, ஈந்து, கள்ளி - மரவகைகள், பாலைக் குரியவை. வெதிர்-மூங்கில். முதிரும் பாறு... சிறையிட - முதிர்ந்த பருந்து வருந்தவும், வெள்ளம் மரத்தை ஈர்ப்பதால் கூட்டினின்றும் விழும் குஞ்சுகளைக் கழுகு தன் சிறகில் அணைத்துக்கொள்ளவும். முள்வேல் எய் இனக்கிடை - முள்வேலுடைய முள்ளம்பன்றி இனத்தொகுதி. பதி வெள்வேல் எயினப் படை - பதியிலுள்ள வெள்ளிய வேல்பிடித்த எயினர் படை. பிதிருங் காளை விழியுடன் - வெள்ளத்திலடிபட்ட மாடுகள் விழிபிதுங்க. காளை மொழியுடன் - காளைப் பருவத்துள்ளார் அதிர்ந்து பேசும் மொழியோடு. பெருமறத்தியர் - மிக்க வீரமுடைய பெண்கள். கருமறத்தியர் - கரிய நிறமுடைய பாலைவனப் பெண்கள். கதிரும்...கன்னி - சூரியனும் யமனும் போல, செல்லுமிடம் உதிரம் காலச்செய்யும் சூலமாகிய வேலைத் தரித்த கன்னி; கன்னி - துர்க்கை; பாலை நிலத்தின் தெய்வம். முலை - முல்லை.

கலிப்பா

முந்நீ ரிடுங்கணையார் முக்கூடல் மால்வரையின்
மின்னீர் வரக்கான் விளங்கிநின்ற வாறேயோ

நன்னீர் மருதமென நால்வளமுண் டாயதுவே
றுண்ணீர் கைக்கொண்(டு) உகந்துமெல்லச் சொல்வீரே. சங

சங. தலைவி கூற்று ; தோழி கூற்றுமாம். முந்நீரிடுங் கணை யார் - சமுத்திர ராசன்மீது கணை எய்த இராமர்.

முல்லை

சிந்து

முல்லைக் கோடி யடுக்கையின் - மலி
கொல்லைக் கோடி கடுக்கையின்
முட்டித் தோன்றி மவ்வலை - மது
கொட்டித் தோன்றி வெவ்வலை
இல்லைச் சாடி எண்ணெயும் - அயல்
எல்லைச் சாடி வெண்ணெயும்
எள்ளும் அவரை துவரையும் - உரை
கொள்ளும் அவரை எவரையும்
தொல்லைப் பாடு பண்ணியும் - துறு
கல்லைப் பாடு நண்ணியும்
தொடுத்துப் பூவை நெற்றியைத் - தொட
மடுத்துப் பூவை எற்றியே
குல்லைத் தானந் தேக்கி - மாலுக்
கெல்லைத் தான மாக்கி மால்
கொள்ளுங் கயத்தை நிகர்த்து - மருதந்
துள்ளுங் கயத்தில் பாந்ததே. சச

சச. முல்லை - முல்லைநிலம். அடுக்கையின் - அடுத்து. கடுக்கை - கொன்றை. தோன்றி - தோன்றி மரம். மவ்வல் - மல்லிகை விசேடம். வெவ்வலை - கொடிய அலை. துறு கல் - பாறை. பூவை நெற்றி - காயா மரத்தின் உச்சி. குல்லை - துளசி. மால் - முல்லைக் குரிய தெய்வம். கயம் - கடல், நீர் நிலை.

கலிப்பா

குன்றைக் குடைகவித்த கோவலர்முக் கூடலிலே
இன்றைக் கிரவில் இவளைஎவர் தேற்றுவரோ
கன்றைக் கழுத்தணைத்துக் கற்றுவைக் கூவுமண்டர்
கொன்றைக் குழல்பூங் குழலிசெவிக் கேறுதே. சரு

சரு. தோழி கூற்று. குன்றைக் குடைகவித்த கோவலர் - கோவர்த்தன கிரியை ஆக்களுக்கும் ஆயருக்கும் குடையாகத் தூக்கிக் கவித்த கண்ணன். அண்டர் - ஆயர். கொன்றைக் குழல்: 'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்...கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி' - சிலப்பதிகாரம், ஆய்ச்சியர்குரவை.

மருதம்

சிந்து

பாயும் மருதஞ் செழிக்கவே - பண்ணை
தோயும் மருதந் தளிர்க்கவே
பகட்டுக் கமலக் குட்டத்திற் - புனல்
தகட்டுக் கமலை வட்டத்தில்
போயும் எருமை பதறவே - உற
மேயும் எருமை சிதறவே
புழுதிச் சாலை நனைத்துமே - குளிர்
கொழுதிச் சாலை யணைத்துமே
சாயும் உரலுங் கரும்புந்தான் - அதில்
பாயும் முரலுஞ் சுரும்புந்தான்
சரிய முதலை முடுக்கியும் - வாழைப்
பெரிய முதலை அடுக்கியும்
காயுந் தவள வாரணம் - எதிர்
ஆயுந் தவள வாரணம்
கழனிக் குடிலைத் தொகுத்து - நெய்தலந்
துழனிக் குடிலிற் புகுந்ததே. சசா

௬௬. மருதம் - மருதநிலம், மருதமரம். பகட்டுக் கமலக் குட்டம் - பிரகாசமான தாமரைக் குளம். கமலை வட்டம் - மாடுகள் பூட்டி இறைக்கப்பெறும் கமலை ஏற்றம். புழுதிச்சால் - புழுதி உழவு உழப்பெற்ற நிலம். பாயும் முரலும் சுரும்பு - சப்திக்கின்ற வண்டு பாயும். முதலை முடுக்கி - முதலைகளை ஓட்டி. வாழைப் பெரிய முதல் - பெரிய வாழைத்தாறுகள். தவளவாரணம் - வெள்ளையானை, ஐராவதம்; மருத நிலத்துத் தெய்வமாகிய இந்திரனுக்குரியது. தவள வாரணம் - வெண்மையான சங்குகள். துழனி - புள்ளொலிக் கூட்டம்; 'துள்ளு புள்ளீட்டத் தோசை துழனி' - திவாகரம், எட்டுப் பிரதி.

கலிப்பா

முன்றிற் குடவளையூர் முக்கூட லூரார்செய்த
நன்றிக் கிணையில்லை நான்நெடுமால் ஆனேனே
வென்றித் திருநாமம் வேறோ பொருநைநதி
அன்றிற் குலங்காள் அவற்கிதுநீர் சொல்லீரே. ௬௭

௬௭. தலைவி கூற்று. நான் நெடுமால் ஆனேனே, வென்றித் திருநாமம் வேறோ - சிலேடை: நான் மிக்க மயக்கத்தை அடைந்தேன், இம்மயக்கத்தை நீக்காத அவருக்கு வென்றித் திருநாமம் எதற்கு எனவும், நான் நெடிய திருமால் ஆயினேன், அவருக்கு இனி அப்பெயர் எதற்கு எனவும் இரண்டு பொருள் தோற்றுகிறது.

நெய்தல்

சிந்து

புகுந்த நெய்தலை மயக்கியே - மலர்
மிகுந்த நெய்தலைக் கயக்கியே
புடையிற் புளினஞ் சரியவே - அதன்
இடையிற் புளினம் இரியவே

பகுந்து நுழையப் பட்டினம் - திரை
முகந்து நுழையப் பட்டினம்
படைத்தி டாமை நிகழவே - நிலை
கிடைத்தி டாமை புகழவே
உகுந்த தண்டலை நீக்கியே - புன்னை
வகுந்த தண்டலை தாக்கியே
உப்பளத் திரை யோட்டியும் - புனல்
அப்பளத் திரை யூட்டியும்
தகுந்தடங் கடல் இறைவனைத் - தொழ
மகிழ்ந்திடுங் கடன் முறையினிற்
சார்ந்து சரிந்து நேர்ந்து குறுகி
வார்ந்து வெள்ளம் ஊர்ந்ததே. ௬௮

௬௮. நெய்தல் - நெய்தல் நிலம், நெய்தல் மலர். கயக்கி-கலக்கி. புளினம் - பறவையினம். புடையிற் புளினம் - ஆற்றின் புறமுள்ள மணல்திட்டு. இரிய - நீங்கியோட. பட்டினம் - நெய்தல் நிலத்தூர். நுழையப்பட்டு இனம் படைத்திடாமை எனப் பிரிக்க. தண்டலை - பூந்தோட்டம், சோலை. புன்னை - நெய்தலுக்குரிய மரம். திரை ஓட்டி - அலையைச் செலுத்தி. அப்பள்ளத்து இரை ஊட்டி என்க. கடல் இறைவன் - வருணன், நெய்தலுக்குரிய தெய்வம்.

கலிப்பா

சங்கமே யூருங் கடவுளர்முக் கூடலிலே
தங்கமே தேடத் தணந்தார் மணந்திலரே
வங்கமே யங்கமனல் வங்கமே யானேன்வெண்
சங்கமே செங்கைதனில் சங்கமே தாங்கேனே. ௬௯

௬௯. தலைவி கூற்று. சங்கமே ஊருங் கடவுளர் - கருடனை ஊர்தியாகவுடைய திருமால். தங்கமே தேடத் தணந்தார் - பொருள்வயிற் பிரிந்த தலைவர். வங்கமே - விளி; கடல். அனல்

வங்கமே யானேன் - அனலிலிட்ட ஈயம்போல் உருகுகிறேன். வெண் சங்கமே - விளி. செங்கைதனில் சங்கமே தாங்கேனே கையிலுள்ள வளைகள் கழல்கின்றன.

ஆற்று வெள்ளம்

பொருநையாறு

சிந்து

உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலின்
உதரங் கீறி யதிரும்நீர்
உதய வரைக்கும் பொதிகை வரைக்கும்
ஒத்துப் போம்படி முற்றும்போய்
பதைத்து நெளியும் துதிக்கை மூக்கன்
பண்ணைச் சாளை எண்ணெய்மீன்
பசலி திருக்கை கசலி கெளுத்தி
பண்ணுக் கும்பழம் பாசிமீன்
வதைக்கும் மகரங் குதிக்குஞ் சள்ளை
மத்தி உல்லம் பொத்திமீன்
மடந்தை கடந்தை சம்பான் நொறுக்கி
மலங்கும் பஞ்சலை கருங்கண்ணி
புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலில்
போக்கி அழகர் கருணைபோல்
பொருநை யாறு பெருகி வாற
புதுமை பாரும் பள்ளீரே. ருO

ருO. உதயவரை கீழ்த்திசையிலும் பொதிகைவரை மேற்றிசையிலும் உள்ளன. துதிக்கை மூக்கன் முதல் கருங்கண்ணியிறுதியாக உள்ளவை அனைத்தும் மீன்வகை. சாளை - எட்டங்குல நீளமுள்ள கடல் மீன். சள்ளை - ஆற்று மீன்வகை; 'சள்ளை வெள்ளையங் குருகு தானதுவா மெனக்கருதி வள்ளை வெண்மலர் அஞ்சி'—

அப்பர் சூ. உஅ. ௬. உல்லம் - கடல் மீன்வகை. தேளி - தேன் போலக் கவ்வும் உறுப்புடன் ஓரடிக்குமேல் நீண்ட ஈயவெண்ணிற முடைய விஷமீன். குளுவை - வரால் மீன்வகை. கூனி - இறால் மீன்வகை. உளுவை - ஆற்றுமீன்வகை.

சித்திரா நதி

குற்றாலத் திரி கூட மால்வரை
யுற்றே மேகம் பொழிந்தநீர்
கூடிப் பொருநை நாடித் திருமுக்
கூடற் பதியை வலங்கொண்டே
வற்ற மடுவிற் பறவை குறவை
வாளை கோளை தேளிமீன்
மயிந்தி உழுவை அயிந்தி கூனி
மணலி ஆரால் ஓராமீன்
பற்று அயிரை கெண்டை கெளிறு
பரு வராலும் அணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்திற்
பாய வயலிற் பாயவே
சிற்ற றென்பது பெற்றாலும் ஒரு
சிறியவர் மனப் பெருமைபோல்
சித்திரா நன்னதி பெருகி வாற
சித்திரம் பாரும் பள்ளீரே. ருக

ருக. பறவை முதல் பருவரால் இறுதியாக உள்ளன அனைத்துப் மீன்வகை. பறவை - பறக்கும் மீன்வகை. குறவை - வரால் மீன் வகை. தேளி - ஒரு விஷ மீன். இந்தப் பாட்டின் பின்,

சங்கர நயினார் கிருபையால்
சார்ந்து பொழிந்த மேகநீர்
தழைத்த புன்னையங் காவினில் சென்று
கிளைத்த பெருங்கோட் டூரினில்

சிங்கார மேனி வந்து காளிங்க
ராய னோடையில் சேர்ந்துடன்
சிவந்த குங்குமஞ் சந்தனங் கொட்டிச்
சேர்ந்து வந்த நீரெல்லாம்
கொங்கலர் குழல் சீதை பொருட்டால்
அங்கெ ழுந்த ராமன்கைக்
கோதண் டத்தினால் எழுந்த கங்கையைக்
கூடிச் சன்னிதி கூடியே
செங்கண் மாலழ கேசர் பதத்தைச்
சிறக்க வலங்கொண் டேகியே
செண்பகக் கோதண்ட ராம நதிவாற
சிங்காரம் பாரும் பள்ளீரே

என்ற செய்யுள் திரு. சண்முகசுந்தரம் என்பவர் எழுதிய கடிதப் பிரதிகளில் மட்டும் காணப்படுகிறது; ஓர் ஏட்டிலும் காணப்படவில்லை. முக்கூடலில் மூன்று ஆறுகள் கூடுகின்றன வாதலால், மூன்று ஆறுகளின் வெள்ளப்பெருக்கும் வருணிக்கப்பட வேண்டும் என்று கருதிய ஒருவரால் இது பிற்காலத்தில் சேர்க்கப் பட்டது போலும். மேலே பொருநையாறும் சிற்றாறும் கூறப் பட்டமையால், இதில் மூன்றாவது ஆறாகிய கோதண்டராமநதி என்னும் ஓடையின் வெள்ளப்பெருக்குக் கூறப்படுகிறது.

பண்ணைக்காரன் வரவு

கலிப்பா

ஆறுபரந் தப்பாலு மந்நிலத்தா ரிந்நிலத்திற்
பேறுடனே மற்றநிலைப் பேறும் பெறநினைந்தே
ஏறுபுனல் கண்டதற்பின் எம்பெருமான் முக்கூடல்
வீறுதரும் பண்ணை விசாரிப்பான் வந்தானே. ௫௨

சிந்து

மாறு கண்ணும் பருத்திப்பையின்
கூறை வயிறும் - கீரை
மத்துப் போல் தலையும் சுரை
வித்துப் போல் பல்லும்
நீறு போல் வெளுத்த ஊளை
யூறு நாசியும் - தட்டி
நெரித்தமாங் கொட்டைபோல் ஈ
அரித்த வாயும்
தாறு மாறாய் மீசையில் அஞ்
சாறு மயிரும் - தூங்கற்
சண்ணைக் கிடாப் போல் நடையும்
மொண்ணை முகமும்
வேறு கீறி ஓட்ட வைத்த
ஏறு காது மாய் - நேமி
வீரனார் முக்கூடற் பண்ணைக்
காரனார் வந்தார். ருங

ருங. திண்ணைக்கிடா - தின்று கொழுத்த கிடா. நேமிவீரனார்- சக்கராயுதந் தரித்த திருமால். பா - ம். கூறு வயிறும்.

மூத்த பள்ளி முகம் பார்த்து
வார்த்தை சொல்வா ராம் - பெரு
மூச்சுக் கொண் டிளைய பள்ளி
பேச்சுக் கேட்பா ராம்
சாத்தி மகள் காத்தி தன்னைப்
பேத்தி என்பா ராம் - மெல்லச்
சன்னையாய்க் களத்தில் வாடி
பின்னை என்பா ராம்

வாய்த்த தடிக் கம்பை யூன்றிச்
சாய்த்துப் பார்ப்பா ராம் - ஊத்தை
வாய்க்கு மெல்லப் புகை குடிக்கத்
தீக்குப் போவா ராம்
காத்தி ராத பள்ளன்பர
மார்த்தி என்பா ராம் - குச்சிற்
கண்ணைச் சாய்ப்பா ராம் முக்கூடற்
பண்ணைக் காரனார். ருச

ருச. பேத்தி : பரிகசிப்பதற்குள்ள உரிமை பற்றி. சன்னை - சைகை. பரமார்த்தி - உலக அனுமவமற்றவன். இங்கு சொல்லி யுள்ள விதமாய்ப் பண்ணைக்காரனைப் பரிகசிப்பது பள்ளுப்பிரபந்த வழக்கு. பா - ம். பின்னை : பெண்ணே. சாய்த்து நிற்பாராம்.

மூத்த பள்ளி முறையிடுதல்

எண்ணெயார் பூந்தயிலம் ஏற்றகுழல் மூத்தபள்ளி
பண்ணையா னோடுரைத்தாள் பள்ளன்மனக் கள்ளமெல்லாம்
வெண்ணெயார் வாயினிசை வேயழகர் முக்கூடற்
பெண்ணையார் கையிற் பிடிப்பார் பிடிப்பாரே. ருரு

ருரு. வெண்ணெயார் வாயினிசை வேய் அழகர் - வெண்ணெயுண்ட வாயிலே வேய்ங்குழலை வைத்துக் கீதமிசைக்கும் கண்ணனாகிய அழகர்.

சிந்து

தூக்குணிப் பள்ளன் - எய்க்கிற ஆட்டத்தைத்
துக்குணிக் கேளும் - முக்காலுஞ் சொன்னேன்
காக்குங் காலனை - பார்க்கவுஞ் செய்யான்
காலஞ் செய்வது - கோலஞ் செய்யுமோ
போக்கு நீக்கில்லை - மூக்கிலே கோபம் என்
புத்தியுங் கேளான் - சத்துரு நீலன்
வாக்கு வாதமுண் - டாக்கினுள் என்றென்னை
வைதாலும் வையும் - மெய்தானி தாண்டே. ருசு

ருசு. தூக்குணி - மானமற்றவன். தூக்குணி - சிறிதளவு. காலணை - நிலத்துக்கு நீர் தரும் வாய்க்கால் தலைப்பு. முக்காலும் சொன்னேன், காலஞ்செய்வது கோலஞ் செய்யுமோ, போக்கு நீக்கில்லை, மூக்கிலே கோபம், சத்துரு நீலன் என்பன பழமொழி போல் வழங்கும் தொடர்கள்.

கூட்டின மாட்டைக் - தொட்டவி ழான்ஒருக்
காலுந் தான்உழக் - கோலுங்கை தீண்டான்
தொட்டி யேர்க்காளை - மட்டிபோல் வந்துநான்
சோறிட் டாலுங்கண் - ஏறிட்டும் பாரான்
வட்டில் வாய் வைக்கில் - சட்டிகொண் டோங்கும்
மருதூ ராளை - விருதுக்கே வைத்தான்
பெட்டியால் வாரிப் - பட்டடை நெல்லெலாம்
பேய்த்தண் ணீருக்குத் - தேய்த்தான்கா ணுண்டே. ருஎ

ருஎ. தொட்டி ஏர்க்காளை - தொட்டியில் ஊறல்நீர் குடிக்கும் உழவுமாடு. தொட்டியில் நீர்குடிக்கும் உழவு மாடுகள் சில கண்ணை மூடிக்கொண்டு குடித்தல் இயல்பு. இது, குடும்பன் முக்கூடற் பள்ளி மனைக்குவந்து அவள் இடுஞ்சோற்றை அவள் முகம் நோக்காது உண்டு செல்லற்குவமம். சட்டி கொண்டு ஓங்கும்: மருதூராள் இயல்பைப் பழித்துக் கூறியவாறு. விருதுக்கே - கௌரவத்துக்கே. பேய்த்தண்ணீர் - கள். பட்டடை - நெற்களத்திலே சேமித்து வைத்துள்ள நெற்குவியல்.

இளைய பள்ளி கூறுதல்

கலிப்பா

மாற்றவள்சொற் கேளா மருதூரிற் பள்ளியுந்தான்
ஏற்றபடி சொன்னாள் இரண்டுபடில் யார்பொறுப்பர்
தேற்றமரி தன்றோ சிறுமைவரா மற்பெருமை
ஆற்றவல்ல மாதர் அழகர்புய மார்பினரே. ருஅ

ருஅ. மாற்றவள் - சக்களத்தி.

சிந்து

குடிலிற் கிடந்த பள்ளனை - முக்கூடற் பள்ளி
கூப்பிட் டெழுப்பி முந்தா நாள்
விடியப்போ வேலையிலென்றாள் - அவனும் போனான்
வெள்ளமும் மேல்வரத் தாச்சு
கடினப் பிரவிர்த்தி ஏதோ - திரும்பிவரக்
கண்டிலேன் இன்று மூன்று நாளாய்
அடிமைக்கு நேற்றிரா வெல்லாம் — உறக்கமில்லை
அழகர் அறிவார்கா ணாண்டே. ருகூ

ருகூ. கடினப் பிரவர்த்தி - பிரயாசமான வேலை. அடிமை: தன்னைக் குறித்தவாறு.

முப்பாலுஞ் சோறும் உண்ணவே - நடத்திக் கொண்டீர்
மூப்படி யானும் பேய்ப்பட்டான்
அப்பால் அவனுக் கொன்றானால் - நயினார் சேதம்
ஆமே அடியாளுக் கென்ன
துப்பான கலுங்கில் மறுகால் - நிலையா தென்று
சொன்னார்கள் இன்னதென் றறியேன்
இப்பால் அழகர் செய்தைக் - காணலா மென்றே
இருக்கிறேன் என்செய்வே னாண்டே. கூo

கூo. முப்பால் - மூன்றுவகைப்பட்ட பால். மூப்படியான் - பழைய அடியான். நயினார் சேதம் - பண்ணையாருக்கு நஷ்டம். கலுங்கு - வாய்க்கால் அல்லது நீர் நிலையிலுள்ள மதகு. மறுகால் - மதகிலிருந்து நீரைக் கொண்டு செல்லும் வாய்க்கால்.

பண்ணைக்காரன் கோபித்தல்

கலிப்பா

திசைபோன சூதுகற்ற தென்மரு தூர்ப் பள்ளிகள்ளி
அசையாமற் பள்ளனையுள் ளாக்கிவைத் துக் கொண்டேனுடன்

இசையாத வார்த்தைசொன்ன யென்றுபண்ணை யானெழுந்து
கசையால் அடிப்பனென்று கண்சிவந்து கூறினனே. ௬௧

௬௧. திசைபோன : 'இசையாற்றிசை போயதுண்டே' சீவக சிந்தாமணி, ௩௧. கசை - சவுக்கு

சிந்து

முக்கூடற் பள்ளியைப் போல்
சொக்காரி நீ யல்லவே
வக்கணை ஏன் மருதூர்
அக்கிரமப் பள்ளி. ௬௨

௬௨. சொக்காரி - தாயாதி ; சொம் - சொத்து; சொத்துக் குடையவள் சொக்காரி. வக்கணை - திறமையான பேச்சு.

குச்சுக் குள்ளே பள்ளனையும்
வைச்சுக்கொண் டதட்டாதே வாய்
தைச்சுப் போடுவேன் மருதூர்க்
கச்சற்காய்ப் பள்ளி. ௬௩

௬௩. கச்சற்காய் - முற்றாத இளங்காய் ; உபயோகமில்லாத காய், அற்பத்தனமானவள் என்பது கருத்து.

பள்ளன் வெளிவருதல்

கடின வுரையைக் கேட்டு
வடிவழகக் குடும்பன்
குடிலி லிருந்தே அரை
நொடியில் வந்தான். ௬௪

பண்ணைக்காரன் வினவுதல்

பள்ளனைப் பண்ணைக் காரன்
கள்ளமாய்ப் பார்த்துப் பள்ளா
துள்ளாதே பண்ணைச் செய்தி
விள்ளடா என்றான். ௬௫

பள்ளன் கூறுதல்

கலிப்பா

பத்துவடி வத்தழகர் பண்ணையான் கேட்டபடி
வித்துவகை மாட்டுவகை மேழிஏர்க் கால்முதலாய்க்
கொத்துவகை யத்தனையுங் கூட்டிவரத் துஞ்செலவும்
வைத்தஇருப் புங்குடும்பன் மாறுமற் கூறினனே. ௬௬

௬௬. பத்து வடிவத்து அழகர் - தசாவதாரங்களெடுத்த அழகர். வரத்து - வரவு.

சிந்து

பழகி னீர்அறி வீர்என் சமர்த்து
பயிரிடாக் கள்ளப் பள்அல்ல வேநான்
உழவு தான்ஒரு பன்றி யுழுந்தரை
ஒன்றல் லாமல் இரண்டெனக் கில்லை
அழகர் ஏவலி னாலே இலங்கை
அழித்து மீளுங் குரங்குள்ள மட்டும்
கிழமை தோறுங் கதிர்முளைத் தாலும்
கிடக்கவே ஒட்டுமோ பண்ணை யாண்டே. ௬௭

௬௭. பழகினீர் - பழகியவராகிய நீர். ஒரு பன்றி உழுந்தரை : இரணியாக்கனால் சுருட்டி ஒளித்துவைக்கப்பட்ட உலகத்தைத் திருமால் வராகாவதாரமெடுத்து மீட்டுவந்தார் என்ற குறிப்பு. அழகர் ஏவல் - இராமனது ஏவல். குரங்கு - இராம சைனியமாகிய குரங்குகள் ; இவை பயிரை அழித்து விடுகின்றன என்பது குறிப்பு.

இப்பாட்டு முதல் எட்டுப் பாட்டுக்கள் இருபொருள் தொனிக்கும்படி பள்ளன் பேசுகிறான்.

வித்து வகை

பலவெள் ளாமையிட் டேன்மணல் வாரியைப்
பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்
செலவு போனதும் போய்ச்சில பூம்பாளை
செண்டலங் காரர் தோப்புக்கே காணும்

கலக வேற்கைத் திருமங்கை யாழ்வானைக்
காணேன் மச்சு முறித்தானைக் காட்டிச்
சொலவொண் ணுத்தெய்வ தாசிகள் முத்தம்
சொரிகுரும்பை விற்றூர்பல ராண்டே. கூஅ

கூஅ. மணல்வாரி, பூம்பாளை, திருமங்கையாழ்வான், மச்சு முறித்தான், சொரிகுரும்பை என்பன நெல் வகைகள். பூம்பாளை நாலைந்து மாதங்களிலும் சொரிகுரும்பை ஏழெட்டு மாதங்களிலும் விளையும். மணல் வாரியைப் பெருமாள் அழித்தார்; பூம்பாளை நெல் தோப்பில் விதைப்பதற்குத் தான் காணும்; திருமங்கையாழ் வானைக் காணேன்; தாசிகள் முத்தம் சொரி குரும்பை விற்று விட்டார்.

எங்கும் போற்றும் பெருவெள்ள முன்னம்
இராமர் சேனைக்குண் டாம்படி யாச்சு
தங்கும் பேரைக் குலைவாழை காய்த்தது
சற்று மோநெல் லரிசி காணுது
பொங்கும் போரில் மறுவில்லை நீலப்
புயல்வில் லூன்றிப் புறஞ்சாய்ந்த துண்டோ
அங்கு மிங்குங்கொண் டாட்டுவ தெல்லாம்
அறிவேன் பாற்க டுக்கன்கா ணுண்டே. கூகூ

கூகூ. பெருவெள்ளச்சம்பா நெல் இராமர் சேனைக்கு உணவாய் விட்டது; பேரையிலிருந்து வந்த குலைவாழை என்ற நெல் நன்றாய் விளைந்தது; ஆனால் அது தக்கபடி அரிசி காணாது. குலைவாழை ஏழெட்டு மாதங்களில் விளையும் ஒருவகைச் சம்பா நெல்.

ஈடிலா வகைக் கின்னம் எழுதி
இராச வாணனை இரண்டுபங் கிட்டு
நாடியே காவை அம்பல வாண
நயினார் பேரிற்பின் பாதியுங் கூட்டித்

தேடினுல் அவர் முன்னின்ற பாதியும்
　　சேர்த்துக் கொள்ள மகாராச ஞமே
கூடினுற் கூட்டும் வல்வித்தை எல்லாம்
　　குருகை மாறனைக் கேளுங்கா ணுண்டே. எ0

எ0. இராசவாணன் - நெல்வகை. இராசவாணன் என்பதில் முற்பாதியாகிய 'இராச' என்பதையும் அம்பலவாணனுகிய நடராசன் என்பதில் பிற்பாதியாகிய 'ராசன்' என்பதையும் சேர்க்க மகாராசன் என்னும் பொருளுடைய 'இராச ராசன்' என்பது பெறப்படும். அம்பலவாண நயினர் : உகூ - ம் பாட்டின் அடிக்குறிப்புப் பார்க்க. குருகை மாறன் - நம்மாழ்வார்.

மாட்டு வகை

அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்
　　அழகர் பண்ணைக் குழவுமா டெங்கே
விதிவசந் தன்னில் ஆயிர மல்லியன்
　　மேற்றிசை முகஞ் சேர்ந்தது காணேன்
சதியி லேசெப் பறைபுகு மாட்டைக்
　　சடையடை யாளம் போய்ப்பார்க்க வேணும்
எதிரில் லாத மயிலையுஞ் செட்டிகொண்
　　டேகினுன் பேட்டை யேறுன்கா ணுண்டே. எக

எக. ஆயிரம் அல்லியன் மேல்திசை முகம் சேர்ந்தது - யானை போன்ற வலிமையுடைய ஆயிரம் உழவு மாடுகள் தம் இனத்தினின்றும் பிரிந்து மேல்திசை சென்றன, திரும்பிவரவில்லை என்பது கருத்து; ஆயிரம் இதழ்களுடைய தாமரைக்குக் கேள்வனுகிய சூரியன் அஸ்தமித்தான் என்பது மற்றொரு பொருள் ; அல்லியன் - தன் இனத்தினின்றும் பிரிந்த யானை. செப்பறை - முக்கூடலுக்கு அருகிலுள்ள ஒரு சிவாலயம்; சிதம்பரம்போலவே அமைக்கப்பெற்றது; இங்குள்ள மூர்த்தம் நடராஜா; திருநெல்வேலிச் சைவர்களுக்கு இப்பதி விசேஷமானது. செப்பறை புகுமாட்டை - சிலேடை ; செப்பறையில் நடராசா செய்யும் நடனத்தை என்றும், செப்பறை

புகுந்த மாட்டை என்றும் பொருள்படும். சதி - தாளம்; வஞ்சனை. மயிலை - மயிலாகிய புள்ளை; மயிலைக் காளையை. செட்டி - முருகன்; வணிகன்.

ஒற்றைக் கொம்பனைத் தாண்டவ ராயன்
உள்ளூர்க் கோவிலுக் குள்ளே யடைத்தான்
மற்றைக் காளைக ளெல்லாம் நயினார்
வடமலை யப்பர் பேரிட்டு நிற்கும்
பற்றைக் காத்துக் கிடக்கும் ஒருசெம்
பருந்து சாயற் சுமைக்குத் தளப்பன்
புற்றைக் காத்திடும் பாம்பு கடித்துப்
பொருது விண்ணிற் பறக்குங்கா ணாண்டே. எஉ

எஉ. ஒற்றைக் கொம்பன் - விநாயகன், ஒரு கொம்புடைய மாடு. தாண்டவராயன் - நடராஜா; தாண்டவராயர் என்பவர் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தாரென்பது விளங்குகிறது. மற்றைக் காளைகள் வடமலையப்பர் பேரிட்டு நிற்பதால் அழகர் பண்ணைக்கு உபயோகமில்லை. வடமலையப்பர்: கச - ம் பாட்டின் அடிக்குறிப்புப் பார்க்க. பற்று - வயல். செம்பருந்து - செம்பருந்தின் நிறமுடைய மாடு; செம்பருந்து - கருடன். சுமைக்குத் தளப்பன் - சுமையைத் தாங்க வலியற்றது. பொருது விண்ணிற் பறக்கும் - தாங்கமாட்டாமல் இறந்தது.

ஏர்க்கால் வகை

திருமுக் கூடல் அழகர்க் கிளைய
தெரிவை நீலியைத் தேவியாய்க் கொண்ட
மருதப் பர்கொழு நானூறும் மாணிக்க
வாசகன் கிட்ட வாங்கியே கொண்டார்
விருதுக் கேகாரைக் காட்டார் வழக்கிட்டு
மேழி சேரமுன் வேண்டியே கொண்டார்
கருதிப் பெண்ணுக்கும் ஆணுக்குங் காமன்
கலப்பை முற்றுஞ் செலவிட்டா ராண்டே. எந

எங. அழகர்க்கு இளைய தெரிவை - திருமாலின் தங்கையாகிய உமாதேவி. மருதப்பர் - மருதீசர். கொழு - கலப்பை நுனியில் பொருத்தியுள்ள இரும்பு ; நானூறு கொளுவோடமைந்த திருச்சிற்றம்பலக் கோவையாரைச் சிவபெருமான் மாணிக்கவாசகர் பாடத் தாம் ஏட்டில் எழுதிக்கொண்டார் என்பது ஒரு பொருள். விருதுக்கு - கொடிக்கு. காரைக் காட்டார் - காரைக்காட்டு வேளாளர் என்னும் கார்காத்த வேளாள வகுப்பினர் ; இவர்கள் மேழிக் கொடி யுடையவர்களாதலின், மேழியெல்லாம் வாங்கிக்கொண்டார்கள். காஞ்சியில், திருக்கச்சிநெறிக் காரைக்காடு என்ற ஸ்தலத்தில் ஆதியில் இருந்தவர்களாதலால் காரைக்காட்டார் எனப் பெயர் பெறுவார்கள் என்பதும் உண்டு. காமன் கலப்பை - யாழ்.

அனகன் ஆறை வரும்நயி னுத்தை
அழகர் மண்டபத் தூண்சாரம் ஏற்றக்
கனகநீள்வடங் கோடி கொடுத்தேன்
கார்வ ரைக்கு முழுவடம் ஒன்றே
எனசொல் வேனுகம் எண்ணிக்கை நாலுக்
கிருந்த தொன்றுழத் தன்னுக் தன்னைத்
தினமும் நான்பகற் காணேன் இராத்திரி
தேடிப் பூத மெடுக்குங்கா ணண்டே. எச

எச. அனகன் - அழகன். ஆறை வரும் நயினுத்தை - ஆறை ஆதி அழகப்ப முதலியார். இவர் இங்கு அதிபதியாக இருந்த காலம் கி. பி. 1676 - 1730. அழகர் மண்டபத் தூண் சாரம் ஏற்ற-அழகர் மண்டபத்தைக் கட்டும்போது தூண்களைச் சாரங் கட்டி ஏற்றுவதற்காக. வடங்கோடி - கோடி வடக்கயிறுகள். கார்வரைக்கும் உழும் வடம் ஒன்றே - வருகிற கார்ப்பயிர் வரைக்கும் உழுவதற்கு ஒரு வடமே மிகுதியுள்ளது. என சொல்வேனுகம்-என்ன சொல்வேன் நுகம், என்ன சொல்வேன் உகம் என இருவிதமாய்ப் பிரிக்க. உகம் எண்ணிக்கை நாலு - நான்கு யுகங்கள்.

ஆயரை வருவித்தல்

ஏது செய்வேன் என் றோதிய பள்ளன்தன்
ஏய்ப்புக் கேட்டந்தப் பேய்ப்பண்ணைக் காரன்
பாதி கேட்பதுஞ் சோதனை செய்வதும்
பார்க்க லாம்பின்பு தீர்க்கலா மென்றே
ஆதி நாள்வயல் வீதிகண் ணுறெல்லாம்
ஆடுவைத் தின்னும் மேடுந் திருத்தக்
கோதி லானந்தன் சாதி இடையனைக்
கூட்டிவா பள்ளா கூட்டிவா என்றான். எரு

எரு. ஏய்ப்பு - பொய் வார்த்தை. பேய்ப் பண்ணைக்காரன் - அறிவில்லாத பண்ணைக்காரன். கண்ணுறு - பாசனமாகும் நன்செய் நிலப்பகுதி. கோதிலான் நந்தன் சாதி இடையன் எனப் பிரிக்க; கண்ணனை வளர்த்தவனான குற்றமில்லாத நந்தகோபன்.

பள்ளன் ஆயரைத் தேடிப்போதல்

கலிப்பா

மைப்புயலே போலும் வடிவழகர் பண்ணைவயல்
அப்படியே தப்பாமல் ஆடுவைக்க வேணுமென்றே
ஒப்பரிய பள்ளன் உவந்துபண்ணை யாண்டவனார்
செப்பியவா றுயர்மனை தேடி நடந்தானே. எசு

சிந்து

வீறான முக்கூடல் விளங்குபண்ணை உரமேற்ற
மாறாமல் ஆடுகொண்டு வருவேன்கா ணுண்டே. எஎ

தொழுதுவிடை கொண்டுநீர் சொன்னபடி ஆடுகொண்டு
பொழுதுபுகு முந்திவந்து புறப்படுவே னுண்டே. எஅ

குட்டிகளுங் கொண்டுசிறு குடில்களையுங் கொண்டாட்டுப்
பட்டிகளுங் கொண்டின்று பகல்வருவே னுண்டே. எகூ

எகூ. குடில், ஆட்டுக் கிடையைப் பாதுகாத்து மூடுவதன் பொருட்டு.

அழகர் திருவுளம்போல் ஆண்டவர்க்கு மனதுவர
உழவுவயல் உள்ளதெல்லாம் உரம்வைப்பே னுண்டே. அ0

ஆயன் வரவு

கலிப்பா

கண்டார் பயப்படத்தன் கையிற் சுழற்றுதடி
செண்டாடிக் கொண்டுபள்ளன் சென்றழைத்த சொற்படியே
தண்டாத சங்கத் தமிழழகர் முக்கூடல்
கொண்டாடுங் கோனேரிக் கோன்வந்து தோன்றினனே.

அக. கொண்டாடி - செண்டு போல் சுழற்றி. தண்டாத - நீங்காத. கோனேரிக்கோன் - இடையன் பெயர்.

சிந்து

பாலனையி லுற்ற மணம்
மேலனைய நெற்றி யுடல்
பட்டை நாமம் பதி
னெட்டு நாமம் பெறவே
நூலழகில் வெண் குதிரை
வாலழகில் வாய்த்த நரை
நுரைவா யெனுங் குளத்தில்
திரைபோல் அலைந்திட
மாலழகர் பண்டு துயில்
ஆலழகர் முக்கூடல்
வடிவழகர் வயலில் எருப்
பொடியுழவில் வைக்கவே
கோலொருகைக் கொண்டு கடைக்
காலுமொரு கை தூக்கிக்
கோனேரிக்கோன் ஆட்டுக்கிடை
கொண்டு வந்தான். அஉ

அஉ. பால் அளையிலுற்ற மணம் மேல் அளைய-பால் தயிர் முதலியவற்றின் மணம் தன்னிடத்தே வீச. நெற்றியுடல் - நெற்றியிலும் உடலிலும். நூலழகில்......நரை - அழகிய வெண்மையான குதிரையின் வால்போல் நரைத்த மயிர். இடையனது வாயென்னும் குளத்தில் நுரையாகிய அலைகள் அலைந்தன. கோல் - மாடு ஓட்டும் கொம்பு. கடைக்கால் - மூங்கிற் குழாயாலான பால் கறக்கும் கலம். ஒரு கை தூக்கி - ஒரு கையில் கொண்டு. ஆட்டுக்கிடை - எரு வைப்பதற்காக வரும் ஆட்டு மந்தை.

இடையன் சொல்லுதல்

பூதக்கோன் பொதுவாட்டை
வாதுக்கே ஒருபாம்பும்
புலியுங்காத் திருக்கு மது
கலிகண்டாய் குடும்பா
வேதக்கோன் கிடை யாண்ட
தேதுக்கா யவன்சாதி
வீதிதொறுங் கிடந்த கிடை
பேதியான் குடும்பா
தாதக்கோன் ஆட்டை முதல்
சோதித்தேன் பணத்துக்கே
தனதாக நிறுத்தினதுன்
மனதறியுங் குடும்பா
நாதக்கோன் முக்கூடல்
ஆதிக்கோன் பண்ணைவயல்
நானடா உரமேற்றும்
கோனடா குடும்பா. அரு

அரு. பூதக்கோன்...காத்திருக்கும் - பூதங்களுக்கு நாயகனாகிய சிவபெருமான் அம்பலத்தில் ஆடும் நடனத்தை வாதம் காரணமாக ஒரு பாம்பும் புலியும் (பதஞ்சலியும் வியாக்கிரபாதரும்) தரிசித்திருக்கும்; கலி - கலிகாலத்து விசித்திரம். பூதக்கோன் என்னும் இடைய

னுடைய ஆட்டைப் பாம்பும் புலியும் காத்திருக்கும் என்பது மற்றொரு பொருள். வேதக்கோன்-பிரமன். சோதித்தேன்-கேட்டேன். நாதக்கோன் - நாதசொரூபனான திருமால். ஆதிக்கோன்: ஆதிநாயகர் (உரு).

மூத்த பள்ளி முறையீடு

கலிப்பா

இடையரைக்கொண் டேவயலில் ஏவிஇளை யாள்குடியிற்
கிடைநமக்கு நல்ல கிடைஎனச்சென் றான்குடும்பன்
அடைவுபட்ட செய்திபண்ணை யாண்டவனார் கேளுமென்றே
படைதொடுத்து முக்கூடற் பள்ளிமுறை யிட்டாளே. அச

அச. அடைவு பட்ட செய்தி - பள்ளன் இளையாள் வீட்டிலேயே தங்கிவிட்ட செய்தி; பொருந்திய செய்தி எனலுமாம்.

சிந்து

அடுத்திடும் வீட்டார் - சொல்லிக்
கொடுத்திட மாட்டார் - கிடைதான்
  ஆட்டினிற் கிடையோ - இளையாள்
  வீட்டினிற் கிடையோ
படுத்திடும் பள்ளன் - வேலையைக்
கெடுத்திடுங் கள்ளன் - எனைக்கண்டு
  பதறியே எழுந்தான் - கைகால்
  உதறியே விழுந்தான்
எடுத்திடும் மடலன் - மயற்பேய்
தொடுத்திடுஞ் சடலன் - களவுகள்
  இன்னமும் அறியீர் - அடியாள்
  சொன்னதுங் குறியீர்
தடுத்தெனை யாளார் - அழகரும்
கடுத்தனைக் கேளார் - கடுஞ்சிறைச்
  சாலையிற் போட்டால் - வளைவான்
  வேலையி லாண்டே. அரு

அரு. கிடை - கிடை, இருப்பு. எடுத்திடும் மடலன் - இளைய வளுக்காக மடலேறவுந் தயாராயுள்ளவன். தான் காதலித்த தலைவியை அடைதல் வேண்டிப் பனைமடலாலான குதிரையைத் தலைவன் ஏறி ஊர்வேன் எனல் மடலேறுதல் என்னப் பெறும். அகத்திணைப் பாடல்களில் இதற்கான இலக்கியத்தைக் காணலாம். மயற்பேய் தொடுத்திடுஞ் சடலன் - மையல் என்னும் பேய் அவன் உடலைப் பிடித்திருக்கிறது. அழகர் ஆளுதலுஞ் செய்யார், கேட்டலுஞ் செய்யார் என்பது பொருள். நடு - நியாயம்.

வரத்தினை மீறுஞ் - செலவுக்குத்
தரித்திரம் ஏறும் - பேய்க்கொடை
　　மட்டுக்கட் டில்லான் - கூத்துக்கும்
　　கொட்டுக்கும் நல்லான்
உரத்திடுங் காளை - சுழியன்
நரைத்தலை மோழை - புதியவள்
　　ஊட்டுக்குக் குறித்தான் - வில்லடிப்
　　பாட்டுக்குப் பொறித்தான்
பரத்திகைச் சுள்ளும் - அக்கரைத்
திருத்தினிற் கள்ளும் - கொண்டஞ்சு
　　பசுவையும் விற்றான் - மனத்தினில்
　　அசுயையும் அற்றான்
கரத்தொடு மரமும் - பசும்புரை
மரத்தொடு கரமும் - சேர்த்திரு
　　காலினில் விலங்கும் - பரிக்கவே
　　கோலுவீ ராண்டே. அசு

அசு. வரத்தினை மீறும் செலவுக்குத் தரித்திரம் ஏறும்: பழமொழி. பேய்க்கொடை மடடுக் கட்டில்லான் - அறிவில்லாமல் பொருளை அளவின்றிக் கொடுத்து விடுகிறான். கொடை: சிறு தெய்வத்துக்கு மூன்று நாள் செய்யும் விழா. நல்லான் - விருப்பமுடையவன். உரத்திடும் - வலிமையுள்ள. சுழியன் - சுழியுடைய மாடு.

மோழை - கொம்பில்லாத மாடு. ஊட்டு - உணவு; 'தரணி யெல்லாம், ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண்' - திருவாசகம் சாழல் கச. புதியவள் - மருதூர்ப்பள்ளி. வில்லடிப் பாட்டு - வில் அடிக்கும் பாட்டு, விற்பாட்டு; வில்போலமைந்த ஒரு கருவியை ஒலித்துக் கொண்டு, மறவர் முதலிய சாதிமக்கள் சிறு தெய்வங்கள் விழாக் கொள்ளுங் காலத்தே பாடும் பாட்டு; திருநெல்வேலிப் பிரதேசத்தில் இப்பாட்டு இன்றும் மிகுதியாகக் காணலாம். பரத்திகைச் சுள் - பரத்தியினிடப் பெறும் கருவாடு. அக்கரைத் திருத்து - பொருநையாற்றுக்கு அக்கரையிலுள்ள சிற்றூர். அசுயை - வெட்கம். பசும் புரை மரம் - உள் துளைக்கப்பட்ட பச்சைமரம்; தொழுமரம். இப்பாடல் பற்றிய வரலாற்றை முன்னுரையிற் காண்க.

தானுட்கை போலுஞ் - சளஞ்செய்து
மீனுக்கு வாலும் - பாம்புக்குத்
தலையையுங் காட்டி - எனக்காசை
வலையையும் பூட்டித்
தேனுக்குள் பாலாய் - அவள் மஞ்சள்
மேனிக்கு மாலாய்ப் - பணமெல்லாம்
சிந்தியே கெட்டான் - எனையின்று
சந்தியில் விட்டான்
ஈனத்துக் கிவளாம் - தன் வெகு
மானத்துக் கவளாம் - காலவன்
இங்கே தரியான் - கனவிலும்
அங்கே பிரியான்
ஊனுக்கும் உயிராம் - பூமிக்கும்
வானுக்கும் பயிராம் - அழகருக்
குதவும்பள் வேண்டில் - அவன் இனிப்
பதனங்கா ணுண்டே. அஎ

அஎ. உட்கை - உள்ளாள். சளம் - துன்பம். விலாங்கு மீன் பாம்பு காணும் பொழுது பாம்பு போலவும், மீன் காணும் பொழுது

மீன் போலவும் தோற்றும், தலை பாம்பு போலவும் வால் மீன் போல வும் இருத்தலினால். 'பாம்புக் கொருதலை காட்டி ஒருதலை, தேம்படு தெண்கயத்து மீன்காட்டும் :- ஆங்கு, மலங்கன்ன செய்கை மகளிர் தோள் சேர்வார், விலங்கன்ன வெள்ளறிவி னார்' - நாலடி. ௩௭௫. தேனுக்குள் பாலாய் - இளைய வளிடத்தில் தேனும் பாலும் கலந்தது போல் இனிமையாய். அவள் - இளையவள். மாலாய் - ஆசை கொண் டவனாய். ஈனம் - இழிவு. காலவன்: காலனை ஒத்தவன், கால் அவன் தரியான். ஊனுக்கு உயிரும், பூமிக்கும் வானுக்கும் பயிரும் ஆகிய அழகர் என்க ; 'பாரதனிற் பயிரானான் காண்' 'வான்பயிரை, அப்பயிரின் வாட்டந் தீர்க்கும் துளியானை' என்பன திருத்தாண்ட கம். உதவும் பள் - பயிர்த்தொழில் செய்வதற்கான பள்ளன். அவன் இனிப் பதனம் - அவன் விஷயத்தில் இனிச் சாக்கிரதையாயிருக்க வேண்டும் என்பது கருத்து.

ஆருக்கும் பணியான் - சீவலப்
பேரிக்குள் கணியான் - விரலெண்ணும்
அரிப்பிட்டுப் போட்டான் - பள்வரி
தெரிப்பிட்டுக் கேட்டான்
ஊருக்குள் ஏற்றம் - இவனிந்தச்
சேரிக்குள் நாற்றம் - குறும்பு செய்
தூராருக் குழைத்தான் - அழகர் சொம்
மாறாகப் பிழைத்தான்
ஏருக்குள் மாடும் - முந்தின
காருக்குள் சூடும் - தன்கிளை
எவருக்கும் பொதுவாம் - ஆட்கொள்ளும்
அவருக்கும் அதுவாம்
பாருக்குள் மறைத்தான் - பணம் பல
பேருக்கும் இறைத்தான் - மெத்தவும்
பைத்தியந் தொடுத்தான் - சவுக்கினில்
வைத்திட ராண்டே. அது

அஅ. கணியான் - சோதிட மந்திரங்களில் வல்லவன்; அல்லது மதியான் என்றுமாம். சொம் - சொத்து. அழகர் பண்ணைக்கு மாறு செய்கிறான் என்பது கருத்து. கார் - கார்ப் பயிர். சூடு - நெற்கதிர். மாடும் நெல்லும் தன் கிளையாகிய இளையவள் சுற்றத்தார் எல்லோருக்கும் உரியது, தன்னை ஆட்கொள்ளும் மற்றப் பள்ளியருக்கும் உரியது எனப் பள்ளன் சொல்லுகிறான் என்பது கருத்து. சவுக்கு - காவற்கூடம்.

ஆனைக் குட்டியைப் போல் - எருமையை
ஞானிச் செட்டி கைக்கே - பணம் பதி
னைஞ்சுக்குக் கொடுத்தான் - கொழுந்தியார்
குஞ்சுக்கிட் டெடுத்தான்
மீனைக் கொண் டளிப்பான் - கருவாட்
டீனைக் கொண் டொளிப்பான் - நான் சொன்னால்
வீம்புகள் அடிப்பான் - அவள் சொன்னால்
பாம்பையும் பிடிப்பான்
கோனைக் கண்டவனோ - கோன் தலைப்
பேனைக் கண்டவனோ - போய் அவள்
குச்சினில் வீழ்ந்தான் - வயல் எரு
வைச்சினி வாழ்ந்தான்
பூனைக் குட்டியைப் போல் - பதுங்கிச் சொல்
மோனைக் கட்டுடனே - அவன் முழுப்
பொய்கொண்டு வருவான் - சவுக்கினில்
வையுங்கா ணண்டே. அசு

அசு. ஞானிச் செட்டி - ஞானிச் செட்டி என்பவன். குஞ்சுக்கு இட்டெடுத்தான் - பெண்ணுக்குச் சீர்வரிசைகள் செய்தான். கோன் - இடையன். குச்சு - குடிசை. வைச்சு - வைத்து. சொல் மோனைக் கட்டு - அலங்காரமான பேச்சு.

ஏச்சுக்குப் பிறந்தான் - வரவரக்
கூச்சத்தை மறந்தான் - இளையவள்
இளமையைக் குறித்தான் - முதிருமென்
வளமையைப் பறித்தான்
நீச்சுக்கு மேலே - நிலைப்பென்ன
பேச்சுக் கையாலே - உழச் சற்றே
நினைப்பதுமில்லை - எனைத் தேடிக்
கனைப்பது மில்லை
தீச்சுட்ட தாறும் - பழித்திடும்
நாச்சுட்ட தேறும் - அவனை முன்
சீயென்று போட்டேன் - நான் இனி
வாயொன்றுங் காட்டேன்
பேச்சிட்டுப் பாரும் - மரக்கணு
வாச்சிக்குத் தீரும் - பயப்படப்
பிடித்தது பிடியாய்க் - குட்டையில்
அடித்திடு மாண்டே. ௬0

௬0. ஏச்சு - பழிச்சொல். கனைப்பது; களவுக்காலத்தில் இரவில் தலைவியைத் தேடிவந்த தலைவன் தன் வருகையைக் கனைப்பொலி மூலம் தன்காதலிக்குணர்த்துதலாகிய அகப்பொருள் வழக்கு. தீச்சுட்டதாறும் நாச்சுட்டதோறும் 'தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே, நாவி னாற் சுட்ட வடு' - குறள். மரக்கணுவை வாச்சியினால் தான் சேதிக்க முடியும்: திருமலை. பள்ளு அஅ. குட்டை-தொழு. இப்பாடல்களில் வரும் மரபுத் தொடர்களின் நயம் அறிந்து இன்புறத்தக்கது.

பள்ளன் வரவு

கலிப்பா

கூத்தர்திரு முக்கூடல் கண்ணர்பண்ணை யாண்டவர்முன்
சித்தமுற மூத்தபள்ளி செப்பிமறைந் தேகியபின்
பொய்த்தமொழி பேசிமுதற் போனபள்ளன் மீண்டும்எரு
வைத்தவய லூற்று வருவதுபோல் வந்தானே. ௬௧

கூக. கத்தர் - கர்த்தர். உற்று - போய்ப்பார்த்து.

நிலவகை கூறுதல்

சிந்து

மாரிச் சீவலப்
பேரித் தண்ணீர்பாய் - கண்ணூ றுன
வாசவன் தொழும் அழகர் பேருள்ள
கேசவன் திருத்தும்
காரிற் பயிரிட்
டேருக் கதிகமாய்க் - கதலி வாழை
காய்த்த வயலுங் கீர்த்தி சேர்நயி
ஞத்தையார் திருத்தும்
சாரற் கறுக்கும்
ஈரத் தூற்றலாம் - நாற்றுப் புரவும்
சன்னை வெட்டியான் வாய்க்கால் போக்கும்
வன்னி யடித்திட்டும்
கோரைக் குண்டோடை
யோரத்திற் புரவும் - பார்வை யான
குத்துக் கல்லும் குளத்துப் பற்றும்
மூத்தன் பகுதியும்
வீரப் பாண்டியப்
பேரிப் பாய்ச்சலும் - நாச்சி யார்திரு
விடையாட் டமுஞ்சுமை தாங்கி வட்டமும்
கடைபத்தித் தடியும்
பாரத் தென்மரு
தூரிற் பண்ணைக்கே - யழக ராச்சிப்
படைக்குத் தெற்கு வடக்குக் குளங்கல்
மடைக்கு முள்பற்றும்

வாரத் துடையான்
ஏரிக் கட்டளையும் - வட்ட மாமொரு
வர்க்கத்தி லாந்தைக் குளமுந் தோணி
நிற்குந் துறைச் சுற்றும்
சேரச் செய்பல
பேரிட் டுள்ள தெல்லாம் - எருவைத் தேயின்று
திரும்பினே னின்னந் தேவரீர் ஏவல்
விரும்பினே னுண்டே. ௬௨

௬௨. சீவலப்பேரி, வீரப்பாண்டியப் பேரி-முறையே ஸ்ரீ வல்லப னுலும் வீர பாண்டியனுலும் கட்டப்பெற்ற ஏரிகள். வாசவன் - இந்திரன். கேசவன் திருத்து முதலியன நிலங்களின் பெயர்கள். கார் - கார் நெல் பயிரிடுங் காலம். கதலி வாழை - ஒரு நெல்வகை. நாற்றுப் புரவு - நாற்றங்கால். திருத்து, புரவு, பற்று, பகுதி, தடி, குண்டு, கட்டளை முதலியன வயல்களின் பொதுப் பெயர்கள். வன்னி யடித்திட்டு-வன்னிமரத்தடியிலுள்ள மேட்டு வயல். கோரைக் குணடு-கோரையடர்ந்த வயல்; குண்டு - சிறு வயல். திருவிடையாட்டம்-தேவஸ்தானங்களுக்கு விடப்படும் மானியம்; 'திருவிடை யாட்ட மாக இறையிழிச்சிக் கொடுத்தோம்' என்பது சாசனம். கடை - கடைசியிலுள்ள. வாரத்துடையான் ஏரிக் கட்டளை : இந்த ஏரியின் நீர்ப்பாசனத்துக்குட்பட்ட நிலம். செய் - வயல்.

பள்ளனைத் தொழுவில் அடித்தல்

கலிப்பா

எந்தைதிரு முக்கூடல் ஏரியில்நீ ஆடுவைத்துத்
தந்தவித மோமருதூர்ச் சங்காத்தி வீட்டுறக்கம்
சிந்தைதொட்டுப் பாரெனக்கண் சீறுபண்ணைக் காரனங்கே
வந்தபள்ளன் காலில் மரக்குட்டை சேர்த்தானே. ௬௩

௬௩. சங்காத்தி : சங்காத்தம் - சினேகம்; 'அளகைக்கோன் தன் சங்காத்தி ஆரூரில் தனியானை காண்' - அப்பர் ௬. ௭௬. ௫. பா - ம். கண்சிவந்து.

இளைய பள்ளி புலம்பல்

சிந்து

பழிகாரி முக்கூடற் பள்ளி - சரடு செய்த
பள்ள னென்றுமுகம் பாராமல்
வழியே போகுங் களவெல்லாம் - தலையின்மேல்
வலித்திட்டுப் பற்றுக் குறித்தாள்
கொழிய லரிசி யிட்டாலுங் - குப்பை கிண்டும்
கோழி என்பதைப் புதுக்கினாள்
அழியாத காசழியுமோ நான் - ஏது செய்வேன்
அழகர் திருநாமப் பள்ளா. கூசு

கூசு. சரடு செய்த பள்ளன் - தாலி கட்டிய புருஷன். (திருமலை. பள்ளு கக0.) கொழியல் அரிசி - தீட்டாத அரிசி; சத்துள்ள உணவு என்பது கருத்து. 'குற்றுத கொழியலரிசி' என்பது பெரும்பாணாற்றுப்படை உரை (உஎடு). 'குப்பை கிளைப் போவாக் கோழி'—நாலடி. ருஎக. 'குப்பை கிளைப்பறாக் கோழி போல்வார்'—பெருங்கதை. அழியாத காசு அழியுமோ - செல்லாத காசு செல்லுமோ. அழகர் திருநாமப் பள்ளா: அழகர் பெயரைத் தரித்த பள்ளன்; வடிவழகக் குடும்பன் என்பது.

பள்ளன் தேற்றுதல்

முடுகவா ராசிய முண்டு - குண்டுணிக்காரி
மூத்தபள்ளி பார்க்க வருவாள்
நடுவே தெய்வஞ் சோதிச்சுதையோ - பண்ணை
நயினார்க்குஞ் செவிகண் ணுச்சே
கடுகநீ போய்விடு சும்மா - சகதியிலே
கல்லெறிந்த கதை யாக்காதே
வடுவந்தால் மறைக்கப் போமோ - வருவதெல்லாம்
வந்துதீரும் மருதூர்ப் பள்ளி. கூரு

கூரு. முடுக - விரைவாக. ராசியம் - ரகசியம். குண்டுணிக்காரி - கோள் சொல்லுகிறவள். நயினார் - எசமானன். வடு - இழிவு.

மூத்தபள்ளி சோறுகொண்டு வருதல்

எங்கே கிடக்கிறான் பள்ளன் - நயினாரேசொல
ஏறு விண்ணப்ப மொன்றுண்டு
செங்கான் எனக்கு மூத்தவன் - அவன்எதுக்கோ
தெய்வத்துக் காக்கிவைத் தானும்
அங்கே யிருந்து சட்டியில் - கறியுஞ் சோறும்
அனுப்பினான் நான்தனித் துண்பேனோ
உங்கள் அடியா னுக்குநான் - கொடுத்துப் பார்த்தால்
உண்பானோ உண்ணானோ ஆண்டே. கூசு

கூசு. மூத்த பள்ளி, தன் முன்னவனான செங்கான் என்பவன் தெய்வத்துக்குப் படைத்து அனுப்பிய சோற்றைப் பள்ளனுக்குக் கொடுக்க எடுத்துவருகிறாள். 'ஏறுத விண்ணப்பமிங்கிது கேட்டருள்'—அம்பிகாபதி கோவை சஅகூ.

கலிப்பா

தாரமிரண் டானாலுந் தன்கணவன் வாஞ்சையினால்
வாரமுடன் முக்கூடல் வந்தபள்ளி தந்திரமாய்க்
காரணம்வே றொன்றுபண்ணிக் காரனுக்குச் சொல்லிமனச்
சோரமுடன் பள்ளனுக்குச் சோறுகொண்டு வந்தாளே. கூஎ

கூஎ. வாரம் - அன்பு. சோரம் - கள்ளம்.

பள்ளனிடத்துச் சொல்லுதல்

சிந்து

மருந்துக் கள்ளி மருதூரிற் பள்ளி
வட்கரை விட்டு வந்த பிறகு
திருந்தப் பேசின வார்த்தையுங் கேளாய் நான்
தெற்கே பார்த்தால் வடக்கேநீ பார்ப்பாய்

பருந்தாட்டங் கொண்டு கொப்பத்தில் ஆனை
பட்டாப் போல்அகப் பட்டாய் மரத்தில்
பொருந்தத் தன்வினை தன்னைச்சுற் றும்விதி
பொய்க்குமோ சொல்லாய் முக்கூடற் பள்ளா.

கூஅ. பருந்தாட்டம் - பெருந்துன்பம். கொப்பம் - யானை பிடிப்பதற்கு வெட்டிய பெருங்குழி.

பள்ளன் வேண்டல்

மிஞ்சிப் போனதை என்சொல்ல வேணும்
விருந்து விட்டபின் வெட்டினா ருண்டோ
கொஞ்சப் பேச்சுகள் சொல்லாதே வாய்த்தண்ணீர்
குடித்த லுங்கொப் புளித்தலும் ஆமே
பஞ்சில் பற்றும் நெருப்புப்போல் நெஞ்சில்
பழம்பகை யின்னும் பற்றவை யாதே
கெஞ்சிப் பண்ணை நயினாரை மன்னிப்புக்
கேட்டுப் பாரடி முக்கூடற் பள்ளி. கூகூ

கூகூ. விருந்தாகக் கொண்டோருக்குத் தீமை செய்தாருண்டோ என்பது பொருள். கொஞ்சப் பேச்சு - சிறுமைத்தனமான வார்த்தை. வாய்த்தண்ணீர்...ஆமே - வாயிற் கொண்ட நீரைக் கொண்டார் விரும்பியவாறு குடித்தலுமாகும், கொப்புளித்தலுமாகும், அது போல உன்வசமான என்னை நீ சிறைசெய்விக்கவும் சிறைவிடுக்கவும் வல்லவள் என்றவாறு. பஞ்சில் பற்றும் நெருப்புப்போல் - பஞ்சிலே பிடித்த நெருப்பு வெளியே தெரியாமல் உள்ளேயே கனிந்து பஞ்சு முழுவதையும் எரித்துவிடுவதுபோல.

மூத்த பள்ளி கூறுதல்

முட்டி விட்டுக் குனியும் பழங்கதை
மூத விக்கிறாய் பேதவித்துப் போய்
கெட்டி கெட்டி இளையவள் சொல்லல்லாற்
கிழட்டுப் பள்ளிசொல் பண்ணையார்க் காமோ

கட்டிநான் பேசப் போமோ அரண்மனைக்
காரியம் என்றன் கைக்குள்ளே யுண்டோ
வட்டிலுக் குள்வாய் வைத்ததெல் லாந்துறை
வடிவழகர் திருநாமப் பள்ளா. க00

க00. மூதலிக்கிறாய் - மெய்ப்பிக்கிறாய். பேதலித்து - சிந்தை திகைத்து. கெட்டி கெட்டி - இகழ்ச்சிக் குறிப்பு; நன்று நன்று என; 'கெட்டி கெட்டி எங்கே நினைத்தீர்' - நெல்விடுதூது உஎசு. கட்டி - புனைந்து. அரண்மனைக் காரியம் - பண்ணையார் வீட்டுக் காரியம்.

பள்ளன் வேண்டல்

பக்குவஞ் சொல்ல நீதியோ நானிந்தப்
பாடு பட்டும் இனியறி யேனோ
சக்க ளத்தி அவளென் றுனக்குச்
சரிசொன்னால் அந்தத் தாழ்ச்சி யுனக்கே
மக்க ளாணைஎன் றாணைஉன் றாணைநீ
வார்த்த கஞ்சி குடித்துக் கிடப்பேன்
விக்கல்வாய்ப் பண்ணை யாண்டையைக் கேட்டென்னை
மீட்டுக் கொள்ளடி முக்கூடற் பள்ளி. க0க

க0க. பக்குவம் - புத்தி. மீட்டுக்கொள் - தொழுவிலிருந்து விடுவி.

மூத்த பள்ளி பண்ணைக்காரனை வேண்டல்

கலிப்பா

சத்தியமாய்ச் சொன்னபள்ளன் சற்றுமனங் கோணாமல்
புத்திசொல்லி உன்சிறைநான் போய்மீட்பன் என்றெழுந்து
முத்திதரு மாலழகர் முக்கூடல் மூத்தபள்ளி
அத்திசையில் நின்றபண்ணை யாண்டவர்முன் சென்றாளே.

க0உ. சத்தியமாய் - இவ்விதம் ஆணையிட்டு.

சிந்து

ஐயா பராக்குப் பராக் கும்மைக் கும்பிட்டேன்
ஆண்டே - உம்மை
யல்லவோ தேடி அடியார் இங்கே வந்தேன்
ஆண்டே
கையாரக் கண்ட களவும் பொறுப்பீரோ
ஆண்டே - பள்ளன்
காவலைக் கண்ணாலே பார்க்கப் படாதுகாண்
ஆண்டே. கoங

கoங. பராக்கு-கவனம் என்ற பொருளில் வழங்கும் குறிப்புச் சொல். காவல் - தொழுமரத்தில் மாட்டிக் கிடத்தல். பார்க்கப் படாது - பார்க்கப் பொறுக்கவில்லை.

தன்மத்துக் கிந்தப் பிழையைப் பொறும் எங்கள்
ஆண்டே - மூலை
சாய்ந்தால் வயிறல்லோ தாங்க வேணும் பண்ணை
ஆண்டே
வன்மத்தைப் பார்த்தால் அவன்இலக் கல்லவே
ஆண்டே - தென்
மருதூரிற் பள்ளியால் வந்தபொல் லாப்புக்காண்
ஆண்டே. கoச

கoச. இலக்கு - எதிரி.

ஆடிக் காலாவதி வெள்ளாமை நாள் ஆச்சே
ஆண்டே - பள்ளன்
அல்லாம லேபயிர் ஆரிடுவார் பண்ணை
ஆண்டே
தேடியிடும் பள்ளுப் பிள்ளைக்கிணை கண்டீர்
ஆண்டே - இனித்
தேவரீர் சித்தம்என் பாக்கியம் காண்பண்ணை
ஆண்டே. கoரு

௧0௫. ஆடிக் காலாவதி - ஆடிமாதத்திலே முறைப்படிப் பயிர் செய்யவேண்டிய காலம் கடந்து போகிறது என்ற குறிப்பு.

சட்டம் மேல்சட்டம் பிழைத்தாலும் பெண்பிள்ளை
ஆண்டே - பொல்லாத்
தண்ணீர் குடித்த வெறியால் முதல் சொன்னேன்
ஆண்டே
கட்டளை யிட்ட படிபுத்தி கேட்பன்காண்
ஆண்டே - பள்ளன்
கால்மரம் வெட்டி விடுவிக்க வேணுங்காண்
ஆண்டே. ௧0௬

௧0௬. எத்தனை பிழைகள் செய்தபோதிலும், பெண் பிள்ளை யானமையால் பொறுக்க வேண்டும் என்பது பொருள். பொல்லாத் தண்ணீர் - கள். கால் மரம் - காலில் மாட்டிய குட்டை. பா - ம். பிணை தானும் என் பிணையாண்டே; சொன்னான்.

பள்ளனை விடுவித்தல்
அவன் கணக்குச் சொல்லுதல்

கலிப்பா

மூத்தபள்ளி சொற்படியே முக்கூடற் பள்ளனைக்கால்
சேர்த்தமர முங்கழற்றிச் செய்வரிசை செய்ததற்பின்
காத்திருந்து பின்னுமவன் கண்ணர்பண்ணை யாண்டவர்முன்
வாய்த்தவிதை வர்க்கமுடன் மாட்டுவர்க்கம் சொல்வானே.

௧0௭. செய்வரிசை - செய்யத்தக்க உபசாரங்கள்.

வித்து வகை

சிந்து

சித்திரக் காலிவாலான் சிறைமீட்டான் மணல்வாரி
செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச் சம்பா
முத்து விளங்கிமலை முண்டன்பொற் பாளைநெடு
மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா

கத்தூரி வாணன்காடைக் கழுத்தன் இரங்கல்மீட்டான்
கல்லுண்டை பூம்பாளைபாற் கடுக்கன் வெள்ளை
புத்தன் கருங்குறுவை புனுகுச்சம் பாவும்இரு
பூவுக்கும் விதைசேரிற் போட்டே ளாண்டே. க0அ

க0அ. சித்திரக்காலி முதல் புனுகுச்சம்பா வரை நெல்வகைகள். பூ - போகம். சேர் - நெல்லைச் சேமித்துவைப்பதற்காக வைக்கோற் புரியால் கட்டப்படுவது.

மாட்டு வகை

குடைக்கொம்பன் செம்மறையன் குத்துக்குளம்பன் மேழை
குடைச்செவியன் குற்றாலன் கூடுகொம்பன்
வடர்ப்புல்லை கரும்போரான் மயிலை கழற்சிக் கண்ணன்
மட்டைக்கொம்பன் கறுப்பன் மஞ்சள்வாலன்
படப்புப் பிடுங்கி கொட்டைப் பாக்கன் கருமறையன்
பசுக்காலன் அணிற்காலன் படலைக்கொம்பன்
விடர்த்தலைப் பூநிறத்தான் வெள்ளைக் காளையும் இந்த
விதத்திலுண் டாயிரமே மெய்கா ணாண்டே. க0கூ

க0கூ. குடைக் கொம்பன் முதல் வெள்ளைக் காளை வரையில் மாடுகளின் பெயர்கள். குடைக் கொம்பன் - வளைந்த கொம்புடையது. செம்மறையன் - சிவந்த கறையுடையது. கூடு - நுனி கூடிய. புல்லை மயிலை - புல்லை, மயிலை நிறமுடையவை. குற்றாலன் - குற்றாலத்திலிருந்து வந்தது. கழற்சிக் கண்ணன் - கழற்சிக்காய் போன்ற கண்ணுடையது. மட்டை - பட்டையான, நேரே வளராமல் வளைந்த. கருமறையன் - கரிய கறையுடையது. படலை - பரந்த. பா - ம். குராலன் (- புகர் நிறமுடையது).

ஏர்க்கால் வகை

தயரத ராமரான தாமரைக் கண்ணழகர்
தனுவாங்கி மரமேழும் சாய்த்த நாளில்
கயமர மொன்றுவளைக் கையொன்று நுகமொன்று
கழுந்தேர்க்கா லொன்றுசிறு கைக்கோல் ஒன்று

வயலுழுங் குத்தியொன்று வளைமேழி ஒன்றிந்த
வகையேழும் கிளைஏழு மரத்தால் செய்தே
இயல்பாய்ப் பதனம்பண்ணி இருப்பதுண் டத்தனையும்
எண்ணி அறியவல்லார் எவர்கா ணுண்டே. ௧௧௦

௧௪௦. தயரத ராமர் - தசரத புத்திரரான இராமர். தனுவாங்கி-வில்லை வளைத்து. மரமேழும் சாய்த்த நாள் - தன் பராக்கிரமத்தைச் சுக்கிரீவனுக்குக் காட்டவேண்டி ஒரே கணையால் ஏழு மராமரங்களையும் துளைத்த நாள். கயமரம்-கசமரம், பரம்புச் சட்டம்; வளைக்கை-கசமரத்தை நுகத்தோடிணைக்கும் மரக்கருவி. நுகம் - நுகத்தடி, நோக்கால்; கழுந்து ஏர்க்கால் - திரண்ட நுனியுடைய ஏர்க்கால்; ஏர்க்கால் - கலப்பை, வண்டி முதலியவற்றில் நுகத்தைப் பொருத்தும் பாகம்; சிறு கைக் கோல் - சாட்டைக் கழி; குத்தி கலப்பையின் குத்தி, ஏர்க்காலின் அடிப்புறத்தில் இணைந்து நிலத்தை உழுங் கருவி; பாரையையும் குத்தி என்று கூறும் வழக்குண்டு; வளைமேழி-ஏர்க்காலின் அடிப்புறத்தோ டிணைந்து வளைவாயுள்ள உறுப்பு; இராமர் துளைத்த ஏழு மராமரங்களையுங் கொண்டு இவ்வேழு கருவிகளையும் அமைத்துக்கொண்டதாகப் பள்ளன் சொல்லுகிறான். பதனம் பண்ணி - பத்திரப் படுத்தி. பா - ம். தனு வாளி.

இலங்கா புரியில்முன்னாள் எங்கள் அழகருடன்
எதிர்த்த ராவணன்மகன் இந்திர சித்து
கலங்கவே வந்தசிறைக் கருடனைக் கண்டுகெட்டுக்
கழன்ற பாச வடக்கயி றாயிரம்
குலங்க ளுடன்மடிந்த கொலைவாள் அரக்கர் வேலும்
கூர்வாளும் சேர்த்தடித்த கொழுவாயிரம்
மலங்காமல் இந்தப்படி வகையெல்லாந் தேடிவைத்தேன்
வயலிலே நாளேரிட வாரீ ராண்டே. ௧௧௧

௧௧௧. இராமனையும் இலக்குவனையும் இந்திரசித்து நாகபாசத்தால் பிணிக்க, அப்போது அங்குவந்த கருடனைக் கண்டு நாகபாசம் கழன்றோடிய வரலாறு இங்கு குறிப்பிடப்படுகிறது; அந்த நாக

பாசத்தால் செய்த வடக்கயிறுகள் ஆயிரமுண்டு எனப் பள்ளன் கூறுகிறான். வடக்கயிறு - ஏர்க்காலையும் நுகத்தையும் பிணைக்க உபயோகிப்பது ; உறுதியா யிருப்பதற்காகத் தோல் அல்லது நரம்பால் செய்யப்பெறும். நாளேரிடுதல் - நல்ல நாளில் ஏர் பூட்டி யுழத் தொடங்குதல் ; பொன்னேர் பூட்டுதல் என்பதும் இது.

முகூர்த்தம் பார்த்தல்

கலிப்பா

ஏரும் பலவிதையும் ஏர்க்கால் முதலான
சீரும்அழ கக்குடும்பன் செய்திபெறச் சொன்னதற்பின்
ஆரும் பரவும் அழகர்பண்ணை யான்கேள்வி
கூறும் முகிழ்த்தம் குடும்பனுக்குச் சொன்னானே. கசஉ

கசஉ. முகிழ்த்தம் - முகூர்த்தம்.

சிந்து

சத்தமி புதன்சோதி தைதுலக் கரணம்
தவறாத சுபயோகந் தருபஞ் சாங்கம்
மெத்தநன் றெனப்பார்த்து மேலான வேதியர்கள்
மிக்கதுலா முகிழ்த்தம் விதித்தா ரின்று
பத்தர்பணி முக்கூடல் பரமனார் அழகர்தம்
பண்ணைக்கே ரிடவேணும் பள்ளா என்றே
உத்தாரம் பண்ணைக்காரன் உரைத்தான் உரையைக்கேட்ட
உடனேகுடும்பன் ஏர்கொண் டுழச்சென் றானே. கசந

கசந. சத்தமி, புதன், சோதி, தைதுலை, சுபயோகம் முறையே திதி, வாரம், நட்சத்திரம், கரணம், யோகம் ஆகிய பஞ்ச அங்கங்கள். சோதி - சுவாதி. துலா முகிழ்த்தம் - துலா லக்னம்.

உழும் பள்ளர் வகை

சாத்தான் பெரியான்கொன்னைத் தாண்டி அரியான்
சடையான் உடையான்கட்டைச் சங்கன் புங்கன்
போத்தன் அருகன்கோணப் பூவன் மருதன்
பூலான் வயித்திவேலான் புலியன் கலியன்
காத்தன் வெருகன்கப்புக் காலன் முருகன்
கண்டன் கறுத்த முண்டன் கங்கன் சிங்கன்
கூத்தன் முதலாயுள்ள பள்ள ரெல்லாம்
குரவையிட் டேரைப்பூட்டிக் கூடி யுழுதார். ௧௧௪

௧௧௪. சாத்தன் முதல் கூத்தன் வரையில் பள்ளர் பெயர்கள்.

பள்ளனை மாடு முட்டல்

பூட்டுங் காளையைவிட்டுப் பூட்டாக் காளையைப்
பூட்டும் பொழுதிலொரு புல்லைக் காளை
மோட்டு வரால்குதிக்க முகத்தை மாறி
முடுக்கி மறிக்கும்ஆளை முட்டி யோட
மாட்டுக் குறும்படங்க மறிப்ப னென்றே
வடிவழகக் குடும்பன் வந்து மறித்தான்
கோட்டு முனையாலது குத்து மளவில்
குடும்பன் சற்றேமயக்கங் கொண்டு விழுந்தான்.

௧௧௫. புல்லை - மங்கிய மஞ்சள் நிறம். கோட்டு முனை-கொம்பு நுனி.

பள்ளியர் வரவு

கலிப்பா

துள்ளியெழுங் காளை தொடர்ந்தபள்ள னைப்பாய்ந்து
தள்ளிவிடும் சோர்வுகண்டு சற்றுந் தரியாமல்
புள்ளின்கடை வாய்கிழித்த புங்கவனார் முக்கூடல்
பள்ளிவரத் தென்மருதூர்ப் பள்ளியும்வந் துற்றாளே.

கககூ. தொடர்ந்த - தன்னைப் பிடிக்கும் பொருட்டுப் பின் தொடர்ந்த. புள்ளின் கடைவாய் கிழித்த புங்கவனுர் : கஉ.

மூத்த பள்ளி புலம்பல்

சிந்து

மதயானை கைப்பிடிக்க வல்லாய் - இந்த மாட்டுக்கு
மாட்டாமல் போனதென்ன சொல்லாய்
கதையோமுன் மலைகளையும் முறித்தாய் - அந்தபலம்
கண்டிலேன் என்றேடி மறித்தாய்
சதுர்வேதன் விதித்ததலைப் பொறியோ - மருதூரிற்
சக்களத்தி புலைமருந்தின் வெறியோ
முதலேஈ தார்விளைத்த இடும்போ - தெரிந்திலேன்
முக்கூடல் அழகர்பண்ணைக் குடும்பா. ககஎ

ககஎ. மாட்டாமல் - வலியாற்றுமல், சதுர்வேதன் - பிரமன். முதலே : விளி.

இளைய பள்ளி புலம்பல்

வடுப்படா மேனிவடுப் படுமோ - நன்றுநன்றென்
வல்லாளன் சமர்த்தும் போய் விடுமோ
தடுத்துநீ ஏன்மாட்டைத் தொடர்ந்தாய் - முக்கூடல்
சதுரிபார்த்துச் சிரிக்கவோ கிடந்தாய்
அடுத்திதுவும் உனக்குவர முறையோ - மலையின்மேல்
ஐயாபூ லாவுடையார் குறையோ
படுத்தகிடை எழுந்திருந்து கொள்ளாய் - வடிவழகர்
பாதம்மற வாதபண்ணைக் குடும்பா. ககஅ

ககஅ. சதுரி : சதுர் - சாமர்த்தியம். பூலாவுடையார் : ஒரு காவல் தேவதை ; இதன் கோயில் மலைமேலே இருந்ததெனத் தெரிகிறது ; ஙஉ.

கலிப்பா

ஏங்கியிரு பள்ளியரும் இவ்வா றிரங்கிநிற்கும்
தேங்குதலை வார்த்தை செவியிற் புகுதலுமே
தாங்குதுயர் நீங்கித் தலையசைத்துத் தோள்குலுக்கிப்
பாங்கினொடு முக்கூடற் பள்ள னெழுந்தானே. கககூ

உழுது விதைத்தல்

சிந்து

பள்ளன் எழுந்துநிலை தரித்தான் - நின்ற
பள்ளியர் முகம்பார்த்துச் சிரித்தான்
மெள்ளப் புருவங்கோட்டி நெரித்தான் - மாட்டை
மீட்டுமோர் பூட்டியுழத் தரித்தான். கஉ0

கஉ0. கோட்டி - வளைத்து.

உழுத உழவைக்கண்டு களித்தான் - பள்ளர்
உள்ள பேரைஎல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக்கடன் கழித்தான் - அந்தத்
தொளியில் விதைகள்எல்லாந் தெளித்தான். கஉக

கஉக. தொளி - சேறு, வயல்.

முளைக்குத் தண்ணீரை அடைத் திட்டான் - கொல்லை
முழுதும் மறுநாள்வெட்டி விட்டான்
வளைத்து வேலிசூழ நட்டான் - நாற்று
வளர்க்க நாளும்ஒருப் பட்டான். கஉஉ

கஉஉ. முளை - முளைத்துவரும் நாற்று.

வளர்ந்த நாற்றைமுகங் கண்டான் - சேரி
மள்ளர் கூடமது வுண்டான்
அளந்தி டாமகிழ்ச்சி கொண்டான் - பண்ணை
ஆண்டவர்க் கந்தச்செய்தி விண்டான். கஉ௩

கலிப்பா

நாறுந் துழாயழகர் நாட்டிற் பழனமெல்லாம்
ஏறும் பயிர்தருநாற் றின்றுநட வேணுமென்றே
தேறும் படியறிக்கை செய்துபண்ணை யாண்டவனார்
கூறும் பணிதலைமேல் கொண்டுபள்ளன் மீண்டானே. கஉச

கஉச. நாறும் துழாய் - மணம் வீசுகின்ற துளவ மாலை. பழனம் - வயல். ஏறும் - செழிக்கின்ற.

நாற்றுப் பறித்தல்

சிந்து

மூந்தித் தரிசை யடித்து மறித்து
முச்சா லடித்திட் டுழவு நாலும்
முழுதும் உழுது திருந்தப் பரம்பு
மூன்றுந் தடவியே
அந்தத் தொளிக்குட் சமைந்த நாற்றை
அடுத்த வயலில் பிடுங்கி வேறே
அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க
ளாய்க்கு வித்தபின்
வந்தித் தழகர் பதத்தைத் துதித்து
வருந்து நாற்றை எடுத்து நெற்றியில்
வைத்து நாலு திசையும் நோக்கி
வாழ்த்திக் கும்பிட்டே
பந்திப் படுத்தி நிரையை வகுத்துப்
பரவை யொலிபோல் குரவை யெழுப்பி
பயிர்நெருங் காலல் கலந்து போகாமல்
பதியப் பதியும் பள்ளீரே. கஉரு

கஉரு. மறித்து முச்சால் அடித்து - மீண்டும் மும்முறை மடக்கி உழுது. நாற்றை நெற்றியில் வைத்துக் கும்பிட்டு: முதன்

முதலில் நாற்றைப் பிடுங்கி நடும்பொழுது, பள்ளர் நாற்று முடியை நெற்றியில் வைத்துத் தெய்வத்தை நினைத்துப் பயிர் செழிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்துப் பின்னர் நடவு தொடங்குதல் வழக்கம். பந்திப் படுத்தி - வரிசையாக அமைத்து. பரவை ஒலி- கடலொலி. குரவை - நடுவோர் பாடும் பாட்டு. பதியும் - நடும்.

பள்ளியர் வகை

சின்னி குருந்தி அருதி மருதி
செல்லி இருவி எல்லி கலிச்சி
திருவி அணைஞ்சி வெழுதி பெரிச்சி
செம்பி வம்பி தம்பிச்சாள்
நன்னி உடைச்சி சடைச்சி குமுக்கி
நல்லி பூலி ஆலி வேலி
நாச்சி பேச்சி சுந்தி எழுவி
நாகி போகிலாள்
பொன்னி அழகி நூவி சேவி
பூவி சாத்தி காத்தி அம்மச்சி
பூமி காமி வேம்பி கரும்பி
புலிச்சி அங்காளி
கன்னி பொதுவி அன்னம் பாலி
கள்ளி யுங்கலந் தொருவர்க் கொருவர்
கைவி ரசலாய் நடுகைச் சமர்த்தைக்
காட்டும் பள்ளீரே. கஉகூ

கஉகூ. சின்னி முதல் கள்ளி வரை பள்ளியர் பெயர். கைவிரசலாய் - வேகமாயும் சாமர்த்தியமாயும். சாத்தி : நுசு.

நடுகை

கலிப்பா

தூற்றுக்கால் பூந்துளவத் தாரழகர் முக்கூடற்
சேற்றுக்கால் மள்ளருக்குத் தென்றற்கால் என்னுமோ

ஆற்றுக்கா லாட்டியருள் ஆட்டெழுங்கால் பண்ணைநடும்
நாற்றுக்கால் விட்டு நடுகைக்கால் ஏறாதே. கஉஎ

கஉஎ. நாற்றுக்கால் - கொத்தான காலுடைய. ஆற்றுக் காலாட்டியர் - மருதநிலப் பெண்டிர் (திவாகரம்); ஆற்றுக்கால் - ஆற்றிலிருந்து பிரிந்துவரும் வாய்க்கால்.

சிந்து

படைகொண் டேவருங் கரனையும் - பொரு
விடயஞ் சேர்திரி சிரனையும்
பண்டு முடித்த கணையினர் - குகன்
கண்டு பிடித்த துணைவனார்
குடை குன்றாய்ப் பசுக் கிடைநின்றார் - முக்
கூட லழகர் வயலுள்ளே
கொண்டாடிக் கொண்டு நடச்செய்தே - இன்று
கண்டோ மிதென்ன புதுமையோ
தொடையென்றால் வாழைத் தண்டைப்போல் - விழிக்
கடையென்றால் கணை ரெண்டைப்போல்
சொருக்கென்றால் மேகப் படத்தைப் போல் - முலை
நெருக்கென்றால் இணைக் குடத்தைப் போல்
இடையென்றால் வஞ்சிக் கொடியைப்போல் - வரும்
நடையென்றால் இளம் பிடியைப்போல்
இருந்த சாயலுக் கிப்பால் - குருந்தி
திருந்தி னாள்பாரும் பள்ளீரே. கஉஅ

கஉஅ. கரன், திரிசிரன் - இலக்குவனால் துன்புற்ற சூர்ப்பனகைக்குத் துணையாகப் படையோடு வந்து இராம லக்ஷ்மணர் மீது போர் தொடுத்த அரக்கர். முடித்த - கொன்ற. குடை குன்றாய் : கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகத் தூக்கி, இந்திரன் பெய்வித்த கல்மாரியினின்றும் பசுக்களைக் காத்த வரலாறு. நடச்செய்தே - நடும்பொழுது. சொருக்கு - கொண்டை.

கூடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்
கஞ்சனார்க் கொரு நஞ்சனார்
கடையும் அமுதம் உடையுந் திரையிற்
காட்டி அண்டருக் கூட்டினார்
அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர்
அழகர் முக்கூடல் வயலுள்ளே
ஆடிப் பாடி நாற்று முடியை
அலைத்துக் குலைத்து நடச்செய்தே
வடிக்கும் மதுவைக் குடிக்கும் ஆசை
மயக்கமும் பெருந் தியக்கமும்
வரம்பில் பாய்ந்து பரம்பில் சாய்ந்த
வாட்டமும் முகக் கோட்டமும்
துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்
சோர்ந்து விரிந்த கூந்தலும்
தொடையும் நெகிழ்ந்த உடையும் கிடந்த
கிடையும் பாரும் பள்ளீரே. கஉசு

கஉசு. அரவில் நடிக்கும்-காளிங்க நர்த்தனம் செய்யும். கஞ்சனார்க் கொரு நஞ்சு அன்னார் - கம்சனுக்கு நஞ்சு போன்றவர். கடையும் அமுதம்...ஊட்டினார் - பாற்கடல் கடைந்து அமுதத்தை அமரருக் குத் தந்தவர், அடிக்குள் அடங்கும் படிக்கு - மகாபலியிடம் நிலம் வேண்டித் திரிவிக்கிரமாவதாரம் எடுத்தபோது ஓரடியில் அடங்கிய பூலோகத்துக்கு. தியக்கம் - தேக்கம். எயிறு-பல்.

புங்கவர் தமிழ்ச் சங்கம் மருவும்
புலமைத் தலைமை அழகனார்
பொருநை யாற்றணை பெருகுங் கால் புனல்
பொருத மருதூர் வயலுள்ளே

தங்கள் வேலை நாற்றுக்கும் பள்ளர்
அங்க லாய்க்குஞ் சோற்றுக்கும்
தர்மதப் படவே மற்ற தொன்றைச்
சாட்டி மேட்டில் கூட்டமாய்
எங்கும் காப்பொலி பொங்க வேஅதற்
கெதிராய்ச் சங்கிலி அதிரவே
இலங்கு முலைகள் குலுங்கவே காதில்
இசையும் பணிகள் அசையவே
அங்கும் இங்கும் செங்கை நீட்டி
அருதியுஞ் சின்ன மருதியும்
அரியாளுங் கட்டைப் பெரியாளுங் கும்மி
அடிப்பதைப் பாரும் பள்ளீரே. கங0

கங0. புங்கவர் - சிறந்தவர், கடவுள். சங்கம் மருவும் அழகர் - தண்டாத சங்கத் தமிழழகர் (அக). அங்கலாய்க்கும் - பெரிதும் விரும்பும்.

வெள்ளானைக் கிறை போற்றுவார் - ஒரு
புள்ளாடற் கொடி ஏற்றுவார்
வேதம் பரவும் பாதர் வைகுண்டர்
வீரர் அழகர்முக் கூடலார்
உள்ளூர்ப் பண்ணை வயலுளே - தெற்கு
வெள்ளூர்ப் பள்ளி வெயிலியும்
உளக்குடிப் பள்ளி உடைச்சியும் - மேலக்
களக்குடிப் பள்ளி சடைச்சியும்
தள்ளாடிக் கொண்டு நடச்செய்தே - பள்ளர்
துள்ளாடிக் கூட்ட மிடச்செய்தே
தையலி மகள் பொய்யலி கிட்டச்
சாடிப் பெரியான் ஓடிப்போய்

கள்ளா லுற்றது மீறியே - நிலே
கொள்ளா மல்தடு மாறியே
காப்பைக் காட்டென்று கையைப் பிடிக்குங்
கோப்பைப் பாரும் பள்ளீரே. கங௧

கங௧. வெள்ளானைக்கு இறை - ஐராவதத்துக் கிறைவனை இந்திரன். புள்ளாடற் கொடி ஏற்றுவார் - கருடனைத் தனது வெற்றிக்கொடியாக வைத்த திருமால். வெள்ளூர் உளக்குடி, மேலக் களக்குடி: ஊர்களின்பெயர்கள். சாடி-விரைந்து. கோப்பு-உபாயம்.

சிறுகண் வேழ முறுவெந் துயரம்
தீர்த்து முன்னின்று காத்தவர்
திருமுக் கூடல் அழகர் பழைய
திருவிளை யாட்டுப் புரவிலே
குறுவை யறுதா ளடியையும் பள்ளர்
பரவி உழுத தடியையும்
குழப்பிப் பரம்பு தடவிக் காவிட்
டுழப்பிச் சம்பா நடச்செய்தே
மறுகி மறுகிச் சருவக் குடும்பன்
மச்சினி கூழைப் பிச்சியை
வாவென் றான்அவள் போவென்றாள் இவன்
மறித்தான் அவள்பின் பிரித்துப்போய்
தறுகி அறுகங் கொடியிலே அடி
தட்டி விழுந்த மட்டிலே
தலையைத் தாங்குறாப் போலவே குத்து
முலையைத் தாங்குறான் பள்ளீரே. கங௨

கங௨. சிறுகண் வேழம் - கஜேந்திரன். திருவிளையாட்டுப் புரவு (திருவிடையாட்டப் புரவு) - ஒரு வயலின் பெயர். குறுவை-மூன்று மாதங்களில் பயிராகும் நெல்வகை. அறுதாளடி - குறுவை யறுத்த பின் சம்பா பயிரிடவேண்டிய நிலம். தாளடி என்பது இன்றும் உள்ள வழக்குச் சொல். தடி - வயல். தறுகி - தடுக்கி.

பத்துத் தலையும் அரக்கன் புயமும்
தத்தக் கணையொன் றேவிய
பருவப் புயலின் உருவத் தழகர்
பண்ணைக் கண்ணுறு நடச்செய்தே
முத்தக் குடும்பன் பெற்ற பொத்தணி
மொண்டிச் சோரன் மாறனூர்
மூக்கி தமக்கை காக்கி கறுப்பி
மூவிக் கிளைய நாவிதன்
குத்து முலையும் முத்து நகையும்
குறிக்கிறான் அந்தச் சிறுக்கியும்
கூசிப் பார்க்கிறாள் அதற்கவன் மெல்லப்
பேசிப் பார்க்கும் ஆசையால்
எத்தத் துணிந்தே அதட்டிட் டவள்முன்
ஏர்க்காலை விட்டு நோக்காலை
எடுக்கிறாப் போலே கிட்டக் கிட்டப்போய்
அடுக்கிறான் பாரும் பள்ளீரே. கஙஙு

கஙஙு. அரக்கன் - இராவணன். பருவப் புயல் - கார்காலத்து மேகம். நோக்கால் - நுகக்கால்; வாய்க்கால் என்றும் பாடம்.

செழுந் திருப்பதந் தொழுந் தவத்தினர்
சித்த முருகி நித்தமும்
தேட வருமுக் கூட லழகர்
சிற்றாற் றுக்காற் பற்றிலே
உழுந் தொழிற்படு பழந்தொளிப் புனல்
உடைச்சு முடங்கல் நடச்செய்தே
ஒண்டி வயிற்றுப் பண்டிப் பானை
தொண்டிக் கள்ளை மண்டியே

எழுந்த நெட்டையன் கழுந்து மொட்டையன்
இருவக் குடும்பன் மருமகன்
ஈச்சக் குடும்பன் பாச்சக் காலே
எட்டி முட்டித் தட்டியே
கொழுந்தி பக்கத்தில் விழுந்த தற்கவள்
கூடப் பிறந்த மாடன்போய்
கொண்டை யைப்பிடித் திழுக்கிறான் வம்புச்
சண்டையைப் பாரும் பள்ளீரே. கசுச

கசுச. சிற்றாற்றுக் கால் - சித்திரா நதியிலிருந்து வரும் வாய்க் கால். முடங்கல் - மூலையிலுள்ள வயல். தொண்டிக் கள் - நெல்லாலாக்கின கள்: சிந்தாமணி கஉகூகூ உரை. பாச்சக் கால் - பாய்ச்சற் கால்.

பயிர் விளைவு

கலிப்பா

பாரின் அமுதுண்ணப் பசிக்களிப்பார் நின்றநிலை
பேரினும்மென் மேலும் பெருகுதற்குச் சாட்சியென்றே
காரினுரு வச்சுருதி காரணர்முக் கூடல்வயல்
சீரின்நடு நாற்றுநட்ட செய்யினில்நின் றோங்கியதே. கசுரு

கசுரு. நின்ற நிலை பேரினும் - செல்வங் குறைந்து வறுமை எய்தினும்.

சிந்து

பதிந்த நடவுதேறிப் பசப்பு மேறிப்
பசந்து குருத்துமென்மேற் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும்
முதல்வ ரனத்தழைத்து முதல்குழைந்தே
பொதிந்த பொதியைநீட்டிப் புட்டில் காட்டிப்
புரப்போர்பொன் னிணங்குகை போல வணங்கி
எதிர்ந்த கதிர்முதிர்ந்தே இடைபழுத்து
ஏற்ற விளைவுதோற்றந் தோற்றியதே. கசுசு

க௩௬. பதிந்த - நட்ட. பசப்பு - பசுமை. முதல்வர் - திருமால். பொதி - கதிர்த் தொகுதி. புட்டில் - அம்புக்கூடு ; நெற்பயிரின் பொதிக்குவமை.

அறுவடை

முறுக விளைந்தவாறு முற்றுந் தேற
முக்கூடற் பண்ணைக்காரன் முன்பு கூற
மறுபடி யவன்சொன்ன வகைநன் றென்ன
மள்ளர் பலரும்நாடி வயலிற் கூடி
உறுதெய்வ நிலைபோற்றி உரிமை சாற்றி
ஓங்குநாட் கதிர்கொய்தார் உவகை செய்தார்
நிறுவி நிறைதெரிந்தார் நெருங்கி யரிந்தார்
நிரப்பி யரிகளெங்கும் பரப்பி னூரே. க௩௭

க௩௭. நாட் கதிர் கொய்தல் - நல்ல நாளில் கதிரறுக்க ஆரம்பித்தல். அரி - அரிந்த கதிர்த் தொகுதி.

கடிதிற் புரிமுறுக்கிக் கதிரிறுக்கிக்
கட்டின கட்டெடுப்பார் களத்தில் விடுப்பார்
நெடிதிற் சுமைகொண்டுய்ப்பார் நிலைப்போர் வைப்பார்
நின்றபோரைச் சரிப்பார் நிலத்தில் விரிப்பார்
பிடியிற் பகடணைப்பார் பிணையல் பிணைப்பார்
பிணையல் விடத்தொடுப்பார் பேர்த்துக் கொடுப்பார்
பொடிவைக் கோலைப்பிடிப்பார் பொலியைக் குவிப்பார்
பொலிதூற்றி யாற்றிப்பொலி பொலியென் றளப்பார்.

க௩அ. பிணையல் - ஒன்றோடொன்று இணைத்துக் கட்டப்பட்ட மாட்டின் கூட்டம்; பிணையலாகக் கட்டுவார் என்க. பேர்த்துக் கொடுப்பார் - மாடுகள் நடத்தலால் மிதியுண்ட வைக்கோலைப் புரட்டிக்கொடுப்பார் ; பொடி வைக்கோலைப் பிடித்தலாவது மாடுகள் நடத்தலால் பொடிந்து நொறுங்கிய தூளை அரித்தெடுத்தல். பொலி - தூற்றாத நெற்குவியல்.

நெல்லளத்தல்

தினச் சத்திரத்துக் கென்றும் பெரியநம்பி
திருமாளிகைக் கென்றுஞ்சில நெல்லுக்கொடுப்பார்
சனக் கட்டளை ஏழு திருப்பதிக்கும்
தலத்தார் படிக்குஞ்சில சாலியளப்பார்
மனத்துக் கினிய காவை வடமலேந்த்ரன்
மடத்துக்கு வேண்டுஞ் செந்நெல் வாரிக்குவிப்பார்
கணக்குஞ் சிறப்பமையக் கட்டியளப்பார்
கங்காணப் படிபண்ணைக் காரனார் முன்னே. கஙக

கஙக. சாலி - சாலிநெல். கட்டியளத்தல் - மரக்காலுக்கு மேலே நெல்லைக் குவித்துக் கைகளை வளைத்துப் பிடித்து அளத்தல். கங்காணம் - கண்காணம்; பயிர் செய்வதற்குரிய ஒப்பந்தம்.

நெற்கணக்கு

கலிப்பா

வளந்தருதென் மூக்கூடல் மாயவனார் பண்ணையிலே
அளந்தபொலி இத்தனையென் றுதாய முஞ்செலவும்
களந்தனிலே நின்றுபண்ணைக் காரனுடனே குடும்பன்
உளந்தடுமா றுதவகை உள்ளபடி சொன்னானே. கச0

சிந்து

அளக்கும் பொலிக்கணக்கைப் பண்ணை
யாண்டே சொல்லக்கேளும் - பள்ளர்
வளர்க்கும் பல பெருஞ் சோலியில் நெல்
மறவாதிருஞ் சொன்னேன். கசக

கசக. பொலிக்கணக்கு - தூற்றிச் சுத்தம் பண்ணின நெல்லின் கணக்கு. சோலி - வேலை மிகுதி.

ஆடித் திருநா ளுக்கு நெல்
ஆ[று]யிரங் கோட்டை - நெட்டைத்
தாடிப் பிச்சன் வகையில் நேருஞ்
சம்பாநெல் லளந்தேன். கசஉ

கசஉ. கோட்டை - வைக்கோற் புரியால் சுற்றி உள்ளே நெல்லைப் பொதிந்து கட்டிவைக்கப்படுவது; இருபத்தொரு மரக்கால் கொண்டது.

வருபங் குனித் திருநாட் படி
வகைக்காயிரங் கோட்டை - சின்னத்
திருவன் பயிரிடும் புள்ளியிற்
செந்தாழைநெல் லளந்தேன். கசங

கசங. படி - செலவுக்குரிய நெல். புள்ளி - நிலம்.
இப்பாடல்களால் முக்கூடலழகர் கோயிலில் ஆடிமாதத்திலும் பங்குனி மாதத்திலும் விழா நடந்ததாகத் தெரிகிறது.

சிற்றாற் றணைக் கல்லுக் கட்டச்
செலவாயிரங் கோட்டை - பண்ணைப்
பெற்றாக் குடும்பன் புள்ளியில் கண்ட
பெருவெள்ளைநெல் லளந்தேன். கசச

கசச. இந்நூல் செய்யப்பெற்ற காலத்தே சித்திரா நதியில் அணை கட்டப்பெற்றதென்று இதிலிருந்து தெரிகிறது.

மண்டகப் படிச் சாத்துக்கொரு
வகைக்காயிரங் கோட்டை - கட்டை
முண்டன் வகை தன்னிலே கண்ட
முத்துவெள்ளை நெல் லளந்தேன். கசரு

கசரு. மண்டகப்படி - கோயிலில் உற்சவ மூர்த்தியை மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணுவதற்காகச் செய்யும் செலவு.

நாவாணர்க்கும் மறை யோர்க்கும்
நாலாயிரங் கோட்டை - பச்சை
மூவான் முத விட்டமலை
முண்டன்நெல் லளந்தேன். கசசு

இதுவன்றியுந் தினப்பூசை நெல்
எண்ணாயிரங் கோட்டை - மொண்டிப்
பொதுவன் புதுத்திருத்திற் கண்ட
பூம்பாளைநெல் லளந்தேன். கசள

முற்றுங்கணக் கென்றுற் சொல்ல
முடியா தென்பதறிவீர் - சேரில்
மற்ற நெல்லும் விதையுங் கட்டி
வைத்தேன் பண்ணை யாண்டே. கசஅ

மூத்த பள்ளி முறையீடு

கலிப்பா

எல்லாக் கணக்குரைத்தும் என்பேரும் என்கணக்கும்
சொல்லாது விட்டபள்ளன் சூதையினிக் கேளுமென்றே
வில்லாளர் முக்கூடல் மிக்கபள்ளி தன்பொருமல்
நில்லாமல் பள்ளியர்முன் நிட்டூரஞ் சொன்னாளே. கசகூ

கசகூ. பொருமல் - அழுது விம்முதல். நிட்டூரம் கொடுமை.

சிந்து

முட்டிக்காற் பண்ணை யாண்டே
நடுக் கேளீரோ - ஆந்தை
முஞ்சிமுகப் பண்ணை யாண்டே
நடுக் கேளீரோ

மட்டிவாய்ப் பண்ணை யாண்டே
நடுக் கேளீரோ - கரு
மந்திமுகப் பண்ணை யாண்டே
நடுக் கேளீரோ
சட்டித்தலைப் பண்ணை யாண்டே
நடுக் கேளீரோ - தண்ணீர்ச்
சால்வயிற்றுப் பண்ணை யாண்டே
நடுக் கேளீரோ
கெட்டிகெட்டி பெண்டு ரெண்டு
வைத்த குடும்பன் - செய்த
கெருவமும் வஞ் சகமும்
கேளும் பள்ளீரே. கரு0

கரு0. நடு - நியாயத்தை. கெட்டி கெட்டி : க00-ம் பாட்டுப் பார்க்க. பெண்டு ரெண்டு - இரு மனைவியர். பண்ணையாண்டையை இவ்விதம் பரிகசிப்பதை முன்னும் காணலாம் (நிரு, நிச).

பள்ளனுக்குத் தென் மருதூர்ப்
பள்ளி யாசைதான் - இன்னும்
பற்றுவிட்ட தில்லைப் பாடு
பட்டும் அறியான்
பிள்ளையா ரடியும் உறை
நெல்லு மெடுத்தான் - அவள்
பெற்றநெல் லுடன் கலந்து
பெட்டியில் வைத்தான்
உள்ளபே றெனக்குத் தாக்
கையெழும் பாமல் - காலால்
உழுதுவா யாலதட்டி
உழப்பிப் போட்டான்

தள்ளுமண்ணுங் கல்லுஞ் சற்றே
நெல்லுங் கலந்தே — பங்கு
தந்தோமென் றெனக்கிம் மட்டுத்
தந்தான் பள்ளீரே. கருக

கருக. பாடுபட்டும் - துன்பமனுபவித்தும். பிள்ளையாரடி - பிள்ளையாரடியின்கீழ் உள்ள நெல். உழவர் களத்தில் நெல்லைத் தூற்றிக் குவித்துச் சுளகு முனையால் பொலியைத் தொட்டுக் கொண்டு பொலியை மும்முறை வலம்வந்து, சுளகு நிறைய நெல்லை அள்ளிப் பொலியின் ஒரு முனையிற் சுளகைப் பதித்து, அதில் சாணத்தால் பிள்ளையார் பிடித்துவைத்து அருச்சித்துப் பூசித்துப் பின் பொலியளத்தல் மரபு. அந்தச் சுளகு நெல்லைப் பிள்ளையாரடி என்பது வழக்கு. உறை நெல் - நெல் அளப்போர், குறிப்பிட்ட ஒரு அளவுக் கடையாளமாகத் தனியே எடுத்துவைக்கும் பிடி நெல். அவள் - இளையவள். பேறு - பங்கு. காலால் உழுதல் - காலால் தரையைக் கிளைத்தல். உழப்பி - வார்த்தையால் மழுப்பி. இம் மட்டு - இவ்வளவே ; மிகக் குறைவு என்பது கருத்து.

பள்ளியர் ஏசல்

சிந்து

இ: முண்டைமுறை யிட்ட தென்ன
முக்கூடற்பள்ளி - உங்கள்
மூப்புச் சொம் மெனக்குத் தந்தால்
மூதலியடி
தொண்டை கட்டக் கூப்பிடாதே
கூப்பிட்டென்னை - வைது
சொன்ன பேச்சைப் பண்ணையார்க்குச்
சொல்லுவேனடி. கருஉ

கருஉ. இது இளைய பள்ளி கூற்று. மூப்புச் சொம் - பழைமையாய் வரும் சொத்து. மூதலி - மெய்ப்பி.

மூ : சொன்னாலெனக் கென்ன பயம்
மருதூர்ப்பள்ளி - சென்று
சொல்வி லுன்கால் சலியாது
சொல்லடி போடி

இ : என்னாலேயா காதுண்டோ
முக்கூடற்பள்ளி - பள்ளன்
இங்குவந்தா லுன்சலுகை
யெல்லாந் தெரியும். கரு௩

கரு௩. இது முதல் ஏசல் இறுதி (களரு) வரை ஒவ்வொரு பாட்டிலும் முதல் பாதி மூத்த பள்ளி கூற்று, பிற்பாதி இளைய பள்ளி கூற்று. சலுகை - செல்வாக்கு.

மூ : சலுகையில் லாமலென்ன
மருதூர்ப்பள்ளி - நானும்
தன்னூர்விட் டுனைப்போல் ஒட்டுச்
சார்பில் வந்தேனோ

இ : வலுச் சலுகை பேசாதே நீ
முக்கூடற்பள்ளி - உன்போல்
வழக்கிட்டுக் கணக்கிட்டு
வந்தேனோ போடி. கரு௪

கரு௪. ஒட்டுச் சார்பில் - பிறருடைய ஆதரவில்.

மூ : வழக்கிட்டு நான் வந்தேனோ
மருதூர்ப்பள்ளி - பள்ளன்
மாமன்மக ளென்றேஎன்னை
மறித்துக் கொண்டான்

இ : உழக்கிற் கிழக்கு மேற்கோ
முக்கூடற்பள்ளி - மறித்து
உன்னைக் கொண்டான் என்னைக்கண்டென்
னூரிலே வந்தான். கரு௫

கருரு. உன்னைக் கொண்டான் - உன்னை மணஞ் செய்து கொண்டான்.

மூ : அங்கே யவன் வந்தா லென்ன
மருதூர்ப்பள்ளி - ஊரார்
ஆமக்களைத் தொடர்ந் துனைப்போல்
ஆடி வந்தாள்

இ : எங்கேவந் தாலு மென்ன
முக்கூடற் பள்ளி - வீட்டில்
எய்திற் காட்டுப் பூனை நாவிக்
கிணையாமோடி. கருசு

கருசு. ஊரார் ஆமக்கள் - பிறர் கணவர்; ஆமக்கள் - ஆண் மக்கள்; என் கணவன் என்பது பொருள். நாவி - புனுகுப் பூனை. பா - ம். நாவிக் கேழையாய்ப்போமோ.

மூ : நாவி யென்றாய் பூனை யென்றாய்
மருதூர்ப்பள்ளி - அந்த
நாவி நானடி பூனை மூளி
நாயும் நீயடி

இ : வீவி யாட்டம் ஆட வேண்டாம்
முக்கூடற்பள்ளி - பேச்சில்
மிஞ்சிப் பேசில் நெஞ்சறுப்பேன்
அஞ்சிப் பேசடி. கருஎ

கருஎ. வீவி - அலங்காரம் கொண்டவள், ஆடம்பரக்காரி; வீவி - பீபி (?).

மூ : அஞ்சச் சொன்ன தென்னை யென்ன
மருதூர்ப்பள்ளி - உனக்
காசைப் பட்ட குடும்பனை
அஞ்சச் சொல்லடி

இ : கொஞ்சக் காரிக் கஞ்சு வேணோ
முக்கூடற்பள்ளி - இன்னும்
குட்டையிற்போ டுனக்கவன்
கும்பிட் டஞ்சுவான். கருஅ

கருஅ. கொஞ்சக்காரி - அற்பத்தன முடையவள். பா - ம். மிஞ்சிப்பேசில் மூப்புப்பாரேன்.

மூ : குட்டைதனில் போட்டதற்கோ
மருதூர்ப்பள்ளி - அந்தக்
குடும்பனைப் பிணைப்பட்டுக்
கொண்டு மீட்டாய்

இ : சட்டை பண்ணு தேசிக் காட்டு
முக்கூடற்பள்ளி - குட்டை
சாத்துவாய் கழற்றுவாய் உன்
தந்திரமடி. கருகூ

கருகூ. சட்டை பண்ணுது - இலட்சியம் பண்ணமல்.

மூ : மந்திரமுந் தந்திரமும்
மருதூர்ப்பள்ளி - உன்போல்
வசம்வந்தால் பள்ளனுமென்
வசமா கானோ

இ : சந்தையில் மாங் கொட்டை போடி
முக்கூடற்பள்ளி - நீயும்
சாரங் கெட்ட மருந்தென்றோ
சாதிக்க வாராய். கசா0

கசா0. சந்தையில் மாங்கொட்டை : இத்துணை அற்பமானவள் என்பது பொருள். 'சந்தையின் மாங்கொட்டாய் சரசம்போல்' - விறலிவிடுதூது எருஉ. பா - ம். சந்தையில் மானங் கெட்டாய்.

மூ : சாதிப்ப தனக்குவரும்
மருதூர்ப்பள்ளி - நரி
தான்பரியாய்ச் சாதித்தானும்
சம்பு வல்லோடி

இ : பேதிக்கச்சா திக்கவல்லாய்
முக்கூடற்பள்ளி - கல்லைப்
பெண்ணாகச் சாதித்தான் உங்கள்
பெம்மா னல்லோடி. கசுக

கசுக. சிவபெருமான் மாணிக்கவாசகருக்காக மதுரையில் நரிகளைப் பரிகளாக்கியதும், இராமன் கல்லாயிருந்த அகலிகையைப் பெண்ணாக்கியதும்.

மூ : மங்கையொரு பங்கிருக்க
யோகி யென்றுதான் - கையில்
மழுவேந்தி நின்று னுங்கள்
மத்த னல்லோடி

இ : கொங்கைதனில் ஆய்ச்சியரைச்
சங்கை யில்லாமல் - பண்டு
கூடி நெய்யில் கையிட்டா னும்
கொண்ட லல்லோடி. கசுஉ

கசுஉ. சங்கை - வெட்கம்.

மூ : காமனை மருகனென்
றெண்ணிப் பாராமல் - காய்ந்து
கண்ணிலேறு பட்டா னுங்கள்
கர்த்த னல்லோடி

இ : மாமனென்று பாராமல்முன்
கஞ்சனைக் கொன்றே - கண்கள்

மாறுதேயூப் பட்டா னுங்கள்
மாய னல்லோடி. கசுரு.

கசுரு. மருகன்: திருமாலின் மகன் என்ற முறைபற்றி. கண்ணிலேறு பட்டான் - கண்ணால் எறிபட்டான்.

மூ: மாதொருத்திக் காசைப்பட்டுப்
பொன்னின் மயமாம் - பனி
மலையேறிப் போனா னுங்கள்
மத்த னல்லோடி

இ: காதலித்துத் தம்பியுடன்
சீதை பொருட்டால் - அன்று
கடலேறிப் போனா னுங்கள்
கண்ண னல்லோடி. கசுசு

கசுசு. மாதொருத்தி - உமாதேவி. பனிமலை - இமயமலை. கடலேறிப்போனான் - சீதையை மீட்பதற்காக இராமன் கடல் கடந்து இலங்கை சென்ற வரலாறு. "சீதை தன்னை வாளரக்கன் கொண்டேகவே - கடலில், சென்றிலங்கை கொண்டானுங்கள் விண்டுவல்லோடி" என்பது ஓர் ஏட்டிற் கண்ட வேறு பாடம்.

மூ: தான்பசுப்போல் நின்று கன்றைத்
தேர்க்காலில் விட்டுச் - சோழன்
தன்மகனைக் கொன்றா னுங்கள்
தாணு வல்லோடி

இ: வான்பழிக்குள் ளாய்த்தவசி
போல மறைந்தே - நின்று
வாலியைக் கொன்றா னுங்கள்
மாய னல்லோடி. கசுஎ

கசுஎ. சிவபெருமான் பசுவாகவும் இயமன் கன்றாகவும் வந்த போது, மனுநீதிச் சோழன் மைந்தனாகிய வீதிவிடங்கன் கன்றின்

மேல் தன் தேரைச் செலுத்திய பாதகம் நீங்க அச்சோழன் தன் மகனைத் தேர்க்காலிலிட்டான் என்பது புராணகதை: • 'ஈசன் பசு வாகி யமனொரு கன்றாகி, வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தா ரம்மானை' என்பது பழம்பாடல். சுக்கிரீவனுடன் நட்புப் பூண்ட இராமபிரான், சுக்கிரீவனும் வாலியும் போர் புரிந்தகாலை, தான் மறைந்துநின்று அம்பினால் வாலியை வீழ்த்தினான் என்பது இராமாயணக் கதை.

மு: வலிய வழக்குப் பேசிச்
சுந்தரன் வாயால் - அன்று
வையக் கேட்டு நின்றா னுங்கள்
ஐய னல்லோடி

இ: புலிபோல் எழுந்து சிசு
பாலன் வையவே - ஏழைப்
பூனை போல நின்றான் உங்கள்
நீல னல்லோடி. கசுசு

கசுசு. சிவபெருமான் ஆலாலசுந்தரரைப் பூவுலகில் தடுத்தாட் கொள்வதாக வாக்குக் கொடுத்திருந்ததற் கிணங்க, சுந்தர மூர்த்தி திருமணத்தின்போது தானே வலிய வந்து வழக்கிட்டு, சுந்தரர் வெகுண்டுரைத்த சொற்களைப் பொறுத்து நின்றாரென்பது **பெரிய புராணக் கதை.** சிசுபாலனிடத்துத் தொண்ணூற்றொன்பது பிழைகள் வரையில் பொறுப்பதாகக் கண்ணபிரான் அவன் தாய்க்கு வாக்குக் கொடுத்திருந்தமையால், சிசுபாலன் வைததைப் பொறுத்து வந்தானென்பது பாகவதக் கதை. நெடுநீலன் - நீலவண்ணனாகிய நெடுமால்.

மு: அடியனும் நாயனுமாய்க்
கோவில் புறகே - தொண்டன்
அன்று தள்ளப் போனா னுங்கள்
ஆதி யல்லோடி

இ : முடியுஞ் சூடாமலே கை
கேசி தள்ளவே - காட்டில்
முன்பு தள்ளிப் போனா னுங்கள்
மூர்த்தி யல்லோடி. ௧௬௭

௧௬௭. திருவாரூரிலே சிவபெருமானைத் தொழவந்த சுந்தர மூர்த்தி நாயனார் தேவாசிரிய மண்டபத்தே யிருந்த சிவனடியாரை வணங்காது நேரே இறைவனைத் தொழச் செல்லுவதைக் கண்ட விறன்மிண்ட நாயனார் 'வன்றொண்டன் புறகு' என்றும், 'அவருக் குப் பிரானாகிய இறைவனும் புறகு' என்றும் உரைத்தார் என்பது பெரிய புராணத்துட் கூறப்படும் வரலாறு. அடியன் - சுந்தரர்; நாயன் - நாயகன், சிவபெருமான்; தொண்டன் - விறன்மிண்டர். தள்ளி - வெகுதூரத்தில். மூர்த்தி - இராமபிரான்.

மூ : சுற்றிக் கட்ட நாலு முழத்
துண்டு மில்லாமல் - புலித்
தோலை யுடுத்தா னுங்கள்
சோதி யல்லோடி

இ : கற்றைச் சடை கட்டிமர
வுரியுஞ் சேலைதான் - பண்டு
கட்டிக் கொண்டா னுங்கள் சங்குக்
கைய னல்லோடி. ௧௬௮

௧௬௮. தாருகாவனத்து இருடிகள் அபிசார யாகஞ் செய்து அதில் தோன்றிய புலியைச் சிவபெருமான்மீது ஏவ, அவர் அதைக் கொன்று அதன் தோலை யுடுத்திக்கொண்டார் என்பது சிவபுராணக் கதை. இராமபிரான் சீதையும் இலக்குவனும் பின் தொடரக் காட் டுக்குச் சென்றபோது மரவுரி தரித்துச் சென்றார். சங்குக் கையன் - திருமால்.

மூ : நாட்டுக்குள் இரந்தும் பசிக்
காற்ற மாட்டாமல் - வாரி

நஞ்சை யெல்லாம் உண்டா னுங்கள்
நாத னல்லோடி

இ : மாட்டுப்பிற கேதிரிந்துஞ்
சோற்றுக் கில்லாமல் - வெறும்
மண்ணை யுண்டா னுங்கள் முகில்
வண்ண னல்லோடி. கசுசு

கசுகூ. வாரி நஞ்சு - கடலில் தோன்றிய நஞ்சு; ஆலகாலவிடம். மாட்டுப்பிறகே திரிந்தமை கண்ணன் கோவலரிடையே வளர்ந்தமையால்; மண்ணையுண்டது யசோதைக்குத் தன் கடவுள் தன்மையைக் காட்ட வேண்டி.

மூ : ஏற ஒரு வாகனமும்
இல்லாமையினால் - மாட்டில்
ஏறியே திரிந்தா னுங்கள்
ஈச னல்லோடி

இ : வீறு சொன்ன தென்ன மாடு
தானு மில்லாமல் - பட்சி
மீதி லேறிக் கொண்டா னுங்கள்
கீத னல்லோடி. கஎ0

கஎ0- பட்சி - கருடன். கீதன் - கீதமிசைப்பவன், வேணுகோபாலன். பா - ம். நாதனல்லோடி, சீதரனடி.

மூ : பெருமாள் அடியானுக்குப்
பெண்டிருந்துமே - எங்கள்
பெருமாளை நீ பழித்துப்
பேசலாமோடி

இ : திருமால் அடிமை யென்றாய்
சாலப் பசித்தால் - ஆருந்

இன்னாத துண்டோ சினத்தால்
சொல்லாத துண்டோ. கஎக

கஎக. பெருமாள் அடியானுக்குப் பெண்டிருந்தும் - அழகர் அடியவனான பள்ளனுக்கு நீ மனையாளா யிருந்து கொண்டு.

மூ : திராண்மைநன் றாகச் சொன்னாய்
மருதூர்ப்பள்ளி - போபோ
சினத்தாலுஞ் சீரழியச்
செப்புவார்களோ

இ : வாராதோ எனக்குக் கோபம்
முக்கூடற்பள்ளி - மூந்த
வைதவரை வாழ்த்தினவர்
வையகத் துண்டோ. கஎஉ

கஎஉ. திராண்மை - வன்மத்தாற் சொல்லுங் கோள். சீரழிய - பெருமை குன்ற. 'வைதாரை வாழ்த்தின பேருமுண்டோடா'— **சாத்தூர் நொண்டி நாடகம்** அ௪.

மூ : மூந்த வைதால் வைவே னென்றாய்
மருதூர்ப்பள்ளி - சற்றே
மூப்பிளமை பார்த்துத் தலை
சாய்ப்பா ரில்லையோ

இ : இந்த வார்த்தை மூந்தச் சொன்னால்
முக்கூடற்பள்ளி - சண்டை
இத்தனை யுண்டோ எனக்குப்
புத்தி யில்லையோ. கஎ௩

கஎ௩. மூப்பிளமை பார்த்துத் தலைசாய்ப்பார் : இருவருடை வாக்குவாதம் நேர்ந்தவழி அவருள் பெரியோர் மாட்டுச் சிறியோர் தலை வணங்கி நிற்பர் என்று உலகியல் கூறியபடி.

பள்ளியர் சமாதான மாதல்

சொன்னு லென்ன நீயும் பொறு
நானும் பொறுத்தேன் - கிளை
சூழ்ந்திருக்க நாமே கூடி
வாழ்ந்திருக்கலாம்
பன்னகத்தி லாடிய முக்
கூட லழகர் - திருப்
பாத மலர் வாழ்த்தி யாடிப்
பாடுவோமே. ௧௪௪.

௧௪௪. இதன் முதலடி மூத்தபள்ளி கூற்று, பின்னடி இளையவள் கூற்று. பன்னகத்தில் ஆடிய - காளிங்கன் என்னும் பாம்பின்மேல் நர்த்தனமாடிய.

வாழ்த்து

கலிப்பா

வீழியிதழ்ச் செங்கமலம் மேவும்அனை வாழிநெடுஞ்
சூழிமுக வேழமன்று சொன்னதிருப் பேர்வாழி
ஆழியரு ளாளர் அழகர்திருத் தாள்வாழி
வாழிதிரு முக்கூடல் வைணவர்கள் வாழியவே. ௧௪௫

௧௪௫. வீழி யிதழ் - வீழிக்கனி போன்று சிவந்த இதழ். அனை - அன்னை, இலக்குமி. சூழிமுக வேழம் - முகபடா மணிந்த நெற்றியுடைய யானை ; கஜேந்திரன். அன்று சொன்ன திருப்பேர் - முதலையால் துன்புற்ற காலத்து அழைத்த ஆதிமூலமே என்ற திருநாமம்.

அனுபந்தம் - க

பிற பள்ளுப் பிரபந்தங்கள்

முக்கூடற்பள்ளு தோன்றியபின் தமிழிலே எத்தனையோ பள்ளுப் பிரபந்தங்கள் எழுந்திருக்கின்றன. இவற்றுள் ஒரு சிலவே அச்சிடப் பெற்றுள்ளன. அச்சிடப் பெற்றவை, பெறாதவை ஆகிய பள்ளுப் பிரபந்தங்களுள் தெரிந்தவற்றைக் கீழே காணலாம். உடுக்குறியிடப்பெற்றவை, அச்சில் வெளி வராதவை. இங்கே குறிப்பிடப் பெற்றுள்ளன போக, வேறு பலவும் இருத்தல் கூடும். இயன்ற வரையில் நிர்ணயிக்கக் கூடிய காலக்கிரமப்படி இவை கீழே அமைக்கப்பெற்றுள்ளன.

1. ஞானப்பள்ளு*

சிதம்பரநாத ஞானப்பிரகாசர் என்பவர் தத்துவார்த்த முடையதாகச் செய்தாரென்று சொல்வதுண்டு. (சிவானந்த போதசார வுரை, முகவுரை) இந்நூல் இன்று கிடைப்பதா யில்லை. இதுவே ஆதிப்பள்ளென்பார்கள்.

2. திருவாரூர்ப் பள்ளு (தியாகேசர் பள்ளு)

கமலை ஞானப்பிரகாசர் செய்ததெனச் சொல்லப்பெறும். இது கோயிலிற் பாடப்பெற்றுவந்தது. இடைச் செருகல்கள் பல இதிலுள்ளன. பிற பள்ளுகள் எல்லாவற்றினும் காலத்தால் இது முந்தியதாயினும், முக்கூடற்பள்ளுப் போலன்றி இதில் பல செய்யுள் வகைகள் - வெண்பா, கலித்துறை, விருத்தம் முதலியன — அமைக்கப் பெற்றிருக்கின்றன. திருவாரூர்ப் பெருமான் புகழைக் கூறும் பல தனிப் பாடல்களான வெண் பாக்கள், கதைத் தொடர்புக்குச் சம்பந்தமின்றியே, இதனுள் அதிகமாகப் பெய்யப்பெற்றுள்ளன. தெய்வநிலை போற்றுதல் முதலிய உறுப்புக்களும் கவிகூற்றாயுள்ள பாகங்களும் ஆசிரிய ரின் கல்விப் பெருக்கையும் புலமை மிகுதியையும் காட்டுவன; ஆனால் பள்ளுக்கே உயிர் நாடியான இயற்கையையும் எளி மையையும் ஒதுக்கிவிட்டன. பண்ணையானுடைய அங்க விகாரங்களை வேடிக்கையாகக் கூறிக் கும்பிடுவதென்னும்

உறுப்பும் இதில் காணப்படுகிறது. கமலை ஞானப்பிரகாசர் காலம் 16ஆம் நூற்றாண்டு. இது அவர் செய்ததுதானா என்பது ஆராய்தற்குரியது. மேற்காட்டிய காரணங்களால், முக்கூடற் பள்ளின் பிறகே இது செய்யப் பட்டதென்றும், அதனினும் மிகுதியாக இதில் இலக்கியச் சுவையைக் காட்ட ஆசிரியர் கருதினாரென்றும் நினைக்க இடமிருக்கிறது.

3. குருகூர்ப்பள்ளு (பராங்குசப் பள்ளு)

நம்மாழ்வார்மீது ஆழ்வார் திருநகரி சடகோபப் புலவர் பாடியது. பள்ளுப் பிரபந்தங்களின் வரிசையிலேயே, முக்கூடற் பள்ளும் இந்நூலும் மாறுபட்ட இரண்டு சிறந்த தனி நிலைகளை யுடையன என்று கூறலாம். முந்திய நூலின் ஆசிரியர் ஏழை மக்களான உழவர் உழத்தியர்தம் எளிய வாழ்க்கையில் ஈடு பட்டு, அதிலுள்ள அழகை அனுபவித்து, அவ்வாழ்க்கையை அந்த மக்களுடைய பாஷையிலேயே விளக்கிக் காட்டவேண்டு மென்ற உணர்ச்சியுடன் தம் நூலைச் செய்தார்; அதன்பின் அவ்வகை நூல்கள் சில தோன்றவும், அவை சாமானியம் என்று கருதிய சடகோபப் புலவர், அத்தகைய பிரபந்த மொன்றிலே சிறந்த இலக்கியப் பண்பையும் கவிச்சுவையையும் ஏற்ற வெண்ணிக் குருகூர்ப் பள்ளைச் செய்தார் என்று அனு மானிக்கலாம்; இந்நூலிலுள்ள அகத்துறைப் பாட்டுக்களைக் காணும்போது இவ்வாறு எண்ணத் தோன்றுகிறது. நூலமைப்பில் இது திருவாரூர்ப் பள்ளைப் போன்றது; அதனினும் சுவை மிக்கது. ஆற்று வெள்ளத்தில் அணை யடைப்பு, இளையபள்ளி பள்ளனுக்கிட்ட மருந்தைச் செய்யும் முறை, அதன் இயல்பு, தாலாட்டு என்பன இதிற் கண்ட விசேட உறுப்புக்கள். திருவாரூர்ப் பள்ளுப் போலவே இதிலும், பள்ளன் கொழுக்குத்தி மயங்கி விழுகிறான். சண்டை யிடும் பள்ளியரைப் பண்ணையான் சமாதானம் செய்துவைக் கிறான். இந்நூலின் காலம் உத்தேசம் 1700.

4. சிவசயிலப் பள்ளு

அன்பூர்ச் சிவசயிலநாதர்மீது ஆழ்வார்குறிச்சி இராம நாதன் கவிராயர் செய்தது. ஆறை அழகப்ப முதலியார்

செயல்களைச் சிறப்பித்துக் கூறுகிறது. அவர் காலத்திலேயே செய்யப்பெற்றதென நூலகத்துள்ள குறிப்புக்களால் புலப்படுகிறது. கலிப்பா, சிந்து என்னுமிருவகைச் செய்யுட்களால் மட்டுமே இயன்றது. பொருள் அமைதியும், உறுப்புக்கள் அமைந்துள்ள கிரமமும், செய்யுட்களின் சந்தமும், நேரே முக்கூடற் பள்ளை அடியொற்றியவை. அதிலிருந்து சொற்களும் தொடர்களும் அப்படியே இதில் எடுத்தமைக்கப்பட்டுள்ளன. மழை வேண்டிப் பாடும் ‘ மழை தருவாய் ’ என்ற பாட்டு இதில் புதியதாயுள்ள உறுப்பு. சில பாடல்கள் பிரதிகளில் கிடைக்கவில்லையெனத் தெரிகிறது. காலம் 1720.

5. வைசியப் பள்ளு*

கச்சி ஏகாம்பரநாதரையும் வைசிய குலத்தோர் ஆயிரவரையும், சிறப்பாக, ஏகாம்பரர் கோயிலைப் பொன் வேய்ந்த பொன்வேய்ந்தானென்பவனையும் புகழ்வது. சங்கரமூர்த்திப் புலவர் பாடியது. கம்பமாநதியில் வெள்ளம் பெருகிவர, அதில் வைசியர் தங்கள் சரக்குக்கள், ஆடை, பொற்பணி முதலியவற்றைப் பல தேசங்களிலுமிருந்து கப்பலிலேற்றிக் கொண்டு வந்து கரை சேர்க்கிறார்கள் என்ற பகுதி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுவைமிக்க நூல்.

6. வடகரைப் பள்ளு

1731 - 41 ஆண்டுகளில் வடகரை ஜமீன்தாராயிருந்த பெரியசாமித்துரை பேரில் கடிகைமுத்துப் புலவர் பாடியது; ஆற்று வெள்ளத்தில் கப்பல் விடுவதாகச் சில பாடல்களும் கும்மிப்பாட்டும் இதிலுள்ளன. வைசியப் பள்ளில், வைசியர் பொருளீட்டிக் கப்பலிலேற்றிக்கொண்டு வரும்போது கப்பலோட்டினர் என்றுள்ள செய்தியை ஒப்பவே, இந்நூலிலும் ஆற்று வெள்ளத்தே கப்பல் விடும் செய்தி அமைக்கப்பட்டுள்ளது. துரை ஜமீன் பட்டத்துக்கு வருமுன்பே, 1723 இல் நூல் அரங்கேற்றப்பட்டது.

7. திருமலை முருகன் பள்ளு[1]

திருக்குற்றாலத்துக்கருகேயுள்ள திருமலை முருகன் மீது பெரியவன் கவிராயர் செய்தது. நூலகத்துப் பல பாடல்கள் முருகன் துதியாக அமைந்திருக்கின்றன. இதிலும் பலவகைப் பாக்கள் விரவி வருகின்றன. செய்யுட்கள் பல இடங்களில் எளிமையாகவும் நயமாகவும் உள்ளன. கடவுள் வணக்கங் கூறும்போது, பிள்ளைத் தமிழ் மரபையொட்டி, இதன் ஆசிரியர் திருமால், பிரமன், சரசுவதி, இலக்குமி, காளி, வீரபத்திரன், சத்தகன்னியர், துவாதசாதித்தர், வருணன், சாத்தன், இந்திரன் என்போருக்கு வணக்கங் கூறியிருக்கிறார். இதன் காலம் கி. பி. 1730.

8. சீகாழிப் பள்ளு*

சீகாழிச் சிதம்பரநாத முனிவர் தொடங்கி அருணாசலக் கவிராயர் பூர்த்திசெய்த நூல்; சீகாழித் தல விஷயமானது; காலம் 1745. இந்நூலில் ஐந்து பாடல்களே இன்று கிடைக்கின்றன. இவற்றை இரண்டாம் அனுபந்தத்தில் காணலாம்.

9. செண்பகராமன் பள்ளு

நாஞ்சில் நாட்டிலுள்ள கோவைக்குளம் என்ற ஊரின் தலைவனாயிருந்த செண்பகராமக் காலிங்கராயன் என்ற வள்ளல்மீது பாடப்பெற்றது. ஆசிரியர் பெயர் புலப்படவில்லை. நூலிறுதியிலுள்ள சில பாடல்கள் கிடைக்கவில்லை.

10. தில்லைப் பள்ளு*

தில்லைத் தல விஷயமாக, சிறந்த புலவரான தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை இயற்றியது. 'அம்பலப்பள்ளிக்கும் கோவிந்தப்பள்ளிக்கும் ஏசல்' என்றும் இது வழங்கப்பெறும். காலம் 1760.

11. வையாபுரிப் பள்ளு (பழனிப் பள்ளு)

பழனியில் கோயில் கொண்டுள்ள முருகப்பிரான்மீது, பழனிச்சமீன் இம்முடிப் பட்டத்திலிருந்த குமார விசயகிரி

---

[1] இந்நூல், முன்னுரை, குறிப்புரை முதலியவற்றுடன் என்னால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

வேலச் சின்னேவையன் என்பவர் பாடியது. உசகூ செய்யுட்களுடையது. காலம் கி. பி. 1770. இதன் பாடல்கள் இரண்டு முக்கூடற்பள்ளு நாடகத்தில் காணப்படுகின்றன.

12. **கண்ணுடையம்மை பள்ளு**

நாட்டரசன் கோட்டையிலிருக்கும் கண்ணுடையம்மையையும் நகரத்தாரையும் சிறப்பித்து, முத்துக்குட்டிப் புலவர் இயற்றியது. நாடு, நகர், தீர்த்தம், ஊர் என்பவற்றின் விசேடம் விரித்துரைக்கப்பட்டது. இவ்வூரைச் சார்ந்த நாட்டிலே நீர்வளம் குறைவாதலால், குளம் வெட்டுதல் என்ற செய்தி சேர்க்கப்பட்டிருக்கிறது. குளம் வெட்டி மழை பெய்யாது போகவே, புது வீடு கட்டி யலங்கரித்து விதை நெற்கோட்டையை நனைத்து ஊறவைத்து முளைத்த நெல்லை அவித்து, அதிலிருந்து மதுவடித்து அம்மைக்குப் படைத்து, மங்கையர் கும்மியடித்து விழாச் செய்கிறார்கள். மழை பெய்கிறது, அவித்த நெல்லும் முளைக்கிறது. நகரத்தார் வரலாறும் பழக்க வழக்கங்களும் விளக்கப்பட்டுள்ளன. பள்ளனை மாடு முட்டும் பகுதி கூறப்படவில்லை. காலம் 1775. முளைப் பாட்டு என்ற பகுதி இதில் சிறப்பானது, புதியது.

13. **திருப்புனவாயிற் பள்ளு***

இரண்டாம் சர்க்கரைப் புலவர் செய்தது. காலம் 1780. நூல் கிடைக்கவில்லை.

14. **கதிரைமலைப் பள்ளு**

இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகவேள்மீது செய்யப்பெற்றது. ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. விநாயகர் பெருமையும் முருகன் பெருமையும் நாட்டுவளமும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. மழை பெய்ய வருணன் வரங்கொடுத்தான் என்பது புதிய செய்தி; பள்ளன் மூத்த பள்ளியைக் குறை கூறுகிறான்; இறுதியில் பண்ணைக்காரன் சமாதானஞ் செய்கிறான். யாழ்ப்பாணத்துப் பள்ளுகளில் முந்தியதென இது கூறப்படுகிறது.

15. ஞானப் பள்ளு

கத்தோலிக்க சமயத்தைப் புகழ்ந்து ஏசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது; கதிரைமலைப் பள்ளு சைவரால் பாராட்டப்படுதல் காரணமாக, கிறிஸ்தவ மார்க்கம் பற்றி இது, பறங்கியர் இலங்கையை அரசாண்ட காலத்தில் எழுந்ததாகத் தெரிகிறது. (கதிரை. முகவுரை.)

16. பருளை விநாயகர் பள்ளு

யாழ்ப்பாணத்திலுள்ள பருளை யென்னுந் தலத்து விநாயக மூர்த்திமீது யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் செய்தது. நாட்டுவளம், குடித்தரம் முதலிய பகுதிகள் விரிக்கப்பட்டன; வெண்பா முதலிய பாக்கள் விரவியது. சில பகுதிகள் சிதைந்து போயின. காலம் 1780.

17. தண்டிகைக் கனகராயன் பள்ளு

யாழ்ப்பாணத்துத் தண்டிகைக் கனகராய முதலியார்மீது மாவைச் சின்னக்குட்டிப் புலவர் பாடியது. குயிற்பாட்டு விரித்துக் கூறப்பட்டுள்ளது. இடையிற் சில பாடல்களும் ஏசற்பகுதியும் சிதைந்துபோயின. காலம் 1790.

18. குற்றாலப் பள்ளு*

இந்நூலிலிருந்து மூன்று பாடல்களே இன்று கிடைக்கின்றன. இவற்றை இரண்டாம் அனுபந்தத்திற் காணலாம். நூலைக் குறித்து வேறு யாதும் தெரியவில்லை.

19. திருச்செந்திற் பள்ளு*

(செண்பகராமன் பள்ளு முகவுரை.)

20. போரூர்ப் பள்ளு*

கொங்குநாட்டுப் போரூர்க் காங்கேயர்மீது பாடப்பெற்றதென்று கோங்கு மண்டல சதக வுரையால் (அஅ) தெரிகிறது.

'மன்னன் ஆகவ ராமன் வடகொங்கு
மன்னி யேதினம் வாழ்ந்திடு நாடு,

தென்ன வன்தரும் எழுபது தண்டிகை
சேரும் பூந்துறை நாடெங்கள் நாடே '

என்பது அவ்வுரையிற் கண்ட மேற்கோள்.

21. **இருப்புலிப் பள்ளு***

கொங்கு நாட்டுப் பருத்திப்பள்ளி முதலிக் காமிண்டர் ஒருவர்மீது பாடப்பெற்றதென்று மேற்படிச் சதக உரையால் (எச) தெரிகிறது.

வெற்றியுடனே கிருஷ்ண ராயரி டத்தில்வர
மேன்மைப் பட்டா பிஷேக முடிசூட்டி,
முத்தின் சிவிகையில் வைத்துவலஞ் செய்துதான்
முதலிக்கா மிண்டனென்னும் விருதுங் கொடுத்து
நத்தூர் பருத்திப் பள்ளி நாடும் பூந்துறை நாடு
நாலாறு நாடுதானும் மேன்மையாப் பெற்றான்

என்பது அவ்வுரையிற் கண்ட மேற்கோள்.

22. **சேற்றூர்ப் பள்ளு**

சேற்றூர் ஜமீன்தார்மீது கார்காத்த மரபினரான இராஜ பாளையம் சங்கரமூர்த்திக் கவிராயர் செய்தது. காலம் 1800.

23. **கங்க நாயகர் பள்ளு***

கொங்கு நாட்டுச் சிஞ்சுவாடிச் சமீன்தாரொருவரிடம் மந்திரியாயிருந்த கோமங்கலம் கங்க நாயகர் என்பார்மீது பாடப்பெற்றது.

24. **திருவிடைமருதூர்ப் பள்ளு***

பிரான்மலை வெற்றிமங்கைபாகக் கவிராயர் பாடியது. காலம் 1820.

25. **மாந்தைப் பள்ளு**

சிதம்பர தாண்டவ மதுரகவிராயர் செய்தது. விசுவகர்ம மரபினரைச் சிறப்பிக்க வந்த நூல்.

26, 27. **கூடற் பள்ளு*, தஞ்சைப் பள்ளு***

இவற்றைக் குறித்து யாதும் தெரியவில்லை.

28. கொடுமளூர்ப் பள்ளு*

முருகவேள் பேரில் முதுகுளத்தூர் நல்லவீரப்பப் பிள்ளை பாடியது. காலம் 1840.

29. இராசநகர்ப் பள்ளு*

கந்தபுராணக் கீர்த்தனை முதலிய பல இசை நூல்கள் செய்த கவிகுஞ்சர பாரதியார் இயற்றியது. காலம் 1850.

30. தென்காசைப் பள்ளு

போடிநாயக்கனூர்ச் சமீன்தாராயிருந்த ராஜபாண்டிய நாயக்கர்மீது புளியங்குடி இராமநாத கவிராயர் பாடியது. (தென்காசை - போடி.) உத்தேச காலம் 1865. அச்சானது 1888 மே மாதம்.

31. கோட்டூர்ப் பள்ளு

செட்டி நாட்டுக் கோட்டூர் நயினார் என்ற சிவபிரான்மீது வெள்ளையப் புலவர் பாடியது. காலம் 1865.

32. பொய்கைப் பள்ளு

பொய்கை என்ற ஊரிலிருந்த சந்திரகிரிச் சொக்கலிங்கப் பெத்தண்ணல் என்ற வள்ளல்மீது பாடப்பெற்றது. உத்தேசம் 1875.

33. புதுவைப் பள்ளு

ஸ்ரீ வில்லிபுத்தூருக் கருகிலுள்ள புதுவை பொன்னுச் செட்டியாரென்பவர் செய்தது. புதுவை என்றும் சீவில்லிபுத்தூர் என்றும் சொல்லப்பெறும் மடவார் வளாகத்தைப் புகழ்வது. இதில் ஒரே ஒரு பாட்டு மட்டுமே கிடைத்தது.

இப்பாட்டு, அவ்வூரிலிருந்த சிவன் கோயிலை வைணவர்கள் விஷ்ணு கோயிலாக்கிவிட்டார்கள் என்ற வரலாற்றைக் கூறுகிறது.

இளைய பள்ளி வரவு

வடவா லீசுரர் ஆலயந்தன்னை
வடபத்ர சயனர் ஆக்கியும்
படமா லரவம் பள்ளிகொண் டியங்கப்
பணியு மேற்றட லணியுமாய்த்

திடமார் நிலையம் கதவ மாற்றித்
திருந்தக் கல்வரி ஏற்றியே
திகழும் பொருளும் நிலனும் வளனும்
சேர்ந்த வாகனப் பணிதியும்
முடமார் மன்னர் ஆண்டாட் காக்கி
முழுதும் மறைத்த வைணவ
ரிடமே ஆலயம் நன்செய் நிலத்துடன்
இசைந்த பள்ளன் வழிவழி
குடமார் நிறைந்த தன்த்துடன் பெற்றுக்
குயிலும் நாணும் மொழியினள்
இடமார் புதுவைப் பண்ணைப் பள்ளனுக்
கிளைய குடியுந் தோன்றினள்.

34. பழனிப்பட்டிச் செட்டிப் பள்ளு*

மதுரை ஜில்லாவிலுள்ள தேனீ, வீரபாண்டி என்ற இடங்களுக்கருகிலுள்ள பழனிப்பட்டியில் கொஞ்ச காலத்துக்குமுன் இருந்த ஒரு செட்டிமீது பாடப்பெற்றது. காலம் 1875.

35. முக்கூட்டுப் பள்ளு*

கொங்குநாட்டைச் சேர்ந்த பழனிசாமிப் பிள்ளை என்னும் புலவர் பாடியது.

கடைசி இரண்டு பள்ளுகளும் 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியனவாகத் தெரிகின்றன.

36. ஞானசித்தர் பள்ளு

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் புகழோடு விளங்கிய குருகூர் ஞானசித்த சுவாமிமீது வண்ணார்பேட்டை வேலாயுதச் சாமி என்பவர் பாடியது. காலம் 1900.

37. **திருக்கோட்டியூர்ப் பள்ளு** - அநுபந்தம் ௩.

38. **மன்னார்மோகனப் பள்ளு** - அநுபந்தம் ௪.

39. **திருநீலகண்டன் பள்ளு** - அநுபந்தம் ௫.

40. வைத்தியப் பள்ளு

வைத்தியச் செய்திகளைக் கூறும் நூல்; 'ஆண்டே' என்றும், 'பள்ளீரே' என்றும் பாடல்கள் முடிவதால் இப் பெயர் பெற்றது போலும். பின்வரும் பாட்டு ஓர் உதாரணமாகும். (சேண்பகராமன் பள்ளு முகவுரை.)

சீந்திக் காஞ்சொறி வேம்புப் படகம்
சிறந்த முட்டி முத்தமும்
சேரும் இலாமிச்சைக் கோஷ்டம் திப்பிலி
தேக்குடன் கண்டங் காலியும்
ஈந்து சுக்குப் பனிரெண் டும்மிது
எடுத்த அளவு வடிப்பட
இலங்குங் கையுங் கோலுங் காலுடன்
இசைந்த பூத சாரமும்
தீந்த கிழமை திசையு மிரத்தினம்
திவதச தாரம் ஒன்றுடன்
திகழும் ராசீவம் தன்னு டனதிற்
சேர்த்துப் பயத்தை ஊற்றியே
போந்த எரித்துக் குறுகச் சலமும்
பொருந்தும் அரைக்கால் இறக்கியே
பொருந்தச் சுரங்கள் அனைத்தும் கடலிற்
புகுதும் பாரும் பள்ளீரே.

அனுபந்தம் - உ

க. சீகாழிப் பள்ளு

[இராம நாடகம் பாடிய அருணாசலக் கவிராயர் செய்த இந்நூல் இறந்து போயிற்றென்றே கருத வேண்டியிருக்கிறது. இதிலுள்ள ஐந்து பாடல்கள் மட்டும் எனக்கு அவ்வூர் அம்மையாரொருவர் தந்தார்கள். அப்பாடல்கள் பின்வருவனவாகும். பாடல்களின் நடையையும் சுவையையும் கருதும் போது, அவை கிடைக்காமை குறித்து மிக்க வருத்தம் உண்டாகிறது.]

[1]ஆற்று வரவு

பாய்ந்து நெருங்கும் தாழைக் குலத்தைச்
சூழப் புடைத்த நீழலாய்ப்
படர்ந்த சண்பைத் தடத்தையும் அதில்
கிடந்த செம்புக் குடத்தையும்
வாய்ந்த வாரி அளத்தி லும்குவி
களத்தி லுஞ்சிறு குளத்திலும்
வாங்கி எறிந்த பாங்கிப் பரவர்
வலையும் நிலையும் குலையவே
சாய்ந்து டுத்திய நுளைச்சி மாதர்
புடவை யும்பெரும் புடவியும்
தள்ளிக் குமரி தெள்ளித் தெளிந்து
வெள்ளைக் கயல்கள் துள்ளியே
ஆய்ந்தி டும்புகழ் சேர்வ ளத்திடைக்
காழிக் குட்டி முன் வாசலில்
அதிர்மு ரசெனக் கழுமல நதி
அகண்ட கடலிற் புகுந்ததே. க

நடவுக்கு அழைத்தல்

சத்தி யாட அன்பர் பதமும்
பத்தி யாட ஒருபதஞ்
சலியு மாடப் புலியு மாடச்
சகல ருந்துதித் தாடவே
வெற்றி ஆடகச் சபையி லேபதம்
ஒற்றி யாடும் பாதனார்
விமலர் காழிப் பெரிய நாயகர்
கமலப் பண்ணை வயலுளே
சுற்றி வீசும் வாடை யாட
ஆடை யாட மணிமுடித்
தொங்க லாடக் கொங்கை யாடச்
செங்கை யாடக் கோவைசேர்

---

[1]யான் பெற்ற இன்பம் என்ற எனது கட்டுரைத் தொகுதியுள் 'சீகாழிப் பள்ளு' என்ற கட்டுரை பார்க்க.

கத்து வாணகை முத்து மாமுடிக்
கொத்து மாடக் குரவைசேர்
நலத்திற் சேற்றை மிதித்து நாற்றை
நடவே வாரும் பள்ளீரே. உ

நடுகைச் சிந்து

பழுதி லாச்சதுர் வேதமும் படி
தொழுதி டுஞ்சைவ நீதமும்
பதிக்கப் புவியில் உதித்திடும் சிவ
பாதனுர் அருள் போதனுர்
கழுவில் அமணத் திரளை வாரி
ஏற்றி டுந்திரு நீற்றினுர்
கமல வாவிக் கரையில் இருந்து
கதறி யழுத மதலைபால்
மழவி டையில்வந் துமைதி ருமுலைப்
பாலை யருளுஞ் சீலனுர்
வல்லார் காழிப் பெரிய நாயகர்
உள்ளூர் வடக்கு வெளியிலே
மொழிவ ளத்துடைக் கோட்டத்துக் களை
உழுது சமைந்த நாட்டத்துள்
மூக்கி மகள்இ ராக்கியாம் சின்ன
ராக்கி யுங்கடு நோக்கியாய்த்
துழனிக் காரி காத்தியும் அவள்
நாத்தி யும்ஒரு சேர்த்தியாய்ச்
சுருக்கி நடுகு றுக்கிலே படுத்
திருக்கு மோரிட வரப்பிலே
அழுத குழவி இருக்கச்சே முலை
பொழிந்த பாலும் பெருகச்சே
அத்தைக் கண்டு முத்தா னெடுத்தே
அழகி ராக்கி கிட்டப்போய்க்
கொழுவ ரப்பினில் குழந்தைக் கிதமாய்
அழுதி டுஞ்சிறு குழந்தைக்குக்
கொடுகொ டென்றொரு முலையைப் பிடித்தான்
விடுவி டென்றவள் கன்னத்தில் அடித்தாள்

நிழலில் வாவென் றிழுப்பதும் அவள்
அழகு துகிலை அவிழ்ப்பதும் இவள்
நெளிப்பதும் அவன் களிப்பதும் பல்லை
இளிப்பதும் பாரும் பள்ளீரே. க

வெள்ளைச் சடையர் துள்ளும் விடையர்
வெடிகொள் படையர் அடியர்க்கா
விரைந்த தூதர் சிவந்த பாதர்
வேத னுர்க்கருள் போதனுர்
வள்ளை வார்குழல் பெரிய நாயகி
இடத்தி னுர்மணி மிடற்றினுர்
வளருங் காழிப் பெரிய நாயகர்
வளமைப் பண்ணை வயலுளே
குள்ளன் மகள் இ ராமியும் - அவள்
மாமியும் முத்துச் சாமியும்
குலுக்கிச் சிறுக்கி சிலம்பியும் - கலுக்
குள்ளக் குட்டியும் பாடியே
பிள்ளைக் கட்டளை நாற்றை வாங்கிப்
பிடுங்கி யேதனி நடுகையில்
பேச்சி வீட்டுப் பையனும் - சின்ன
நாச்சி வீட்டுத் தையலும்
கள்ளைக் குடித்து வேர்த்ததும் - அவள்
கடைக்கண் ணலே பார்த்ததும்
கண்டு பிறகே தொடர்ந்ததும் - அவள்
அண்டை வயலில் நடந்ததும்
அள்ளல் நீரில் விழுந்ததும் - கலை
உள்ளும் புறமும் நனைந்ததும்
அங்க மெல்லாந் தெரிந்ததும் - பயல்
அதைக்கண் டோடித் திரிந்ததும்
துள்ளு சேறு படிந்ததும் - அதைத்
துடைத்து முத்தம் கொடுத்ததும்
சொட்டால் என்றவள் அடித்ததும் - பயல்
மட்டார் காலைப் பிடித்ததும்

புள்ளிப் புடவை பிழிந்து முலையில்
மெள்ளக் கையை நீட்டியே
புதைப்பதும் அவள் உதைப்பதும் - இவன்
பதைப்பதும் பாரும் பள்ளீரே. ௬

அம்ப ரத்தெழு வேணுவாய் - வரும்
உம்ப ருக்கொரு தா ணு வாய்
அண்டம் அளந்த மாயனுர் - உகிர்
கொண்டு வகிர்ந்த தூயனுர்
செம்பு கலிவெங் குருக ழுமலம்
சண்பை காழி பூந்தராய்
சிரபுரம் தோணி புறவம் கொச்சை
சிறக்கும் வேணு புரத்துடன்
நம்பு பேர்கள் ஆறி ரண்டுடைப்
பிரம புரீச நாதனுர்
நல்லார் காழிப் பெரிய நாயகர்
உள்ளூர் வடக்கு வெளியிலே
சம்பை கோட்டகம் குமரக் கட்டளை
சாரடிப் பாதிரிக் கட்டளை
தருமறு பத்து மூவர் கட்டளை
சம்பந்தக் கட்டளை நடுகையில்—

(இச் செய்யுளின் பிற்பாதி கிடைக்கவில்லை.) ௭

உ. குற்ருலப் பள்ளு

[பின்வரும் மூன்று செய்யுட்களும் நவநீதப் பாட்டியல் முகப்பேடொன்றில் இருந்தன வென்று அப்பாட்டியலைப் பதிப்பித்த ராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ளார்கள். நூல் முழுவதும் இன்று கிடைக்கவில்லை.]

மாட்டு வகை

தாங்குவெண் தலையா னெற்றைக் கொம்பன்முற்
சந்து போனதுஞ் சுந்தர னாலே
ஓங்கு முன்னவன் கட்டி வழக்குரைத்
தோடுங் கால்முறி யாதோவென் றுனே

ஏங்கி ஏய்த்தம ருங்காளை எண்ணி
எருத்துக் காரன் கொண்டானவை சேர
வாங்கு நாளில் நடமாட மாட்டாமல்
வாதக்கால் கொண்டு நிற்குங்கா ணாண்டே. க

பள்ளனைக் காணாது இளைய பள்ளி புலம்பல்

அணைமீதி விரவெல்லாங் கிடந்தான்—விழித்திருப்ப
தல்லாமல் அவனுறங்கு வானோ
கணையேறு பட்டமான் போலே—விடியுமட்டும்
கண்ணுறங்க வில்லையடி யானும்
திணையேறிப் படுத்திருந்த பள்ளன்—இருவிழியும்
தேவரீர் விழிகளுமென் கண்ணும்
இணையேது மில்லாமற் சிவந்து—பள்ளனை நான்
இன்னம்வரக் காண்கிலே னாண்டே. உ

மூத்த பள்ளி முறையீடு

அங்க லாய்த்துநான் பொங்கியிட் டாலும்
அருவ ருத்துத் தெருவி லெறிவான்
இங்கே வந்தாலு மங்கே நினைவாய்
இருப்ப தன்றி விருப்பமு மில்லை
உங்க ளுக்குத் தெரியுமோ குற்றாலத்
துள்ள தெய்வமென் னுள்ள மறியும்
பங்கங் கொள்ளவே கங்கணங் கட்டினான்
பள்ள னுமவன் கள்ளன்கா ணாண்டே. ௩

அனுபந்தம் - ௩

திருக்கோட்டியூர் - திருப்புத்தூர்ப் பள்ளேசல்

ஒரு தனியேட்டில் பின்வரும் பாடல்கள் கிடைத்தன. நூல் முழுமையுமே இவ்வளவுதானா அல்லது இது முழுப் பள்ளுப் பிரபந்தத்தின் இறுதிப் பகுதியா என்பது அறிய முடியவில்லை.

சிந்து

தூற்றுவதும் ஏத்துவதும் கோட்டியூர்ப் பள்ளி—உங்கள்
சொந்தமுத லென்கையிலே தந்ததுண்டோடி
பார்த்தவர்க்கு ஏற்ற வார்த்தை சொல்லுறாயடி—நீ
பண்ணையாரை வைத சேதி சொல்லுவேனடி. க

சொல்லு சொல்லுதிருப் புத்தூர்ப் பள்ளி—நீ
சொன்னதனால் பண்ணையாண்டை என்ன செய்குவார்
நல்லதுதான் இனியறி கோட்டியூர்ப் பள்ளி—பள்ளன்
நாடி என்தன் வீட்டில் வந்த நாளில் சொல்லுறேன். உ

வந்த நாளில் சொல்வதேது புத்தூர்ப்பள்ளி—உன்போல்
வலியத் தொடர்ந்துநான் வந்தேனோ போடி
இந்தப் பேச்சுச் சொல்வதென்ன கோட்டியூர்ப் பள்ளி-உன்போ
லேறுமண் டேறிச்சரடு கட்டிக் கொண்டேனோ.
மண்டேறி வந்தேனோ புத்தூர்ப்பள்ளி—சொந்த
மாமிமக ளென்றென்னை நேமித்துக் கொண்டான். ந

நேமித்தான் தாலிகட்டி கோட்டியூர்ப்பள்ளி— பள்ளன்
நேசமா யென்னூரைத் தேடியே வந்தான்
காமித்தவன் வந்தானோ புத்தூர்ப்பள்ளி—நீயும்
கைமருந்து போட்டணைத்தாய் கண்மாயக் கள்ளி. ச

அடர்ந்தாசு பண்ணுதே கோட்டியூர்ப்பள்ளி—உனைப்போல்
அலைப்பட்டுத் தொல்லைப்பட்டு நடந்தேனோ போடி
நடந்து வந்தா லென்னடி புத்தூர்ப்பள்ளி—சற்றே
நாணம்மான மில்லாத நாயேநீ போடி. ரு

கடந்த வார்த்தை சொல்வதென்ன கோட்டியூர்ப்பள்ளி-பள்ளன்
கண்டுமயல் கொண்டுவெகு காதலாய்க் கொண்டான்
தொடர்ந்துவந்த தென்னபொய்யோ புத்தூர்ப்பள்ளி—வாய்
துடுக்காகப் பேசுகிறாய் தோதகக் கள்ளி. சு

கள்ளி யென்று சொல்வ தென்ன கோட்டியூர்ப்பள்ளி—நீதான்
கடைகெட்ட மூளி நாயே கட்டுணிக் குள்ளி
தள்ளிச் சொல்வ தேதடி புத்தூர்ப்பள்ளி—மூலைச்
சந்தைநாறிக் கந்தல் மூளி தானும் நீயடி. எ

போடியென்றாய் வாடியென்றாய் கோட்டியூர்ப்பள்ளி—உனைப்
போதங்கெட்ட புத்தியோ நான் பூனை வெருகோ [போல்
நாடியென்னை வைததேது புத்தூர்ப்பள்ளி—உங்கள்
நாயன் பட்ட பாட்டை இந்த நாடறியாதோ. அ

அறியாமல் வேதன்தலை யொன்றை யரிந்து
அன்று பித்தன் ஆனானுங்கள் ஆதியல்லோடி
குறிஎய்த குற்றம் வைத்துக் கூனி தூரத்தக்
கொடுங்கானில் போனானுங்கள் கொண்டலல்லோடி. கூ

மெச்சுபுகழ் விசயன்கை வில்லடி பட்டு
வேடனெச்சில் உண்டானுங்கள் ஈசனல்லோடி
கொச்சையாய் மச்சிலேறிச் சிற்றிடைச்சியைக்
கூடியெச்சி லுண்டானுங்கள் கோவிந்தனல்லோடி. க0

மன்றிலாடு மாடெடுத்த தில்லையென்று கையில்
மழுவேந்தி நின்றானுங்கள் வள்ளலல்லோடி
நின்றுகுருந் தேறியாடை கொண்டதில்லை யென்று
நெய்யிலேகை யிட்டானுங்கள் நேமியல்லோடி. கக

மாடிருந்தும் விதையிருந்தும் நினைவறிந் துண்ணாமலே
மண்டைதனில் உண்டானுங்கள் மத்தனல்லோடி
காடிருந்தும் ஊரிருந்தும் நித்திரை செய்யா - தலைந்து
கடலேகெதி யானானுங்கள் கண்ணனல்லோடி. கஉ

தெள்ளுதமிழ் சேர்திருச்செங் காட்டின் தொண்டன்-பெற்ற
பிள்ளையரிந் துண்டானுங்கள் மத்தனல்லோடி
பிள்ளையறுத் தோன் மருகனாகஇருந்தும் - வெகு
பேர்பழியும் கொண்டானுங்கள் காரியல்லோடி. கங

குளிர்பனிக்குங் காற்றுக்கும் ஆற்றாமலே - மத
களிறுரித்துப் போர்த்தானுங்கள் காளனல்லோடி
ஒளிறு மிடையாடை கிடையாம லல்லவோ - வனத்தில்மர
உரிஉடுத்தித் திரிந்தானுங்கள் கரியமாலடி. கச

தப்புரெண்டு பேசுமாருக் கண்டனுக்காக - முன்பு
சண்டனை யுதைத்தகறைக் கண்டனல்லோடி
கற்புவியில் மூன்றடிமண் பிச்சையிடும் வேதன் - தனை
கற்சிறையில் வைத்தானுங்கள் பெம்மானல்லோடி. கரு

பெண்கொடுத்த மாமன்தக்கன் தலையை வெட்டி - அன்று
பெருநெருப்பிலிட்டா னுங்கள் பெம்மானல் லோடி
கண்குளிரும் மனைவியையும் தங்கை தன்னையும்
கனலில் மூழ்கச் செய்தானுங்கள் கண்ணனல்லோடி. கசு
பிட்டு வாணிச் சிக்குமண் வெட்டிச் சுமந்து
பிரம்படி பட்டானுங்கள் பெம்மானல் லோடி
குட்டு மாறக மென்னதிருக் கோட்டியூர்ப் பள்ளி - குசன்
கொல்லுவா னென் றஞ்சிக்கெஞ்சு கொண்டலல்லோடி.
திரிபுர மெரித்ததுங்கள் நாயனென்கிறாய் - அந்தச்
சேவகத்தைக் கேட்கில்நகை செய்வதல் லோடி.
குருகுலத் தைவரையும் நூற்றுவரையும் - வெல்லக் [லோடி.
கொண்டொளித்துக் கொண்டானுங்கள் கொண்டலல்
இப்படியே புத்தூர்ப்பள்ளி கோட்டியூர்ப் பள்ளியும் - கலந்
தேசலிட்டு ஆண்டவரைப் பேசி நிற்கையில்
பிற்பயிரில் சிறந்ததென் கோட்டியூர்ப் பள்ளன் - மந்த
காசம்பண்ணிக் கொண்டுவந்தான் சொந்தப் பள்ளீரே.
ஆண்டை ரெண்டு கட்டலாமோ எக்களிப்பள்ளி - பொறு
ஆனபங்கு உங்களுக்கு நானேநடுவாய்க்
கூண்டு பிரித்துத் தருவேன் சண்டைபண்ணாமல் - ஒன்றாய்க்
கூடியிருந் தேகளித்துக் கூடிச் சுகிப்போம். உ0
என்றுரைக்க ரெண்டு பேரும் தேனும் பாலும்போல்-களங்கம்
இல்லாம லேஉறவு சல்லாபமாய்
ஒன்றுகூடிப் பள்ளனுடன் வாழ்ந்து சுகிப்போம் - நாய
னுண்டெனவே கோட்டிப்பண்ணைத் தொண்டவை
செய்வோம். உக

கலிப்பா

ஆழியுடைப் பூமா னருள் வாழி வான்சொரிந்து
மேழியுழும் பார்வாழி வேத நெறிவாழி
ஊழியுல குள்ளவரை ஓங்குசொக்க னாரணமால்
வாழிதிருக் கோட்டி வைணவரும் வாழியவே. உஉ

மன்னார் மோகனப் பள்ளு

[இதுபற்றிய விரிவான குறிப்பையை முன்னுரையில் 'மோகனப் பள்ளு' என்ற தலைப்பில் காண்க.]

காப்பு

புத்தியும் புத்திக் கேற்ற பொறுமையும் உதவிப் பின்னும்
முத்தியுந் தருமன் னார்மேல் மோகனப் பள்ளுப் பாட
எத்திசை தனிலு மன்பர் ஏதுரைத் தாலும் கேட்டுச்
சித்தமே மகிழ்வார் ராசைச் செங்கம லத்தாய் காப்பாம். க

கூடிய அலையுண் டாய்ச்சி கோல்கொடு அதட்ட வாயை
மூடிய மன்னார் பேரில் மோகனப் பள்ளுப் பாட
சூடிய வெற்றி மாலை துலங்கிடக் கீழை வாயில்
தேடியங் கமர்ந்த ராசை திகழனு மந்தன் காப்பாம். உ

ஆற்று வெள்ளம்

பூவிற் சிறந்த லட்சுமி மார்பர்
புவனம் பதினான் களந்தவர்
பூபாரத்தைத் தீர்த்தவர் அன்பு
புரிந்தே யென்றனைக் காத்தவர்
சேவிக்க வாழ்வு கொடுத்தவர் வாணன்
சிரம்விழ வாளி தொடுத்தவர்
தெட்சணத் துவாரகை பட்சம் வைத்த மன்னர்
சித்த மெச்சும் சோழநாட்டிலே
தாவிப் படரும் முகில்கள் கடல்நீர்
தனைக்கொண்டு குடகினிற் சென்றே
தழைத்த குறிஞ்சி பாலை முல்லை
தருநேர் மருதம் நெய்தலில்
மேவிப் பரந்த காவே ரிக்கரை
வெள்ளப் பெருக்கில் திருக்கையை
வெளிச்சை மருட்டி வெருட்டி யெய்தற
கருட்டிப் பாரடி ள்ளீரே. ௩

மாட்டு வகை

அலைக்க டலிற்கண் வளர்ந்தவர் - மற்
றுலா...ா....டத் தளந்தவர்
ஆவின் பிறகே திரிந்தவர் - ஐவர்
ஏவவே தூது புரிந்தவர்
சிலைக்கை மன்மதன் அயனையும் பெற்ற
செங்கமல வல்லி நாயகர்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்தம் மெச்சும் வயலுளே
பொலிப்பி லடங்கும் மயிலைக்கறுப்பன்
பொலிமூக்கு மட்டை ஒருகொம்பன்
பொங்கு சினத்தா......பவித்திரக்
கொம்ப னுழவுக் கிளையவன்
விலைக்கடங் காத முன்னோரழகன்
வேடிக்கைப் பனங்காய்க் கறுப்பனும்
மிகுத்த மாடெலாம் மகிழ்ந்துதான் பள்ளனும்
...............றன் பள்ளீரே
தினத்தினைத் தினத்தினைத்
தினத்தினைத் தினதினை.

விதை வகை

இண்டா ரணிய மளந்தவர் - புவி
ஈரே ழுருவ வளர்ந்தவர்
இலங்கா புரியை அழித்தவர் வந்த
இரணியன் மார்பைக் கிழித்தவர்
திண்டோள் காவா யழகர் தனிச்
சேலையழகர் திருவழகர்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்தம் வைத்த வயலுளே
[உண்டால்] மணக்குஞ் சம்பாக் கறுப்பன்
ஒழுகு புழுகுச் சம்பானும்
ஓதரிய காடைக் கழுத்தன் கல்லுண்டை
ஒப்பரிய திங்கட் பாலியும்

வண்டாரும் குறுவை..........
கத்தைக் கார்ப சானமும்
வளர்த்துடன் வகை விதையெல்லாம் பள்ளன்
தெளிக்கிறானடி பள்ளீரே. ரு

நடுகைச் சிந்து

சந்ததம்வே யூதும் வாயனார் அ......
..........ன்ச காயனார்
தாதுசேர் கமலக் கண்ணனார் நிறந்
தழைத்த காயாம்பூ வண்ணனார்
செந்திரு வந்துறை நந்தர் முகுந்தர்வை
குந்தர் நிறைந்த.........
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்த மெச்சும் பண்ணை வயலுளே
சுந்தரிமகளைக் கண்ணைக் காட்டி அவள்
தூங்கப் பள்ளணைவாடா என்றாள்
................ாரிடாவென்று
சொல்லாதேநீ என்று நின்றான் – உனக்
கந்தியம் பொழுதாய் நெல்லுவிற்ற காசு
அஞ்சாது தாறே னென்ற ழைத்தான்
......................பள்ளி
நழுவப் பார்க்கிறாள் பள்ளீரே. க

நெஞ்சில் கருணை யுள்ளவி டணனுக்கு
நீடு வாழ்வரம் அளித்தவர்
நெட்டூரர் பாதகர் வஞ்சகர் க[ள்வர்
நீச ரிடமிருந்] தொளித்தவர்
செஞ்சொற் றமிழ்புனை சீதரர் சேவகர்
செண்டலங்காரர் முகில் வண்ணனார்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்தம் மெச்சும் பண்ணை வயலுளே
வஞ்சிக் கிளையவள் தன்செய் நடுகைக்கே
மாமுலையை ஓடிப் பிடித்தான்

வம்பா போடாவென் றின்பமூட்டினவள்
ச[ம்பாக்கோரை] கொண்டடித்தாள் - அதற்
கஞ்சிப் பயப்பட்டுக் கைவாய் புதைத்து
அறியாமற் சொன்னேன் பொறுத்துக்கோ என
அடுத்ததும் [அவள் தடுத்ததும்] பயல்
எடுத்ததும் பாரும் பள்ளீரே. எ

பன்னு தமிழ்க்கு மகிழ்ந்தவர் தம்மைப்
பணியாரை விட்டு நெகிழ்ந்தவர்
பகலை இரவாய்ச் செய்தவர் ஏழு
பருத்த மராமர மெய்தவர்
செந்நெல் நிறைந்த வயலில் முத்தினம்
சிறுசங்கு தவழும் நாட்டினர்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்தம் மெச்சும் பண்ணை வயலுளே
மன்னிமகள் மெத்தப் பிலுக்கியே முலை
துலுக்கியே முத்துக் குலுக்கியே
வசந்தி மகனை நெருக்குவா[ளவன்
மயங்குநெஞ்]சை யுருக்குவாள்
என்னை ஏண்டி நெருக்குவா யென்று
இடிக்கச்சே அவள் அடிக்கச்சே - பள்ளன்
இகழ்ந்ததும் கலை [அவிழ்ந்ததும் மனம்
நெகிழ்ந்ததும்] பாரும் பள்ளீரே. அ

வாலியையோரம்பால் கொன்றவர் கலை
வாரிக் குருந்தேறி நின்றவர்
வடவால் தனிலே துயின்றவர் [அள்ளி
மண்ணை மு]ற்று மயின்றவர்
சேவினைக் கயலைத் துரத்தவே நலிவ
ராவினஞ் செயிக்கு நாட்டினர்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்தம் மெச்சும் பண்ணை வயலுளே
கோவி வந்திடக்குப் பெரியான் சூலி
கொண்டையில் சேற்றை யப்பினான் - நடக்

குனிந்து நின்றவள் நிமிர்ந்தவன் முகம்
நிறைந்திட எட்டித் துப்பினாள் - சின்ன
வேலி மகள் சாலியும் பாற தண்டைக்
காலியும் பள்ளனைப் பிடித்துத்தான் - சேற்றில்
அடித்ததும் சூலி குதித்ததும் சண்டை
கதித்ததும் பாரும் பள்ளீரே. ௬

ஒளிரிரா வணனை வதைத்தவர் முன்னம்
உறுதியாய்ச் சகடு தைத்தவர் - [வஞ்சம்]
கருது பேய்முலை குடித்தவர் என்றும்
ஒருத்திக்கா வில்லை ஒடித்தவர்
தெளிவுறு முந்நூல் மார்பினர் என்று
தேவர் புகழும் திருவினர்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்த மெச்சும் பண்ணை வயலுளே
வளியிருவனுக் கிளைய வள்ளியும்
வரப்ப டிக்கதிர் கிள்ளியும்
வாதக்கால் வழியான் மகளுமாய்க்கூட்டி
வன்னியடிப் பள்ளம் நடுகைக்கே
கிளிமொழி வள்ளி வாய்க்கிழாய்ப் பெற்றான்
கெஞ்சி யவளைச் சருவியே
கிட்டினதும் மெள்ளத் தட்டினதும் அச்சம்
பட்டினதும் பாரும் பள்ளீரே. ௧0

கொத்தார் குழலா ருடனே கூடிக்
கோபால மு[குந்]தாய் வந்தவர்
குலவு முனிசெய் வேள்வி நிறுத்திக்
கோரியவர மீந்தவர்
தித்தா திதாவென் றரி பிட்டாமீதில்
சிலம்பு கொஞ்சிட ஆடுவார்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்தம் மெச்சும் பண்ணை வயலுளே
முத்தான் தஞ்சிக்குக் கொடுக்கச்சே — கொண்டைப்
பெத்தான் வந்து சண்டை தொடுக்கச்சே

மோகனச் சிந்துகள் படித்ததும் பள்ளன்
தாகங்கெடக் கள்ளைக் குடித்ததும்
மற்றாரும் வேண்டேனென் றடர்ந்துதான் பள்ளன்
பித்தாசையாய்ப் பின்னை தொடர்ந்துதான் - கெஞ்சி
வந்தத்தையும் தஞ்சி வந்தத்தையும் கண்சி
வந்தத்தையும் பாரும் பள்ளீரே. கக

ஆனை உயிர்தனைக் காத்தவர் வெங்க
ராவைத் துணித்துவிண் சேர்த்தவர்
ஆயிரம் பிழையும் பொறுத்தவர் தம
தன்பர்செய் பவத்தை யறுத்தவர்
தேனை நெல்வயற் குறைக்கவே - கிடை
தேங்கவே சோழ நாட்டினார்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம் மெச்சும் பண்ணை வயலுளே
தானிக் குடங்கள்ளைக் குடித்ததும் நெட்டைத்
தேனி [கன்னத்தி] லடித்ததும்
சற்பனை செய்யவே தொடுத்ததும் இவன்
கற்பனை என்றுதான் விடுத்ததும்
கூன இருவன் மகளை இன் றந்திக்குள்
கொள்ளுவே னவளைத் தள்ளுவேன் - என்று
குறித்ததும் மூத்தாள் மறித்ததும் கள்ளு
வெறித்ததும் பாரும் பள்ளீரே. கஉ

பாராளும் விசய ராகவ பூபனை
பட்சமுடன் நித்தம் காத்தவர்
பணியு மறுகும மானுந் தரித்த
பரன் பெறுஞ் சாபந் தீர்த்தவர்
தீராத வல்வினை தீர்த்தவர் துரோபதை
செந்துகில் போகாமல் காத்தவர்
தெட்சணத் துவாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்த மெச்சும் பண்ணை வயலுளே
மேரா முலைமுற்று ரெங்கிக்காசை கொண்டு
வெங்கி தனைச்சந்து விடுத்தாள் - மூத்த

வெள்ளையன் தங்கச்சி பெற்றியைத் தன்மனம்
வேண்டாமல் துரும்பு கொடுத்தான் புவிக்
கோராத தோவிது நடவெல்லாம் நட்டு
இருவி வீட்டி லிருக்கச்சே - துயர்
எட்டினதும் மெள்ளக் கிட்டினதுந் தாலி
கட்டினதும் பாரும் பள்ளீரே. கங

அனுபந்தம் - ரு

திருநீலகண்டன் பள்ளு

[பின்வரும் பாடல்கள் திருநீலகண்ட நாயனார் சரித்திரத்தை எளிய முறையில் கூறுவன; கும்மிப்பாட்டு என்பது பொருந்தும். 'பள்ளீரே' என்று ஒவ்வொரு பாட்டும் முடிவதால், பள்ளு என்ற பெயர் வந்ததுபோலும். இதுவும், வைத்தியப்பள்ளு முதலாயினவும், பள்ளு என்ற பெயர் சுமந்த பலவகை நூல்கள் இருந்தன வென்பதைக் காட்டும்.]

திருச்சிற்றம்பலம்

தில்லைச் சிதம்பரந் தன்னில் ஒருநாள்
திருநட்ட மாடுஞ் சிவனுடனே
தேவி சிவகாமி நாயகி யந்தத்
திருநீல பத்தன் நெறி யுரைக்கச்
சொல்லச் செவிதனில் கேட்டான் நாளுஞ்
சோதித்த வன்றனைச் சூதாக்கிச்
சொன்ன மொழிநிலை யாமலெந் நாளுஞ்
சுகத்தினில் வாழ நினைத்தி டென்றார்
கல்லைப் பிசைந்து பெருநா ருரித்துக்
கையால் திரித்துக் கயிறாக்கிக்
காண்டிபந் தன்னைக் குதைபூட்டி நாளுங்
கருத்தாயவ் வானைப் பிறிக்குமந்தோ
அல்லற் பணியும் அழகாகப் பூண்ட
அம்பல வாணர் மிகக் கடிந்து
அன்னங்கள் கேட்க உபாயங்கள் பண்ணி
அறிய வென்றார் பள்ளீரே. க

குங்கணச் சேர்வை விபூதிக் கோயிலும்
காலில் சதங்கையும் மான்மழுவும்
காள கண்டத்திரு மேனியுங் காவும்
காதினில் வெண்குழைக் குண்டலமும்
தங்க ப்ரகாசமுந் திங்களுங் கெங்கையும்
தாபதச் செஞ்சடையு மிதற்கும்
தற்பர ஞன சதாசிவ சங்கரர்
தம்கையில் சங்கும்சே கண்டிகையும்
குங்கும வில்லைத் திருநுதற் பூச்சும்
கூரிய சூலமும் மாத்திரையும்
கொஞ்சு நகைப்பும் அஞ்சனக் காப்பும்
கூட வெம்புலித் தோலுகளும்
செங்கதி ரோனைத் திருவோட தாக்கிச்
செம்பொன் நிழல்பட்டு மேல்போட்டு
செவ்வந்தி மாலை யிடுப்பிலே மாட்டிச்
சிவன் வடிவானார் பள்ளீரே. உ

மெய்ப்பான பத்தன் திருநீலகண்டன் - அவன்
மெய்யுள்ள மான நிலை யறிய
வேஷமுஞ் சங்கம ரூபமுங் கொண்டு
விபூதிக் கோயிலுந் தூளிதமும்
சற்பனை யாகத் தெருவழி வந்திவர்
சந்தோ ஷத்துடன் மனைபுகுந்து
சத்த மொலித்துச் சேகண்டி கொட்டிச்
சதாசிவ சங்கரா செயசெய வென்ன
கற்புள்ள மாது பரிவுட னேயிரு
கண்களி கூரவே தெண்ட னிட்டாள்
கர்த்தனே அத்தனே சித்தனே எங்கள்
கருவூலமே யிங்கே வாருமென்றார்
அற்புத மாகவே ஒருபிடி யன்னம்
அன்புடனே நீரளித்தி ரென்றார்
ஐயர் பழனி புரிமுரு கேசர்
அருள் பெற்று வாழ்வீர் பள்ளீரே. ௩

முற்றம் பெருக்குவள் பன்னீர் தெளிப்பள்
முக்கண்ணற் கன்பாய்ப் பூசை செய்வாள்
முப்பத் திரண்டு வகைக்கறி நெய்பால்
முற்றிலு மங்கை யடுகை செய்வாள்
சற்றே யிதோசிவ பூசை பண்ணிக்கொண்டு
சந்தோ ஷத்துடனே வருகிறேன்நான்
சம்மதித் தேதிரு வோட்டை யிருவரும்
சற்பனை பண்ணாமல் வைத்திரென்றார்
பத்திர மப்பா கப்பரை யீதொரு
பாரமோ யென்று நீ எண்ணாதே
பற்றாத காரியந் தானொரு நேரத்தில்
பாரிய நேரம தாகிவிடும்
குற்றம் வாராது அடியே னிடத்திலே
கோபனை பாவனை பண்ணாதீர்
கொப்பெனை வந்து அமுது கொள்ளும்என்று
கூறிவிட் டாரடி பள்ளீரே. ௪

ஐயர் நடந்து கோயிலிற் செல்ல
அடைக்கலம் வைத்த மடக்கெழும்பி
அந்தரச் சாலையில் வந்து புகுந்[துட]ன்
ஆகாச மாய்நிலை யாகியபின்
பொய்யுரை யாக்கித் திருநீல கண்டனைப்
போதவே யங்கே மனதறிய
பொற்றிரு மாலையின்.......மயுந்தந்து
பிரியா விடையாய் வைக்கவென்று
பையப் பையப் பைய நேர்ப்படப்படப்
பாசாங்கு ஆசார உபசாரமாய்ப்
பண்[புட]னைவந்து பத்தனெங்கே யென்று
பல்லங்கி ராகம் பாடுகின்றார்
மெய்யாகக் கற்புடை மாது எழுந்தவள்
வைத்த திருவோட்டைக் காணாமல்
வேதனை கொண்டு மனங்கலங்கி வரும்
வேளைக்கு இருந்தாள் பள்ளீரே. ௫

செல்லுமோ யின்னு மிரண்டொரு நாழிகை இச்
சேதியி லென்ன தாமதமா
செப்புந் திருநீல பத்தா நமக்குச்
சேணமுந் தரித்திட நேரமில்லை
அல்லவென் றாலினி மேலத் தெருவினில்
அன்புள்ள பத்தன் அமுது சொன்னான்
அதற்கண்டை வீட்டுக் காரன் சறேறஅமு
தாக்கி யிருக்குது வாருமென்றான்
பொல்லாத காளி அகோரி என்பாரி
பிரிந்தரை நாழிகை இருந்தறியாள்
பிள்ளை ரெண்டுண்டு அதிலே ஒருபிள்ளை
போவார் வருவாரை வாய்பார்த் திருக்கும்
தொல்லை கிடக்கு தனேகம் எனக்குத்
தோதகப் பாதகம் பண்ணாதே
தோகையை அழைத்தமு துண்டில்லை யென்று
சொல்லி விடென்றார் பள்ளீரே. கூ

தெள்ளிய பத்தன் திருநீல கண்டனைத்
தேசிக ரன்பு உபாதியுடன்
தேரடியில் பிள்ளை காணுமலே தாயார்
தியங்கி மயங்கி யிருந்ததுபோல்
வெள்ளி மலைக்கு ளிருக்கும் பொருளே
வேதாவே மாலே பராபரனே
வேண்டிக் கொண்டாடியே தாளில் விழுந்தவர்
வேண்டிய பின்சொல்லித் தான்சொல்லியே
அள்ளித் தருகிறேன் செம்பொன்னு கைக்கு
ஐயனே எங்கள் குலதெய்வமே
ஆ.........ச்சில் நூறு பிழையும்
அடியேனைப் பற்றிப் பொறுத்[தருளு]ம்
துள்ளி யெழுந்தவர் கோபித்துக் கொண்டிது
தோஷமோ [நான்செ]சய்த பாவமிதோ
துர்ச்சனன் வீட்டுக்கு அமுதுக்கு வந்து
தொடுத்தோ மென்றாடி பள்ளீரே. எ

பங்கப் படப்படக் கொள்ளாத கோலங்கள்
பண்ணா தவர்கள் பரதவிக்கப்
பத்தன் பிடித்த நினைவறி யாமலே
பாரிய நேரம தாயிருந்து
தங்கப் பசும்பொன் இழைத்தொரு பாத்திரம்
தாறே னடியேன் மனங்கூரத்
தாரத்தை விற்று வெள்ளாட்டியைக் கொள்ளத்
தகுமோ நீர்தான் சொல்லு மென்றான்
தொங்கத் தனம்பண்ணிச் சூது [வாதுகள்] பேசித்
தோரா வழக்குக் கடியுமிட்டு
தோற்பது கொண்டு சபை[பே]சியென்னைத்
தூரத்தி விடவலோ நினைக்கிறாய்
மங்கை பெண்ணு வா[லிப]ம தேவியும் நீயும்
வயது பதினா றாயிடுவாய்
வண்மை யுடனே திரு வோட்டை யெடுத்தோடி
வாருமென் றாரடி பள்ளீரே. ௮

நம்புந் திருநீல பத்தனைச் சோதித்து
நாளும் மகிழ்ந்து மனங் களித்து
நல்ல இளமை நாயனார் குளத்[தில்
நாடிக்குளி ரெண்டு பே]ரு மென்றார்
கும்பிட் டிருவருங் கைதனைக் கோத்துக்
கூசாம லோருடை தாமுடுத்திக்
குற்றமெம் மீதிலே சற்று மில்லையென்று
குளத்திலே மூழ்கி யுரைத்தி டென்றார்
அம்பிட்ட நேர்விழி யாள்சிவ காமி
யாண்டவன் வந்து மொழிந்தாலும்
அந்தப் படிமனம் ஒவ்வாது நீங்கள்
ஆயிரஞ் சொன்னாலு மாகாது
செம்பொற் சிலம்பு கலகலென வெள்ளைச்
சேவின் மேலேறும் வடிவழகன்
தில்லைச் சிற்றம்பல வாணர் சிவபதஞ்
சேர்ப்பமின் றென்றார் பள்ளீரே. ௯

அந்தப் படியே உமக்கு இருவரும்
ஆனை பிடியாட பண்ணுகிறோம்
அன்னஞ் சமைத்து வெகுநேர மாயிற்று. ௯0

(ஏடு முடிந்தது)

பழமொழி அகராதி

[எண் - செய்யுளெண்]

அடிபடி வாழையான குடி ௧௩
அவள் சொன்னால் பாம்பையும் பிடிப்பான் ௮௬
அழியாத காசழியுமோ ௬௪
இரண்டுபடில் யார் பொறுப்பர் ௫௮
உழக்கில் கிழக்கு மேற்கோ ௧௫௫
ஏமமின்றிச் சாமமின்றிப் போவோம் ௩௯
ஒரு பூவில் ஐந்து பூவும் பயிராகும் ௬
காலஞ் செய்வது கோலஞ் செய்யுமோ ௫௯
கொப்பத்தில் ஆனைபட்டாப்போல் அகப்பட்டாய் ௬௮
கொழியலரிசி இட்டாலும் குப்பை கிண்டும் கோழி ௬௪
சகதியிலே கல்லெறிந்த கதை ௬௫
சந்தையில் மாங்கொட்டை ௧௯0
சாலப் பசித்தால் ஆருந் தின்னாததுண்டோ ௧௭௧
சிறியவர் மனப் பெருமை ௫௧
சினத்தாலும் சீரழியச் சொல்லாமோ ௧௭௨
சினத்தாற் சொல்லாத துண்டோ ௧௭௧
சூலானது முதிர்ந்தால் தோன்றுமோ பேறு ௩௭
செவி கண்ணுச்சே ௬௫
தன்வினை தன்னைச் சுற்றும் ௬௮
தீச்சுட்ட தாறும் பழித்திடும் நாச்சுட்ட தேறும் ௬0

தெற்கே நான் பார்த்தால் வடக்கே நீ பார்ப்பாய் கூஅ
தேவரீர் சித்தம் என் பாக்கியம் க0ரு
நீச்சுக்கு மேலே நிலைப்பென்ன பேச்சு கூ0
நெல்லரிசி காணாது கூகூ
பஞ்சில் பற்றும் நெருப்பதுபோல் கூகூ
பத்திலே பதினொன்றாக கங
பழம்பகை இன்னும் பற்ற வையாதே கூகூ
போக்கு நீக்கில்லை மூக்கிலே கோபம் ருகூ
மிஞ்சிப் போனதை ஏன் சொல்லவேணும் கூகூ
மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையையும் காட்டி அஎ
முட்டிவிட்டுக் குனியும் பழங்கதை மூதலிக்கிறாய் க00
மூலை சாய்ந்தால் வயிறல்லோ தாங்கவேணும் க0ச
மூப்பிளமை பார்த்துத் தலை சாய்ப்பார் கஎங
வட்டிலுக்குள் வாய் வைத்ததெல்லாந் துறை க00
வடு வந்தால் மறைக்கப் போமோ கூரு
வரத்தினை மீறும் செலவுக்குத் தரித்திரம் ஏறும் அகூ
வாய்த் தண்ணீர் குடித்தலும் கொப்புளித்தலும் ஆமே கூகூ
விதி பொய்க்குமோ கூஅ
விருந்து விட்டபின் வெட்டினாருண்டோ கூகூ
வீட்டில் எய்தில் காட்டுப் பூனை நாவிக் கிணையாமோ கருகூ
வைதவரை வாழ்த்தினவர் வையகத்துண்டோ கஎ உ

முக்கூடற்பள்ளு நாடகத்தில் கண்ட

இராக தாளக் குறிப்பு

முக்கூடற் பள்ளு நாடகத்தில் பல பாடல்களுக்கு இராக தாளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன (பக்கம் 46). அவற்றைக் கீழே காணலாம்.

இராகம்

பாட்டு கூ.	பந்துவராளி ; அடதாளம்.
அ.	பைரவி ; ரூபகம்.
கங.	காம்போதி ; அடதாளம்.
கஎ-உகூ.	சங்கராபரணம் ; அடதாளம்.
உஅ-ங௰.	ஆனந்தபைரவி ; சம்பை.
ஙஉ.	புன்னாகவராளி ; அடதாளம்.
ஙரு-கூ.	ஆனந்த பைரவி ; அடதாளம்
ஙஅ.	கேதார கௌளம் ; அடதாளம்
ருகூ-சா௰.	காம்போதி ; ஆதிதாளம்.
சாஉ-ரு.	மத்தியமாவதி ; ஆதிதாளம்.
சாஎ-எச.	மோகனம் ; அடதாளம்.
கூச-ரு.	காம்போதி ; அடதாளம்.
க௰ங-கூ.	ஆனந்த பைரவி ; ஆதிதாளம்.
க௰கூ.	கல்யாணி ; ஆதிதாளம்.
ககங.	நாட்டை ; ஆதிதாளம்.
ககஎ-அ.	கேதார கௌளம் ; ஆதிதாளம்.
கஉரு.	மோகனம் ; அடதாளம்.
கஉஅ-கஙச.	கல்யாணி ; அடதாளம்.
கஙஎ-கூ.	ஆனந்த பைரவி ; ஆதிதாளம்.
கசக-அ.	பைரவி ; ரூபகம்.
கருக.	கல்யாணி ; ஆதிதாளம்.
கருஉ-கஎச.	காம்போதி ; ஆதிதாளம்.

அரும்பொருள் தொகுதி

அணிகலன் :— கரும்பொற்காப்பு 6. குழை 8. நீலவடக்கல் 8. கோவைத்தாலி 8. கன்னப்பரிசு 10. சரடு 13. சங்கிலி 130. காப்பு 131.

அடுக்குத் தொடர்கள் :— கிட்டக் கிட்ட 133. குளிரக் குளிர 39. கெட்டி கெட்டி 100, 150. தொழுது தொழுது 33. நன்று நன்று 118. பள்ளார் பள்ளார் என்பார் 15. பொலி பொலி 138. மறுகி மறுகி 132. வட்ட வட்டங்களாய் 125. வாழ்த்தி வாழ்த்தி 33.

அருஞ் சொற்கள் :— அங்கலாய்த்தல் 130. அசுயை 86. இம்மட்டு 151. உட்கை 87. உத்தாரம் 113. உபகாரி 29. ஏய்ப்பு 74. ஒலிப்பு 24. கங்காணம் 139. கச்சற்காய் 63. கடினவுரை 64. கணியான் 88. கத்தர் 91. கருவாடு 89. கலுங்கு 60. கற்ப காலம் 30. காலாவதி 105. குச்சு 63. குட்டை 90, 93. குண்டுணிக்காரி 95. குமுக்கா 32. கொழுந்தி 89, 134. கோப்பு 131. சக்களத்தி 109, 117. சகதி 95. சங்காத்தி 93. சண்ணைக்கிடா 53. சதுரி 118. சவுக்கு 88, 89. சளம் 87. சன்னிதி 30. சன்னை 54. சலுகை 154. சாட்சி 135. சுருக்க 36. சூ 36. சூரியகாந்தி 22. சொக்காரி 62. சொம் 88, 152. சோபனம் 17. தணிப்ப 22. தாமதம் 130. திடக்கம் 129. துக்குணி, தூக்குணி 56. தேவரீர் 92. நிட்டூரம் 149. பச்சேரி 34. பட்டடை 57. பட்டை நாமம் 82. பத்தனர் 16. பதனம் 87, 110. பரமார்த்தி 54. பராக்கு 103. பரிக்க 86. பவுஞ்சு 17. பாச்சக்கால் 134. பாலித்த 31. பிரவர்த்தி 59. பேதலித்து 100. பேதியான் 83. பொல்லாப்பு 124. மாராயம் 18. முகிழ்த்தம் 112–3. மூஞ்சி 150. மூதலி 100, 152. மொண்ணை 53. ராசியம் 95. ராவும் 20. வக்கணை 62. வரத்து 66. வாஞ்சை 97. வாக்குவாதம் 56. வாது 83, விடயம் 128. விரசல் 126. விருது 57. வீம்பு 89.

ஆறு :— சித்திரா நதி 13, 51. சிற்றாறு 51, 134, 144. பொருனை 13, 30, 36, 47, 50, 51, 130.

ஊர் :— ஆசூர் 5, 17, 21, 25, 37. ஆறை 74. இலங்கை 67, 111. உளக்குடி 131. களக்குடி (மேலக்) 131. காவை 28, 29, 70, 139. குருகை 4, 70. குற்றாலம் 51, 109. கூடல் 14.

கொச்சி 8. சாத்தூர் 30. சீவலப்பேரி 29, 88, 92. சீவலமங்கை 18, 22, 26. செஞ்சி 14. செப்பறை 71. தஞ்சை 14. திருப்பதி வழு 139; நூற்றெட்டு 11. தென்கரை 18, 22, 26. தென் மருதூர் 116. தென் முக்கூடல் 140. புலியூர் 33. பேரை 69. மாறனூர் 133. வடகரை 17, 21, 25, 98. வெள்ளூர் 131. மருதூர், முக்கூடல்.

ஏரி :—ஆந்தைக் குளம், சீவலப்பேரி, வாரத்துடையான் ஏரிக் கட்டளை, வீரப் பாண்டியப்பேரி 92. குளம் அஞ்சு 4.

சாதி :—அண்டர் 45. ஆயர் 76. ஆற்றுக் காலாட்டியர் 127. இடையன் 75, 84. எயினர் 42. கம்மியர் 21. களமர் 16. காரைக்காட்டார் 73. குறமோட்டுச் சாதி 40. கோவலர் 45. செட்டி 71, 89. தெய்வ தாசிகள் 68. மள்ளர் 91, 12, 127. மறத்தியர் 42, வேதியர் 113. பள்ளர்.

தாவர வகை :—அவரை 44. அறுகங்கொடி 132. இஞ்சி 26. இருப்பை ஈந்து 42. எள், கடுக்கை 44. கரும்பு26, 46. கள்ளி, கீரை 53. குரவம் 42. குல்லை 44. குளவி 40. கொன்றை 45. சந்தனம் 22. சுரை 53. சூதம் 25. தினை 22. துவரை 44. துளவு 1, 127. தெங்கு 25. தோன்றி 44. நெய்தல் 48. பங்கயம் 26. பருத்தி 53. பலா 25. பாலை 42. புன்னை 48. பூகம் 25. பூவை 44. மஞ்சள் 8,26. மரவம் 42. மராமரம் 110. மருதம் 46. மவ்வல் 44. மா 53, 160. மாதுளை 25. முல்லை 44. வாழை 25, 46. வெதிர் 42.

திருநாள் :—ஆடித் திருநாள் 142. பங்குனித் திருநாள் 143.

தெய்வம் :—இந்திரன், இராமன், இலக்குமி, உடையாரையர், உமாதேவி, கண்ணன், கலைமின், சக்கரத்தாழ்வார், சாத்தா, சிவபெருமான், சுக்கிரத்தேவர், சேனை முதலிகள், திருமால், துர்க்கை, பிரமன், புலியூருடையார், பூலாவுடையார், மருதீசர், முருகன், வடக்குவாய்ச் செல்வி, வருணன்.

நாடு :—ஆசூர் நாடு 5. ஆசூர் வடகரை நாடு 17, 21, 25 ஈழம் 35. சீவல நாடு 5. சீவல மங்கைத் தென்கரை நாடு 18, 22, 26. மலையாள நாடு 35.

நிலப்பெயர் - பொது :—கட்டளை, குண்டு, குளம், சுற்று, தடி, திட்டு, திருத்து, திருவிடையாட்டம், பகுதி, பற்று, புரவு, மடை.

நிலப்பெயர் - சிறப்பு :—அழகராச்சிப்படை, ஆந்தைக்குளம், கழை பத்தித்தடி, குத்துக்கல், குளங்கல் மடை, குளத்துப் பற்று, கேசவன் திருத்து, கோரைக் குண்டோடை, சன்னே வெட்டியான் வாய்க்கால் போக்கு, சுமைதாங்கி வட்டம், தோளி கிற்குந் துறைச்சுற்று, நயினுத்தையார் திருத்து, நாச்சியார் திருவிடையாட்டம், நாற்றுப்புரவு, முத்தன் பகுதி, வன்னியடித்திட்டு, வாரத்துடையான் ஏரிக் கட்டளே, வீரப்பாண்டியப்பேரிப் பாய்ச்சல், திருவிளையாட்டுப் புரவு 92.

நெல் வகை :—அரிக்கிராவி 108, இரங்கல் மீட்டான் 108. இராசவாணன் 70. கதலி வாழை 92. கத்தூரிவாணன் 108. கருங்குறுவை, கருஞ்சூரை, கல்லுண்டை 108. காடைக் கழுத்தன் 108. குலைவாழை 69. குறுவை 132. சம்பா 108, 132, 142. சாலி 139. சித்திரக்காலி, சீரகச் சம்பா, சிறைமீட்டான், செஞ்சம்பா 108. செந்தாழை 143. செந்நெல் 22. 26, 139. சொரிகுரும்பை 68. திருமங்கையாழ்வான் 68. நெடுமூக்கன் 108. பாற்சடுக்கன் 69, 108. பத்தன் 108. புனுகுச்சமபா 108. பூஞ்சாலி 30. பூம்பாளை 68, 108, 147. பெருவெள்ளம் 69. பொற்பாளை 108. மச்சு முறித்தான் 68. மணல்வாரி 68, 108. மலைமுண்டன் 108, 146. முத்து விளங்கி 108. முத்துவெள்ளை 145. மூங்கிற் சம்பா, வாலான், வெள்ளை 108.

பள்ளர் பெயர் :—அரியான், அருகன் 114. இருவக் குடும்பன், ஈச்சக் குடும்பன் 134. உடையான், கங்கன், கட்டைச் சங்கன், 114. கட்டை முண்டன் 145. கண்டன், கப்புக்காலன், கலியன், கறுத்த மூண்டன், காத்தன், கூத்தன், கொன்னைத்தாண்டி, கோரைப் பூவன், சடையான், சங்கன் 114. சருவக் குடும்பன், சாத்தான், சிங்கன் 114. சின்னத்திருவன் 143. செங்கான் 96. தாடிப் பிச்சன் 142. நெட்டையன் 134. பச்சை மூவான் 146. புங்கன் புலியன், பூவான் 114. பெரியான் 96, 114, 131. பெற்றுக் குடும்பன் 144. பொத்தாணி 133. போத்தன் 114. மாடன் 134. மூத்தக்குடும்பன் 133. மொட்டையன் 134. மொண்டிப் பொதுவன் 147 வயித்தி, வெருகன், வேலான் 114.

பள்ளியர் :—அங்காளி, அணைஞ்சி, அம்மச்சி 126. அரியாள் 130. அருக்கி 126, 130. அழகி, அன்னம், ஆலி 126. இருவி 126. உடைச்சி 126, 131. எல்லி, எழுவி 128. கட்டைப்பெரியாள் 130 கரும்பி, கலிச்சி, கள்ளி 126. கறுப்பி 133. கன்னி 126 காக்கி133.

அருஞ்சொற் அகராதி

[எண் - செய்யுளெண்]

செய்யுள் முதற் குறிப்பகராதி

[எண் - செய்யுளெண்]

மு. அருணாசலம்

எழுதிய நூல்கள்

தோட்டவேலை வரிசை

1. பழத் தோட்டம் ... ரூ. 10 0

[தோட்டக் கலை, பழத்தோட்டம், கன்று, ஒட்டு முறைகள், எருவிடுதல்; வாழை, மா, தென்னை, நாரத்தை, மற்றப் பழமரங்கள், திராட்சை; நோய், விற்பனை முறை, வற்றல் முறைகள், உணவுச் சத்து, கலைச்சொற்கள் முதலான விஷயங்கள் கொண்டது. 648 பக்கம். 75 படங்கள்.]

இந்திய கவர்னர் ஜெனரலான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் அவர்கள் இப்புத்தகத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்: "மகிழ்ச்சியுடன் படித்தேன். நல்ல புஸ்தகம். தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும்."

2. வாழைத் தோட்டம் ... ரூ. 1 12

கலிக்கா 2 4

[மண் சாரம், கன்று, எருவிடுதல், காய்ப்பு, 25 வாழை வகைகள், உணவுச் சத்து, வாழைநார்த் தொழில் முதலியன விரிவாய்க் கூறும் நூல். 116 பக்கம், கையால் செய்த காகிதம்.]

"வாழையின் என்சைக்ளோபீடியா என்று கூறலாம். பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்தால் பொது அறிவு வளர உபகாரமாயிருக்கும். ஒவ்வொரு விவசாயியும் கட்டாயம் படித்தல் வேண்டும்"—அகில இந்திய ரேடியோ, திரிசிராப்பள்ளி.

3. காய்கறித் தோட்டம் ... ரூ. 5 0

[தோட்ட அமைப்பு, விதைப்பு, நீர்ப்பாசனம், எரு, களை, பல இனக் காய்கறிப் பயிர்கள், கொடி, கிழங்கு, கீரை, சீமைக் காய்கறி, நோய், உணவுச் சத்து, கலைச் சொற்கள் முதலிய பகுதிகள் அடங்கியது. 2-ஆம் பதிப்பு, 244 பக்கம், 50 படங்கள்.]

"இதில் ஒரு தாவர சாஸ்திரியின் விஸ்தரிப்பும், ரசாயன சாஸ்திரியின் பாகுபாடும், வியாபாரியின் லாப நஷ்ட நிதானமும், விவசாயியின் முதிர்ந்த அனுபவமும், உணவுச் சத்து நிபுணரின் சிபாரிசும், வைத்தியனின் சிகிச்சை முறையும் காணப்படுகின்றன.

" சித்திர விளக்கங்களுடன் சோபிக்கும் இப்புத்தகத்தை இக் கலையில் சிரத்தை கொண்ட ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற முடியும். சிரத்தையில்லாதவர்களும் இதைப் படித்த பின்பாவது தோட்ட வேலையை இழிவாகக் கருதாமல் அதை ஒரு கலையாகப் பயின்று வளர்க்கக்கூடும் "—தினமணி 3-8-1945.

"This excellent book on vegetable gardening supplies a long felt want. It is written in simple style and tells an amateur in some detail all about vegetable culture * * * " - K. S. Gopalaswamiengar in the *Hindu*, 27-1-1946.

விஞ்ஞானம்

4. உலோகங்களும் நாமும் ... ரூ. 5 0

[உலோகக் கலையும் தொழிலும் பற்றித் தமிழில் வெளிவந்துள்ள ஒரே விஞ்ஞான நூல், 40 உலோகங்களைப் பற்றிய விளக்கமான செய்திகள், உலோகம் எடுக்கும் விதம், உபயோகம், தொழில் நுட்பம், எஃகுத் தொழில் பற்றிய விரிவான விளக்கம், கலப்பு லோகம், வார்ப்பு இணைப்பு முறைகள், பொடிவேலை, இந்தியச் சுரங்கச் செல்வம், கலைச் சொற்கள் முதலியன விரிவாய்க் கூறுவது. 292 பக்கம். அனேக படங்கள்.]

" சாதாரணமாய்ப் படிக்கத் தெரிந்தோருக்குக் கூட நன்றாக விளங்கும்படி ஆசிரியர் தெளிவாய் எழுதி யிருக்கிறார். பொது அறிவை விருத்தி செய்துகொள்வதற்காகத் தமிழர் படிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று "—தினமணி 11-10-1947.

"This maiden attempt in Tamil on metals and their utilisation is to be welcomed in these days when the lay public of India have begun to take a keen interest in the mineral resources of the land, their proper utilisation and devolopment. It has helped to fill a longfelt want for a book on this subject for the particular use of the Tamil knowing industrialists and financiers. The author and the publishers have to be congratulated on their pioneer effort in bringing out this useful compilation. * * * " - *Triveni* for November 1948.

5. இரசாயனமும் நாமும் ... (அச்சில்)

[இரசாயனமும் மக்கள் வாழ்க்கையின் வெவ்வேறு துறைகளும் பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுதி.]

மொழி பெயர்ப்பு

6. உழைப்பின் தத்துவம் ... ரூ. 1 4

[ஜே. ஸி. குமரப்பா எழுதியது; உழைப்பின் தத்துவம், முன்னேற்றத்தின் தத்துவம், காந்தியப் பொருளாதாரம் என்ற மூன்று அரிய கட்டுரைகள் கொண்டது.]

7. கிராம நிர்மாணத் திட்டம் ரூ. 0 8

[ஜே. ஸி. குமரப்பா எழுதியது. தமிழில் சென்னை அரசாங்கத்தார் வெளியிட்டது.]

8. சுயராஜ்ய சாஸ்திரம் .... ரூ. 2 0

[விநோபா பாவே எழுதியது. புதுமைப் பதிப்பக வெளியீடு.]

சமூகம்

9. உணவுப் பஞ்சம் ... ரூ. 1 8

[1945 இல் தமிழ் நாட்டில் உணவுப் பஞ்சம் வருமென்றிருந்த அச்சத்தை வைத்தெழுதிய சிறுபுத்தகம். பஞ்சத்தின் காரணங்கள், உணவுப்பொருள் நாசம், அரசியலும் உணவும், அட்வைசர் ராஜ்யம், நெல்விலை, நீர்வசதி, சாகுபடிச்செலவு, உழவு மாட்டுப் பாதுகாப்பு, கைக்குத்தல் அரிசி, உற்பத்திப் பெருக்கம், நம் கடமை, ஆடு மாடுகளின் தீனிப் பஞ்சம், பசு பாலனமும் பால் பெருக்கமும் என்ற பொருள்களை நுணுகி ஆராய்வது. கருத்து நிறைந்த நூல். 120 பக்கம்.]

10. ஆதாரக்கல்வி என்றால் என்ன? ரூ. 0 6

[வர்தாக் கல்வி என்றும் காந்தியக் கல்வி என்றும் சொல்கிற கல்வி முறையின் தத்துவத்தைச் சுருக்கிக் கூறுவது.]

11 ஏறிது வந்தோர் கல்வி .... **(அச்சில்)**

[எழுத்துப் படிப்புக் கல்வியாகாது என்று காந்தியடிகள் சொல்வார். முதியோர் கல்வி என்று சொல்கிற இக் கல்வியின் தத்துவம் கல்வி வேலை முறை முதலியவற்றைச் சமூக சாஸ்திர ரீதியாக விளக்குவது.]

இலக்கியப் பதிப்பு

12. அம்பிகாபதி கோவை .... ரூ. 4 0

[569 செய்யுட்களுடைய பழந்தமிழ் நூல். மிக விரிந்த ஆராய்ச்சி முன்னுரை முதலியவற்றுடன். 336 பக்கம்]

13. முக்கூடற் பள்ளு ... ரூ. 2 4
கலிக்கா 3 0

[2ஆம் பதிப்பு. திருகோட்டியூர்ப் பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, திருநீலகண்டன் பள்ளு முதலியனவும் சேர்ந்தது. 200 பக்கம்.]

முன்னுரை, பள்ளுப் பிரபந்தத்தைப் பற்றி அனேக விஷயங்களை மிச்சமே இல்லை என்று சொல்லும்படி விளக்குகிறது * * * அனேக பாடல்கள் வாய்ப்பாய் அமைந்திருக்கின்றன. நாம் நன்றாய் அனுபவிக்க வேண்டிய பாடல்கள் ''–டி. கே. சிதம்பரநாத முதலியார்.

14. திருமலை முருகன் பள்ளு ... ரூ. 2 0

[அழகான 182 பாடல் கொண்ட பழந்தமிழ் நூல். குறிப்புரையுடன், 152 பக்கம்.]

15. திரு ஆனைக்காவுலா ... ரூ. 2 8

[காளமேகப் புலவர் பாடியது. விரிவான ஆராய்ச்சி முன்னுரை முதலியவற்றுடன்.]

16. சிதம்பரக் குறவஞ்சி (அச்சில்) ரூ. 0 12

[3, 4, 9, 14 எண்ணுள்ளவை சக்தி வெளியீடு.]

கிடைக்குமிடம் :

ஆசிரியர்,
கீழமூங்கிலடி
சிதம்பரம்

தமிழ் நூலகம்
3, சாம்பசிவம் தெரு
தியாகராயநகர்
சென்னை 17.